வெகுஜன அரசியல் மாத இதழ்

Registered as a Newspaper in Sri Lanka

# புதிய நீதி

முரசம் 02
முழக்கம் 05
விலை ரூபா.30
ஜூலை-ஒகஸ்ட் 2013

පුදිය නීදි
PUTHIYA NEETHI



## வேண்டாத விருந்தாளியா? காக்கும் கடவுளரா?

திருமதி நவநீதம்பிள்ளை ஒரு வேண்டாத விருந்தாளி என்கின்ற விதமாகவே கடும் போக்கான பேரினவாதிகள் மட்டுமன்றி அமைச்சர்கள் உட்பட ஆளும் கட்சி பிரமுகர்களும், பிரதான சிங்கள, ஆங்கில நாளேடுகளும் அவரை சீண்டுகின்ற விதமாக கருத்துக்களைக் கூறி வருகின்றன. ஆயினும் அவர் அவை பற்றி தனது சினத்தை வெளிப்டுத்தி தன்னைப் பலவீனப்படுத்தவில்லை. அதுபோலவே தமிழர் மத்தியில் தமிழ்த் தலைமைகளும், நாளேடுகளும் கிளப்பியுள்ள கரைபுரளும் உற்சாகமும் அவரை நிதானம் இழக்கச் செய்ய போவதில்லை.

அவருடைய வருகையின் நோக்கம் முதலில் இருந்து எதையும் விசாரிப்பது அல்ல. ஏலவே அறிந்த அல்லது எட்டக்கூடிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும் தெளிவுப்படுத்துவதற்கும் அப்பால் அவர் விரும்பினாலும் அவரால் எதையும் செய்ய இயலாது. ஏலவே ஐ.நா. மனித உரிமைகள் கழகத்திற்கு அவர் கூறியவற்றிற்கும் மேலாக இனி வரவுள்ள தனது அறிக்கையில் புதிதாகச் சொல்வதானால் அண்மைக்கால அரச அடாவடித்தனங்களைப் பற்றி ஓரளவு சொல்லலாம். அரசாங்கம் கண்துடைப்பாக செய்து வருகின்ற சிலக் காரியங்களைப் பற்றி சொல்லலாம். எனினும் அடிப்படையில் எதுவும் குறிப்பிடத்தக்க அளவு மாறவில்லை.

அவர் ஒரு தென்னாபிரிக்க தமிழ் வம்சாவழியினர் என்பதைத் தமிழ் ஊடகங்கள் பெரிதுபடுத்துவது போல சிங்கள, ஆங்கில ஊடகங்களும் பெரிதுப்படுத்துகின்றன. அவர் தனது நடுநிலைமையை நழுவவிடுவதாகக் குற்றஞ்சாட்ட அந்த அடையாளம் உதவும். ஆனால் அதற்கு இடம் வைக்கும் முறையில் அவர் செயற்படமாட்டார். நம் முன்னால் உள்ள முக்கிய கேள்வி, நவநீதம் பிள்ளையின் முடிவுகள் எப்படி அமையும் என்பதல்ல. அவை எப்படி அமைந்தாலும் அது எப்போது, எப்படி, எவரால், எதற்காகப் பயன்படும் என்பதேயாகும்.

தருஷ்மன் குழவினர் முன்பு வழங்கிய அறிக்கை உட்பட பல்வேறு தகவல்கள் ஐ.நா மனித உரிமை கழகத்திற்கும், ஐ.நா. சபைக்கும், மேற்குலகும் தெரிந்தவை. எனினும் அவற்றின் அடிப்படையில் 'சர்வதேச சமூகம்' செய்தது என்ன? மனித உரிமைகள் பற்றியும், போர்க் குற்ற விசாரணைகள் பற்றியும் பேசப்படுவது ஒடுக்கப்பட்டு பாதிக்கப்பட்டோரின் மீட்சிக்காக அல்ல என்பது நமக்கு இதுவரையாவது விளங்கியிருக்க வேண்டும். அவை மேற்குலகு தாம் விரும்பாதோரைத் தண்டிக்கவும் தமக்குப் பணியாதோரைப் பணிய வைக்கவும் பயன்படுத்துகின்ற கருவிகள் மட்டுமே.

நவநீதம்பிள்ளையின் வருகையை இலங்கை அரசாங்கம் ஏற்றமை ஒரு இராஜதந்திர தோல்வியேயாகும். அதற்கு உரிமைகோரி அதனை தமது சாதனையாகக் காட்ட புலம்பெயர்ந்த தமிழ்ப் பிரமுகர்கள் முயலுகின்றனர். அதற்கு ஒத்தூத உள்நாட்டிலும் சில 'ஆய்வாளர்கள்' இருக்கின்றார்கள். இலங்கை அரசாங்கத்தின் மீது இருந்து வந்த நெருக்குவாரங்கள் போர் முடிந்த பின் வலுத்துள்ளன. அவை தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கானவை அல்ல என நாம் மறத்தலாகாது. நவநீதம் பிள்ளையின் வருகையை அரசாங்கமும், எதிர் கட்சிகளும், தமிழ்த் தலைமைகளும் பலவேறு

கடைசி பக்.16>>

படுக்கை அறையை உளவு பார்க்கும் பரதேசிகள் 14



கூடங்குளம் தமிழ்த் தேசியவாதிகள் மௌனம் 11



நான் சர்வாதிகாரி அல்ல! 03



# தேர்தலுக்குள் தீர்வுகள் இல்லை!

வடக்கு, வடமேல், மத்திய மாகாண சபைகளுக்கு எதிர்வரும் செப்ரம்பர் 21ம் திகதி தேர்தல் நடைபெற உள்ளன. இவற்றில் வடமாகாண சபைக்கான தேர்தல் இருபத்தைந்து வருடங்களுக்குப்பின் பேரினவாத ஆட்சி அதிகார ஜனநாயக அகராதிப்படி நடைபெறுகிறது. அதேவேளை ஏனைய இரண்டு மாகாணசபைகளுக்கான தேர்தல் உரிய காலம் வருவதற்கு எட்டு மாதங்கள் முன்பாகவே நடாத்தப்படுகிறது. இவற்றையும் விடக் குறிப்பான விடயம் என்னவெனில், அதிகாரப் பரவலாக்கமோ அல்லது அதிகாரப் பகிர்வோ பெற்றிராத சபையாக மட்டுமன்றி, ஏற்கனவே அர்ப்பசொற்பமாக இருந்த சில கூறுகளைக்கூட 'திவிநெகும' சட்டத்தின் மூலம் பிடுங்கிக் கொண்ட நிலையிலே மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படுகிறது. பெரும் செலவைக் கொண்டுள்ள ஆனால் பலாபலன்கள் எதுவும் தராத மாகாணசபைகள் 'வெள்ளை யானை' போன்று இருந்து வருகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத் தேர்தல் என்பது முற்றிலும் ஏமாற்றமாக, மோசடியாக, பொய்த்தனமானவையாக இருந்து வரும் சூழலிலேயே சுமார் இரண்டு கோடி ரூபா உத்தேசச் செலவில் இத்தேர்தல் நடாத்தப்படுகிறது. இம் மூன்று தேர்தல்களிலும் வடமாகாணசபைத் தேர்தல் அதிக கவனத்தைப் பெறுகிறது. ஏனெனில் வடமாகாணத்தில் ஏகப் பெரும்பான்மையாகத் தமிழ் மக்களும் குறிப்பிடத்தக்க தொகையினராக முஸ்லீம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். எனவே பெயரளவில் தானும் வடக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களுக்குச் சென்றடைவதை அரசாங்கம் அறவே விரும்பவில்லை. கிழக்கில் இரண்டாவது தடவையும் மாகாணசபையினை அரசாங்கத்தரப்பே கைகளில் வைத்திருக்கிறது. அதேபோன்று வடக்கின் யாழ் மாநகரசபையினையும் தமது பேரினவாதப் பிடியில் வைத்திருக்கிறது. அங்கு இடம் பெறவேண்டிய தேர்தல்

பக்.02>>

சுத்தமான குடிநீர் கேட்டு போராடும் வெலிவேரிய மக்களும் போராட்டத்தை அடக்க நிற்கும் படையினரும் பொலிஸாரும்



## வாக்கு வங்கிக்காக மக்களை மோதவிடும் இ.தொ.கா-தொ.தே.ச

### ஆதிக்க இருப்புக்காகவும் மோதல்களையும் வன்முறைகளையும் உருவாக்க முன்னிற்கும் சக்திகளுக்கு எதிராக மலையக மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம்

மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் என்பவற்றின் தலைமைகளுக்கிடையிலான போட்டியும் மோதலும் அவர்களது தொழிற்சங்க அரசியல் நலன்களுக்கும் ஆதிக்க இருப்பிற்கும் உரியதே அன்றி மலையக மக்களின் நலன்களுக்கோ தேவைகளுக்கோ தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கானதோ அல்ல. அண்மையில் கொட்டகலை, அட்டன், பொகவந்தலாவ போன்ற இடங்களில் இரு தரப்பினரிடையே இடம்பெற்ற மோதல்களும் வன்முறைப் பிரயோகங்களும் தோட்டங்களுக்கும் தொழிலாளர்கள் மத்திக்கு எடுத்துச் செல்லப்படக்கூடாத ஒன்றாகும். மலையக மக்களைப் பிரித்து மோதவைக்கும் மேற்படி தாக்குதல்களையும் வன்முறைச் சம்பவங்களையும் எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. மலையக மக்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் மோதவிட்டு பிரித்துவைப்பதன் மூலம் தத்தமது தொழிற்சங்க அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த நிற்கும் எந்தவொரு சக்திக்கும் மலையக மக்கள் ஆதரவு வழங்காதிருத்தல் அவசியமானதாகும். இவ்வாறு புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இராகலை வெ. மகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பக்.02>>

# பு.ஜ.மா.லெ. கட்சி தேர்தலில் பங்குகொள்ளவில்லை

இன்று நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் மோசமடைந்து உச்சநிலை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கின்றன. பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்குத் தொடர்ந்தும் தீர்வு மறுக்கப்பட்டு வருகின்றது. இவற்றால் அனைத்து தரப்பு மக்களும் அதிருப்தி விரக்தி வெறுப்புக் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். இவற்றுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் மக்களின் கவனத்தை திசை திருப்பி ஏமாற்றவே ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியானது அதிகாரம், பணம், பேரினவாதம் என்பவற்றை முன்வைத்து தேர்தல்களை அவ்வப்போது நடாத்தி வருகின்றது. அதன் மூலம் தமது தரகு முதலாளித்துவ, பேரினவாத, சர்வாதிகார, பாசிஸ ஆட்சியின் இருப்பை உறுதி செய்து வருகின்றது. அதற்கு வலுச் சேர்க்கவே மூன்று மாகாண சபைத் தேர்தல்களை ஆட்சியாளர்கள் நடாத்துகின்றனர்.

குறிப்பாக வடக்கில் ஜனநாயகமும், இயல்பு நிலையும், சிவில் நிர்வாகமும் இன்றி சகலவற்றையும் ராணுவ நிர்வாகமே தீர்மானித்து வருகின்றது. அதே வேளை மலையகத்தில் மாகாண சபையால் தோட்டங்களில் வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித பயனும் சென்றடைவதில்லை. குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைக்கூட மாகாண சபைகள் நிறைவேற்றுவதில்லை. இந்நிலையில் அரசாங்கக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும், தமிழ் முஸ்லிம் மலையகத் தரப்புக் கட்சிகளும் தமக்கும் தம்மவர்களுக்கும் மாகாண சபைகளில் பதவிகள் பெற்றுக்கொடுத்து சலுகைகளும் சுகங்களும் பெறவே இத் தேர்தல்களில் மும்மரம் காட்டி நிற்கின்றனர்.

இத்தகைய மக்கள் விரோதச் சூழலில் எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் பங்குகொள்ளவதில்லையெனத் தீர்மானித்துள்ளது என்ற மேற்படி கட்சியின் தீர்மானத்தை ஜூலை 28 ஞாயிற்றுக் கிழமையன்று மாலை கொழும்பில் இடம் பெற்ற புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி யின் 35வது ஆண்டு விழாக் கூட்டத்தில் சிறப்புரையாற்றும் போது கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் ஆண்டு விழாக் கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டின் பொருளாதாரம் அழிவுகரமான பாதையிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பல்தேசிய-பெருவணிக நிறுவனங்களுக்கு நாட்டின் வளங்களும், நிலங்களும் தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. உற்பத்திப் பொருளாதாரம் குற்றுயிராக்கப்பட்டு இறக்குமதி நுகர்வுப் பொருளாதாரமே முன்நிலையில் இருந்து வருகிறது. இவை தரகு முதலாளித்துவத்தின் கீழான தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதலின் விளைவுகளேயாகும். இவற்றால் அனைத்து அன்றாட உணவுப் பொருட்களும் ஏனைய பாவனைப் பொருட்களும் நாளாந்தம் விலை உயர்வுகளுக்கு உள்ளாகி வருகின்றன. இதனால் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தாங்க முடியாத பொருளாதார சுமைகளால் மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றனர்.

அதேவேளை தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் காணப்படாத நிலையில் பேரினவாத நிகழ்ச்சி நிரலே முன்னெடுக்கப்படுகின்றது. அதனை வைத்தே ஆட்சி அதிகார நிலைப்பு நீடிக்கப்படுகிறது. பதினெட்டாவது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய ராஜபக்ஷ சகோதர ஆட்சியினர் இப்போது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாதொழிக்க முற்பட்டுள்ளனர். இது முற்றிலும் ஜனநாயக விரோத, பாசிச, சர்வாதிகாரப் போக்கின் தொடர்ச்சியேயாகும். நாட்டு மக்களை இன, மத, மொழி, பிரதேச அடிப்படைகளில் பிரித்து மோதல்களை உருவாக்கி உழைக்கும் மக்களின் முதுகுகளில் சவாரி செய்வதன் ஊடாக தரகு முதலாளித்துவ, பேரினவாத ஆளும் வர்கத்தினர் தமது ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்து வந்துள்ளனர்.

1977ல் ஜே. ஆர் தொடக்கி வைத்த இப்பயணத்தை எவ்வித மாற்றமும் இன்றி இன்று மகிந்த ராஜபக்ஷவும் சகோதரர்களும் தமது குடும்ப சர்வாதிகாரத்தின் மூலம் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை மறுத்து வர்க்க ரீதியில் ஒடுக்கி வரும் அதேவேளை தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மீதான இன ஒடுக்குமுறையினை கொடூரமாக முன்னெடுத்து வருவது இன்றைய ஆட்சியின் பிரதானப் போக்காகும். ஆனால் அதனை எதிர்கொள்ளக் கூடிய கொள்கையும், வேலைத்திட்டமும் தமிழ் தரப்பு கட்சிகளிடமோ முஸ்லிம் மலையக தமிழ்த் தலைமைகள் என் போரிடமோ இல்லாத நிலையே தொடர்கின்றது.

• • •



# தோழர் சுகேசனின் விடுதலையை ஆவலோடு எதிர்பார்க்கும் புதிய நீதி

கடந்த ஆறரை வருடங்களாக எவ்வித குற்றச்சாட்டும் விசரணையும் இன்றி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருந்துவந்த புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் முன்னிலைத் தோழர் எஸ். சுகேசனன் எதிர்வரும் செப்டெம்பர் 3ம் திகதி ஒரு வருடப் புணர்வாழ்வு முடிவுற்று விடுதலை செய்யப்பட உள்ளார். 2007 பெப்ரவரி மாதத்தில் கைது செய்யப்பட்ட கட்சியின் ஐந்து மலையகத் தோழர்களில் கடைசியாக விடுவிக்கப்பட இருக்கும் தோழர் சுகேசனனின் விடுதலையை புதிய நீதி ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது.

அதேபோல் இதுவரை எவ்வித விசாரணை இன்றியும், குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என் புதிய நீதி வலியுறுத்துகிறது. மேலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அரசியல் போராட்டங்கள் மேலும் வலுவுடன் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட புதிய நீதி விரும்புகின்றது.

தோழர் சுகேசனன் உட்பட ஏனையக் கட்சி தோழர்களின் விடுதலையும் ஏலவே விடுதலை செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட அரசியல் போராட்டமே காரணமாய் அமைந்தது என்பது நினைவிற்கொள்ளப்பட வேண்டும்.

• • •

## 1>> அரசாங்கம் எத்திசையில்.....

மேலும் அவ் அறிக்கையில், மத்திய மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற இருக்கும் சூழலில் இ.தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராசதுரை அதிலிருந்து விலகி தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்துகொண்ட நிலையில் ஏற்பட்ட முறுகல் சூழலிலேயே கொட்டகலை தொடங்கி பொகவந்தலாவை வரை இருதரப்பிலும் வன்முறைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றின் பின்னால் தொழிற்சங்க அரசியல் நலன் சார்ந்த இருப்பும், வாக்கு வங்கி விரிவாக்கமுமே உள்ளன. இ.தொ.காவிலிருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர் பெ.இராசதுரை அதன் குடும்ப அரசியல், தொழிற்சங்க அரசியலை விமர்சனம் செய்துகொண்டு மற்றொரு வகையான தொழிற்சங்க ஆதிக்கத்தை நிலைநிறுத்த முன்னிற்கும் தொ.தே. சங்கத்தில் இணைந்திருப்பது மலையக மக்களுக்கோ அவர் கூறும் அடிமட்ட சாதாரண மக்களுக்கோ எவ்வித நன்மையும் தரமாட்டாது.

ஏனெனில் மேற்கூறிய இருதரப்பினரும் இன்றைய இன, வர்க்க ஒடுக்குமுறையினை முன்னெடுத்து வரும் மகிந்த சிந்தனையின் பேரினவாத ஆட்சியின் பங்காளிகளும் ஆதரவாளர்களுமாவர். இத்தகையோரை வைத்தே ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமும் தோட்ட முதலாளிமார்களும் மலையக மக்களினதும் தோட்ட தொழிலார்களினதும் அடிப்படை வாழ்வாதார உரிமைகளையும் சம்பள உயர்வினையும் மறுத்து நிராகரித்து வருகின்றார்கள்.

எனவே ஒன்றுபட்டு நின்று தமது வர்க்க இனத்துவ உரிமைகளுக்காகப் போராடுவதற்கு ஐக்கியப்படுத்தப்பட வேண்டிய மக்களிடையே தத்தமது நலன்களுக்காகவும், ஆதிக்க இருப்புக்காகவும் மோதல்களையும் வன்முறைகளையும் உருவாக்க முன்னிற்கும் சக்திகளுக்கு எதிராக மலையக மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம் என்பதையே எமது கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

*இராகலை வெ. மகேந்திரன்*
*தேசிய அமைப்பாளர்*

## 1>> அரசாங்கம் எத்திசையில்.....

ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடமாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் ஆட்சித்தரப்பாக வருவ்தற்கான வாய்ப்பு இல்லாது விடினும் ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வரமுடியாதவாறு பலவழிகளிலும் வெற்றிலைக்கு வாக்குச் சேகரிக்கும் முயற்சிகள் இடம் பெறுகின்றன. மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஈ.பி.டி.பி கட்சி மூலம் ஒருபுறமாகவும், நேரடியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூலம் மறுபுறமாகவும் வாக்கு வேட்டை தொடங்கியுள்ளது.

இதற்கும் அப்பால் முஸ்லீம் கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் ஊடாகவும் வடமாகாண மக்களின் வாக்குகளைப் பறித்துக்கொள்ள ஏகப்பட்ட முன் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இது வரை அரசாங்கத் தரப்பான வெற்றிலையின் பிரசாரத்தில் தேசிய இனப்பிரச்சினை இருப்பதாகவோ அதற்கான தீர்வு எதுவும் தருவதாகவே கூறப்படவில்லை. இவற்றுக்கும் அப்பால் யுத்த முடிவுக்குப்பின் உயிர் உடமைகள் இழந்து உறவுகளைத் தொலைத்து நிர்க்கதியாகி நிற்கும் வடபுலத்த மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினைக்கும் அரசாங்கத் தரப்பு பதில் தருவதாக இல்லை.

அபிவிருத்தி, சலுகைகள், அன்பளிப்புகள், பணம், பொருள் என்பற்றை அள்ளித்தருவதாகக் கூறி வருவதுடன் ஆங்காங்கே வீசி எறிந்தும் வருகிறார்கள். இதன் மத்தியிலேயே ஜனாதிபதி செப்டெம்பர் இரண்டாவது வாரத்தில் வடமாகாணசபைத் தேர்தல் பிரசாரத்திற்கு வடக்கே செல்கிறார். அங்கு தமிழ் மக்களுக்குக் கூற அவரிடம் எதுவும் இல்லை. 13வது திருத்தத்தையே அகற்ற நிற்கும் ஒருவரிடம் அரசியல் தீர்வு பற்றி எதிர்பார்க்க என்ன இருக்கிறது? சிலவேளை சோறா அல்லது சுதந்திரமா என்று கேட்டாலும், சோறு வேண்டுமானால் கிள்ளிப் போடுவோம். ஆனால் சுதந்திரம் என்ற பேச்சுக்கு இடமே இருக்காது என்ற பேரினவாத ஒடுக்குமுறை நிலைப்பாட்டையே ஜனாதிபதி அங்கு தனது மொழியில் கூறிக் கொள்வார்.

இந்நிலையிலே வடபுலத்து மக்கள் இம்மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எத்தகைய பதிலை வழங்குவார்கள். அவ்வாறு அவர்கள் தமது பதிலை வழங்க அங்கு தேர்தல் ஜனநாயகமாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுமா என்பது முக்கியமாகிறது.

அதேவேளை இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஐந்து கட்சிகள் தமிழ் மக்களிடம் வாக்குகள் வேண்டி நிற்கின்றனர். இவர்களுக்கு உள்ள ஒரே ஒரு சகபுள்ளியும் வாக்குக் கேட்பதற்கும் உள்ள தகுதியுமாகக் காணப்படுவது இன்றைய மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு எதிராக நிற்பது ஒன்றே ஒன்றுதான். அதனை வைத்து இவர்கள் தெற்கின் பேரினவாதக் கட்சிகள் யாவற்றுக்கும் எதிரானவர்கள் என்ற முடிவுக்கும் வந்து விடமுடியாது. ஏனெனில் பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனும் இவர்களுக்கு மிக நெருக்கமும் விருப்பமும் இருந்து வருகிறது. இப்போது, மட்டுமன்றி யுத்த காலத்தில் கூட இத் தமிழ் கட்சிகள் அன்றைய அரசாங்கங்களுடன் நெருக்கமாக இருந்து வந்ததையும் மறந்து விடுவது அரசியல் அறமாகாது. இவ்வாறு எல்லாம் எடுத்துக்கூறுவது தமிழ்த் தேசியத்திற்கு விரோதம், துரோகம் என்று கூறுவோரும் இருக்கவே செய்வர்.

இச்சூழலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார அரங்கில் நிற்கும் தலைவர்களைப் பார்த்தபோது மீண்டும் இவர்கள்தானா? என்றே கேட்கத் தோன்றியது. அவர்களிடையே ஒரே ஒருவர்தான் வேறுபட்டவராகக் காணப்பட்டார். அவர் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன். அவரும் விரைவில் இவர்களில் ஒருவராகி விடுவாரா அல்லது தனக்குரிய தனித்துவ நிலைப்பாட்டைப் பேணிக் கொள்வாரா என்பதனை சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அதேவேளை தமிழ் மக்களுக்கு முன்னால் ஒரு இக்கட்டான நிலை இத் தேர்தலில் காணப்படுகிறது. தம்மைச் சகல வழிகளாலும் ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கிவரும் இன்றைய அரசாங்கத்திற்கு வாக்களிக்க முடியாது என்பது தெளிவானதாகும். அதேவேளை இத்தனை அழிவுகள் அவலங்களுக்குப் பின்பும் பட்டறிவால் தம்மை மாற்றிக் கொள்ளாது இன்றையச் சூழலுக்குரிய மாற்றுக் கொள்கை, வேலைத் திட்டம் எவற்றையும் முன்வைக்காது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறும் தமிழ்த் தேசிய முழக்கங்களுடன் தமிழ் மக்களிடம் வாக்குகள் கேட்டு நிற்கும் அவலத்தைக் காணமுடிகிறது.

தமிழ் மக்களின் வாக்குவங்கி அரசியல் தலைமையானது தங்களது கரங்களில் தொடர்ந்தும் இருப்பதை மட்டுமே குறிப்பாகக் கொண்ட ஒரு நிலைப்பாட்டையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகள் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இன்றைய வடபுலத்து அரசியல் சூழலில் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை அரசாங்கத்திற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திக் காட்டக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பமான வடமாகாணசபைத் தேர்தலில் வடபுலத்து மக்களுக்கு முன்னால் ஒரு நிர்ப்பந்தத் தெரிவாக இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே உள்ளது. அதற்கு மாற்றாக எதுவும் இல்லாத சூழலில் மக்கள் வேறு மார்க்க இன்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமது தெரிவாகக் கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளனர்.

அதேவேளை மலையகத்தில் மத்திய மாகாணசபைக்கான தேர்தலில் இ.தொ.கா. கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அரசாங்கத்தின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறது. மாத்தளை மாவட்டத்தில் மட்டும் தனது சேவல் சின்னத்தில் போட்டியிடுகிறது. அவ்வாறே பாராளுமன்ற உறுப்பினர் ப.திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் நுவரெலியா மாவட்டத்தில் அரசாங்கத்தின் வெற்றிலைச் சின்னத்தில் இணைந்து நிற்கிறது. மலையக மக்கள் முன்னணி தனித்து தனது மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிடுகிறது. ஆனால் அக்கட்சியும் அரசாங்க அரவணைப்புடனான கட்சியேயாகும்.

இனவாத ஒடுக்குமுறைக்கும் தொழிலாளர் மீதான அடக்குமுறைகளுக்கும் எதிரான உறுதிமிக்க மக்கள் சார்பான எந்த ஒரு அணியும் தனித்துவமான அரசியல் சக்தியாக இத்தேர்தலில் இல்லை என்பது கவனத்திற்குரியதாகும். இங்கேயும் மாகாணசபைப் பதவிகளுக்கான தேர்தலாகவே காணப்படுகிறதே தவிர மக்களின் பிரச்சினைகளை மையப்படுத்திப் போட்டிக்கு நிற்கும் தேர்தலாக இல்லை. பொதுவாகவே எல்லாத் தேர்தல்களுமே மக்களுக்காக நடத்தப்படுவன அல்ல என்பதே உண்மை நிலையாகும். எனவே தேர்தல்கள் மக்களை ஏமாற்றி பிரச்சினைகளில் இருந்து திசைதிருப்பி ஒரு குறிப்பிட்ட கட்சிகளும் அதன் வசதி வாய்ப்புப் பெற்றவர்களும் பதவி, சொத்து சுகங்கள் அனுபவிப்பதற்கே நடாத்தப்படுகிறன.

இத்தகைய தேர்தல்களுக்குள் மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடப்பட முடியாது. தேர்தல்களுக்கு அப்பால் மக்கள் அரசியல் மயமாவதன் ஊடாகவும் உறுதியான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே மக்கள் பிரச்சினைகளை வென்றெடுக்க முடியும்.

• • •

# ஜனாதிபதி தான் சர்வாதிகாரி இல்லையாம்!



"நான் சர்வாதிகாரி அல்ல. ஊடகங்களில் சிலர் என்னைச் சர்வாதிகாரி எனக் குறிப்பிட்டு வருகின்றனர். நான் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடையவன். அதனாலேயே தேர்தல்களை நடாத்தி வருகிறேன். மக்கள் தங்களை ஆளக் கூடியவர்களைத் தெரிவு செய்யும் சுதந்திரமுடையவர்களாக உள்ளனர். எவருக்கும் தமது கருத்துக்களைக் கூற எவ்வித தடையும் இல்லை. அச்சுதந்திரத்தைப் பயன்படுத்திய சிலர் என்னை சர்வாதிகாரி எனக் கூறி வருகின்றனர்."

இவ்வாறு கம்பளையில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறி இருக்கின்றார். தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வாதிகாரத்தனமாக தனது இருப்புக்காக செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கும் ஜனாதிபதியானவர் மக்கள் முன்சென்று தான் சர்வாதிகாரி அல்ல ஜனநாயகவாதி என்று கூறி நிற்பது வேடிக்கை தருவதாகும்.

இவ்வாறு தான் இன்றைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்டுவந்து அதன் கீழ் ஆட்சி அதிகாரம் புரிந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் கூறிக் கொண்டார். ஏன் உலகின் முதல் தரச் சர்வாதிகாரிகளாக இருந்த ஹிட்லர், முசோலினி கூடத் தம்மை சர்வாதிகாரிகள் அல்லர், ஜனநாயகவாதிகள், சோஷலிசவாதிகள் என்றே கூறி வந்தனர். அதன்பின் வந்த பெயர் பெற்ற பல சர்வாதிகாரிகள் எவருமே தம்மைச் சர்வாதிகாரிகள் அல்லர் என்றே கூறி வந்தனர். அத்தகையவர்களும் தேர்தல்கள் நடாத்தினர். தமக்குச் சாதகமான தேர்தல்களில் தொண்ணூறு வீத வாக்குகள் கிடைத்ததாகவே உலகத்திற்குக் காட்டி வந்தனர்.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது நான்கு சகோதரர்களோடும் ஏனைய உறவினர்களோடும் சேர்ந்து நின்று நடாத்தும் ஆட்சி ஜனநாயகப் போர்வை போர்த்திய சர்வாதிகார ஆட்சிதான் என்பதில் சந்தேகம் இல்லை. அதனை நிரூபிக்க ஆயிரம் உதாரணங்கள் உண்டு. அவ்வாறு வரிசைப்படுத்தப்பட [illegible]வில்லை. ஒன்று இரண்டு உதாரணத்திற்குப் போதுமானதாகும். ஐந்து பிரதான அமைச்சுக்களை ஜனாதிபதியே வைத்திருப்பதும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்திருப்பதற்காகக் குறுக்குவழிகளைக் கையாண்டு, கை உயர்த்துபவர்களை வைத்து நூறுக்கு மேற்பட்ட அமைச்சர்களைக் கொண்டிருப்பதும் எத்தகைய ஜனநாயக வழிமுறை சார்ந்ததாகும்? பதினெட்டாவது திருத்தத்தைக் [illegible] கொண்டு தமக்குச் சாதகமான வழிகளில் நிறைவேற்றிக்கொண்டதும் ஜனநாயக செயற்பாடு எனக் கூற முடியுமா? ஏன், தமக்குச் சார்பான தீர்ப்புக்களை வழங்க மறுத்த உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பழிவாங்கிக் கொண்டமை எத்தகைய ஜனநாயக சட்டவழி முறைமையின் கீழ் என்பது மக்களுக்குத் தெரியாத விடயங்களா?

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வை மறுத்து நிற்பதுடன் 13வது திருத்தத்தை அகற்ற நிற்பது ஜனநாயகவாதி செய்யும் செயலா? தனக்கு இன, மத, மொழி வேறுபாடு இல்லை எனக் கூறும் ஜனாதிபதி வடக்கு கிழக்கில் முன்னாள் ராணுவ அதிகாரிகளை ஆளனராக வைத்து நினைப்பவைகளை நிறைவேற்றி வருதுதான் ஜனநாயகமா? முன்னாள் புலித்தலைமையில் இருந்தவர்களுக்கு பதவிகளும் உல்லாச வாழ்வும் கொடுத்து வரும் அதேவேளை பத்து பதினைந்து வருடங்களுக்கு மேல் விசாரணை இன்றி சிறைகளில் அரசியல் கைதிகளாக அப்பாவிகளை வைத்திருப்பது சர்வாதிகாரமா? ஜனநாயகமா?

எனவே 'சொல்லுவார் சொன்னாலும் கேட்போருக்குதான் என்ன மதி' என்ற முதுமொழிக்கு ஒப்பவே, ஜனாதிபதி, தான் சர்வாதிகாரி இல்லை என்ற ஒப்புதலை நோக்க வேண்டியுள்ளது. எனவே மக்கள் தூர நோக்குடையதும் சரியானதுமான அரசியல் விழிப்புப் பெறாத வரை ஆளும் வர்க்கமும், அதன் தலைவர்களும் சொல்வதை அடிமைத் தனமாக நம்பும் வரை மக்களுக்கு விமோசனம் இருக்கமாட்டாது என்பதே உண்மையாகும்.

• • •

# மன்னார் மாவட்ட மீனவர்களின் தொடரும் அவலம்

வடபகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களில் மீன்பிடித் தொழிலை முக்கிய வாழ்வாதார தொழிலாக கொண்டியங்கும் மாவட்டங்களில் ஒன்றாக மன்னார் மாவட்டம் அமைந்து காணப்படுகின்றது. மன்னார் மாவட்டமானது 32 மீனவர் சங்கங்களையும் பத்தாயிரம் மீனவர் குடும்பங்களையும் 3100 மீன் பிடிப் படகுகளையும் கொண்டுள்ளது. இவர்கள் இன்னுமே பாரிய இழுவைப் படகுகளைப் பாவிக்கும் அல்லது பெரிய ரோலர்களை வைத்து மீன்பிடியில் ஈடுபடும் தொழில்களையோ இவர்கள் செய்யவில்லை. இவர்கள் சிறிய நடுத்தர படகுகளையும் மீன்பிடிக் கப்பல்களையும் கொண்டே மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இன்றைய சூழலில் மன்னார் மாவட்ட மீனவர்கள் செய்யும் தொழில் மூலம் தமது அன்றாட வாழ்க்கைச் சீவியத்தை கொண்டுசெல்ல முடியாத மீனவ சமூகமாகவே வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கான மிக முக்கிய காரணமாக இந்திய இழுவைப்படகு, தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மூலம் இந்திய முதலாளிகளின் மீன்பிடி வேட்டைக்காக முழு மீன்களையும் இந்திய மீனவர்கள் அள்ளிச் சென்று விடுவது தான். இவர்கள் எல்லைத் தாண்டி வருவதற்கு இலங்கை அரசிடம் எதுவித பாஸ் நடைமுறையும் இது வரை இல்லை. ஆனால் இலங்கை மீனவர்கள் கடலுக்குள் இறங்குவதெனின் பாஸ் நடமுறை, படகுகள் சோதனை என அனைத்து விடயங்களையும் இலங்கை கடற்படை செய்து கொண்டிருக்கிறது.

இந்திய பெருவணிக மீன்பிடி முதலாளிகளின் அட்டகாசம் தனியே மன்னார் மாவட்டத்திற்கு மட்டும் நடக்கும் விடயமல்ல. அது முழு வடபுலத்து மீனவ சமூகத்தின் பிரச்சனை. அத்துடன் மீன்பிடி தொழிலை நம்பியிருக்கும் மீனவ குடம்பங்களின் வயிற்றில் அடிக்கும் செயற்படாகும். யாழப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் இவ் இந்திய இழுவைப்படகுகள் தமது எல்லையைத் தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனை நாம் அடிக்கடி தினசரி செய்திகளில் காணமுடியும். இந்நதிய ரோலர்கள் எமது கடற்பரப்பின் கரையோரத்தின் 200மீற்றர் வரையான தூரம் மட்டும் வந்து மீன் வேட்டையில் ஈடுபட்டுவிட்டு சுதந்திரமாக செல்கின்றது. இதனை இலங்கை கடற்படை மிக அமைதியாக வேடிக்கை பார்த்த வண்ணமுள்ளது. இவ் இந்திய இழுவைப் படகுகளையும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்வதற்கு எதுவித நடவடிக்கைகளையும் அது எடுப்பதில்லை. அவ்வாறு மீறி நடவடிக்கை எடுத்தாலும் எமது நீதிமன்ற நீதித்தீர்ப்பு வரும் முன்னரே இலங்கையில் இருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட இந்திய தூதரங்களில் எதிலிருந்தாவது ஒரு இந்தியத் தூதுவர் வருகை தந்து அவர்களை விடுவித்துச் சென்றுவிடும் மேலாதிக்க நடவடிக்கையும் இங்கு நடக்கின்றது.

இலங்கையில் இருக்கும் இந்தியத் தூதுவர் சொன்னவுடன் கைது செய்யப்பட்ட அனைத்து எல்லை தாண்டிய இந்திய மீனவர்களும் விடுவிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதிலிருந்து எமது அரசு எந்தளவு தூரம் இந்திய எஜமானர்களுக்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலைமை வடபுலத்தில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய மீனவ மாவட்டங்களிலும் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. கற்பிட்டி, புத்தளம் போன்ற பகுதிகளுக்கும் இந்திய படகுகள் படையெடுத்து வந்து மீன்பிடியில் தமது ஆதிக்கத்தினை செலுத்தி வருகின்றார்கள். இவர்கள் மீன்பிடிக்க வரும்போது வெறும் 50 அல்லது 100 படகுகளில் வருவது இல்லை, இவ் எல்லைத் தாண்டிய மீன்பிடிப்பாளர்கள் 2000 தொடக்கம் 3000 வரையான இழுவைப் படகுகளில் வருகைதந்து ஒரு சிறிய கடற்பரப்புக்குள் அனைத்து மீன்களையும், குஞ்சுகளையும் அள்ளிச் சென்று மன்னார் மாவட்டம் உட்பட வடபுலத்தின் அனைத்து மீனவ மாவட்டங்களிலும் மீனவக் குடும்பங்களின் வயிற்றில் அடித்து அவர்களை நடுத்தெருவில் விடும் நிலைமை உள்ளது.

அதேபோல் வடபுலத்து மீன்பிடித் தளங்களுக்கு தென்னிலங்கை மீனவர்களின் வருகை மூலமும் வடபுலத்து மீனவர்களின் மீன்பிடி தொழில் அபாயத்துக்குள்ளாகி வருகின்றது. தென்னிலங்கையில் நீர்கொழும்பு, காலி போன்ற மீன்பிடி வலயங்களில் உலக வங்கி சர்வதேச நாணயநிதியம் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மீன்பிடி தளங்களை சுற்றுலா வலயங்களாக பிரகடனப்படுத்தி, கடல் விளையாட்டு, கடல் விமானங்களை*(Sea Plane)* தரையிறக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மீனவர்களை தமது தொழிலை செய்ய விடாது அரசு தடையேற்படுத்தி வருகின்றது. இதன்காரணமாக வாழ்வாதாரப் பிரச்சனைக்கு முகங்கொடுக்கும் சிங்கள மீனவர்களை வடபுலத்து மீன்பிடித் தளங்களில் மீன்பிடிக்க திசை திருப்பி அனுமதிப்பதன் மூலம் இரண்டு விடயங்களை அரசாங்கம் மிகத் தந்திரமாக கையாண்டு வருகின்றது. ஒன்று, சர்வதேச எஜமானர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப செயற்படும் அரசு பரம்பரை பரம்பரையாக மீன்பிடிக்கும் சிங்கள மீனவர்களை அவர்களின் மீன்பிடித்தளங்களை விட்டு அகற்றும்போது ஏற்படக்கூடிய வெகுஜனப் போராட்டத்தை இல்லாது செய்கின்றது. இரண்டாவதாக, சிங்களவர்கள்தான் இந்நாட்டின் பெரும்பான்மையினர், அதனை தமிழர்கள் மறுத்து நிற்கிறார்கள் என்பதை வடபுலத்து தமிழ், சிங்கள மீனவர்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவு மூலம் முழு இலங்கைக்கும் காட்டி, ஏகப் பெரும்பான்மையான சிங்கள உழைக்கும் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை திசைதிருப்பி, இனவாதத்தை வளர்த்து தங்களை தக்க வைத்துக் கொளள முனைவதாகும். இதற்கும் மேலாக தமிழ் மக்களின் பாரம்பரிய மீன்பிடி பிரதேசங்களில் தென்னிலங்கை மீனவர்களை படையினரின் உதவியுடன் நிரந்தரமாக தொழில் புரிய ஊக்குவிப்பதன் ஊடாக தனது பேரினவாத நிகழ்ச்சி நிரலையும் அரசு முன்னெடுக்கின்றது.

இந்த இடத்தில் சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. இந்திய இழுவைப்படகுகள், தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை தடை செய்து எல்லை தாண்டிய இந்திய மீன்பிடிப்பை தடுக்காது விட்டால் மன்னார் மாவட்ட மீனக் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய நாட்களை வெகு விரைவில் அரசாங்கம் காணவேண்டி வருவதை யாராலும் தடுக்கமுடியாது. அதேபோல், இந்நாட்டின் ஆதிக்க அரசியல் சக்திகள் எந்த சிங்கள, தமிழ், முஸ்லீம் குடிமக்களைப் பற்றியதான தேவைகளைப் பற்றி அரசியல் கதைத்து வருகிறார்கள் என்பதை உழைக்கும் மக்கள் உரத்து கேள்வி கேட்க வேண்டும்.

கடந்த அறுபது வருடங்களில் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள், தமிழ்த் தேசியவாதிகள், முஸ்லீம் தேசியவாதிகள் என்போர் இந் நாட்டின் ஏகப் பெருபான்மையான உழைப்பாளர்கள், விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், மீனவர்களின் அடிப்படை பிரச்சினைகளைப் பற்றி எப்போதாவது கதைத்திருக்கின்றார்களா? என்பதையும், மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருக்கிறார்களா? என்பதையும் உழைக்கும் மக்கள் கேள்விக் கேட்க வேண்டும். ஏனைய இனங்களுடன் ஐக்கியப்பட்டு பரந்துபட்ட வெகுஜனத் தளங்களில் நின்று போராடுவதன் மூலம் மட்டுமே உழைப்பாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை எட்ட முடியும் என்பதை அனைத்து உழைக்கும் மக்களும் உணராதவரை எதுவித விடுதலையும் எமக்கு கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

• • •

# வவுனியா சில்லறை மரக்கறி வியாபாரிகள் என்ன செய்வது?

வவுனியா சுற்றுவட்ட வீதியின் பொதுச் சந்தை 1990ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த சந்தையில் 35 வியாபாரிகளுக்கு மரக்கறி விற்பனைக்கு நகர சபையால் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு சிறு மரக்கறி வியாபாரிகள் மொத்த மரக்கறி சந்தையில் மொத்தமாக கொள்வனவு செய்து அவற்றை இங்கு விற்பனை செய்து வருகின்றார்கள். தற்போது இங்குள்ள பிரச்சினை என்னவெனில், இச்சந்தைக்கு சில மீற்றர்களே அண்மித்து உள்ள மொத்த மறக்கறி சந்தையில் சில்லறை வணிகமும் இடம்பெற்று வருவதேயாகும். நகர சபை நிர்வாகச் சட்டத்தின் பிரகாரம் நகர சபையின் சில்லறை விற்பனை சந்தையிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால்தான் மரக்கறியை சில்லறை விற்பனை செய்ய முடியும். ஆனால் இவ் வழி முறையை மீறி இச்சிறு மரக்கறி சந்தைக்கு முன்பாக பல சில்லறை மரக்கறி வியாபாரிகள் கடைவிரித்துள்ளனர். அத்துடன் மொத்த மரக்கறி விற்பனை நிலையத்திலும் சில்லறை மரக்கறி விற்பனையும் கிரமமாக நடைபெற்று வருவதும் இவாகளின் வயிற்றில் அடிவிழுதாக உள்ளது.

இவ்சிறிய மரக்கறி விற்பனையாளர்கள் நகரசபை நிர்வாகத்திற்கு நாள் வாடகையை கிரமமாக செலுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் சம்பந்தமாக வவுனியா மாவட்ட பொலிஸார், நகரசபை நிர்வாகம் ஆகியவற்றிக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் இப்பிரச்சினையில் கவனம் செலுத்தாத நிலையில் நகரசபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமும் செய்துள்ளனர். எனினும் நகரசபை இவ்விடயத்தில் தொடர்ந்தும் பாராமுகமாகவே இருந்து வருகின்றது. சிறு மரக்கறி வியாபாரிகள் அன்றாடம் செய்யும் சிறு சில்லறை வியாபாரத்திலேயே அவர்களின் குடும்பங்களின் இருப்பு தங்கியுள்ளது. தொடரும் இவ் அவல நிலை அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக மேலெழும்பி வருகின்றது. ஆனால் நகர சபை இவ்விடயத்தில் இச்சில்லறை வியாபாரிகளுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் உள்ளது.

நகரசபை நிப்வாகம் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து உரிய நடவடிக்கை எடுக்காது விட்டால் சில்லறை வியாபாரிகளும் அவர்களது குடும்பங்களும் நடுத்தெருவுக்கு வந்து விடக் கூடிய அபாயம் காணப்படுவதை நகரசபை நிர்வாகம் கணக்கில் எடுப்பதாயில்லை. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இச்சில்லறை வியாபாரிகளின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முன்வருவார்களா? அல்லது கைகழுவி விடுவார்களா?

**மரக்கறி சிறுவியாபாரிகள் சங்கம், வவுனியா**

# புதைப்பதற்கு இடமில்லாத தோட்டம்

இருநூறாண்டுகளுக்கு மேல் இலங்கை மண்ணுக்கே உழைத்து, இன்று இலங்கை பொருளாதாரத்தின் தூண்களாயுள்ள மலையக மக்களுக்கு இன்றும் பிணங்களை புதைப்பதற்குக்கூட போதுமான நிலம் தோட்ட நிர்வாகங்களினால் ஒதுக்கப்படாதுள்ளது. இவ்வாறான நிலை மிகப்பாரதுரமான அடக்குமுறையாகும். மாத்தளை உச்சிமலை தனியார் தோட்டத்தில் 30ற்கும் குடும்பங்கள் வாழ்கின்றன. இத்தோட்டத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு நிர்வாகத்தினால் மிகச் சிறு பகுதி நிலமே தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகூட மக்களின் பெரும் முயற்சியினால் பெறப்பட்ட ஒன்றேயாகும். தற்போது மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர். உடல்களை புதைப்பதற்கு போதுமான இடத்தினை நிர்வாகம் வழங்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கை தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்பட்டு வருகின்றது. பல்வேறு தோட்டங்களில் மயானங்கள் இல்லாத நிலையில், மயாணம் ஒன்றை றெுவதற்குக்கூட மக்கள் போராட வேண்டியுள்ளமையை நாம் புரிந்து செயல்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

# பிட்டகந்த தொழிற்சாலை அழிவை நோக்கி

மாத்தளை பிட்டகந்த தோட்டமானது பல போராட்டங்களைக கண்ட, விழிப்புணர்வுள்ள மக்கள் சக்தியை கொண்ட மண். மலையக அடையாளங்களில் பிரதானமானதும், இன்று அநேக தோட்டங்களில் இயங்கா நிலையிலுள்ளது போன்றே பிட்டகந்தயிலும் தேயிலை தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. இத்தொழிற்சாலையில் சில பாகங்கள் திருடப்பட்டிருந்தாலும் பெரும்பாலான இயந்திரங்கள் காணப்படுகின்றன. ஆக இத்தொழிற்சாலை மீது நிர்வாகத்தினருக்கும், தனியார் முதலாளிகளுக்கும் ஒர் கண் இருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். தொழிற்சாலை இயந்திரங்களையும், பொருத்துக்களையும் விற்று தொழிற்சாலையை சூறையாட திரை மறைவில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தொழிலாளர்கள் புதிய நீதியிடம் தெரிவித்தனர். இத்தோட்ட தொழிலாளர்கள் தமது உழைப்பின் விளைவால் உருவான, அவர்களது தோட்ட உடைமையான இத்தொழிற்சாலை இச்சதியில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். இளைய தலைமுறையினரும் தொழிற்சாலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் அது மீண்டும் இயங்கவைக்கப்பட வேண்டும், ஆனால் ஆளும் அரசாங்கத்திற்கு தேயிலை தொழிற்சாலைகளை விருத்தி செய்வதற்கான நோக்கம் இல்லை எனக் கூறுகின்றனர். குறிப்பிட்ட தொழிற்சாலை கட்டிடத்தை ஆடை தொழில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான தொழிலுக்காகப் பயன்படுத்தினால் இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த காலத்தில் பல போராட்டங்களில் ஐக்கியப்பட்டு உறுதியுடன் செயற்பட்ட, போராட்ட குணமும் அநுபவமும் மிக்க பிட்டகந்த மக்களின் முன் தொழிற்சாலை அழிக்கப்படுமா? தடுக்கப்படுமா?

• • •

# இராசதுரை எம்.பி. இ.தொ.கா.விருந்து ஏன் விலகினார்

கடந்த ஓகஸ்ட் எட்டாம் திகதி இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரசில் இருந்து அதன் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.இராஜதுரை விலகிக்கொண்டதாக அறிக்கை வெளியிட்டார். தான் தொடர்ந்தும் இ.தொ.கா.வில் இருக்க விரும்பவில்லை என்றும் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கப் போவதாகவும் அது மலையக மக்களுக்குச் சேவை செய்வதற்குரிய கடமை என்றும் காரணம் கூறிக் கொண்டார். தனது விலகலுக்குக் காரணங்கூறும் போது இ.தொ.கா. தலைமையிடம் ஜனநாயகம் துளியளவும் இல்லை எனவும், அங்கு குடும்ப ஆதிக்கமே இருந்து வருவதாகவும், தன்னைப் பண்பாக நடத்தவில்லை என்றும் முக்கிய இடங்களுக்குத் தன்னை நியமிக்கவில்லை என்றும் தனது ஆழ்ந்த ஆதங்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

அவரது நிலை அரசியல் பரிதாபத்திற்குரியதாகும். மேற்கூறிய காரணங்கள் இ.தொ.காவில் தாத்தா தொண்டமான் காலத்திலிருந்தே இருந்து வருவதை இராஜதுரை அதில் சேரும் போது அறியாதவர் அல்ல. பாராளுமன்றப் பதவி பெறுவது என்ற பதவி பேராசையிலும் அதன் ஊடாக பணம், சொத்து, சுகம் பெறலாம் என்ற மேன்நிலை நோக்கிய திசையிலுமே அவர் இ.தொ.காவுடன் இணைந்து நின்றார். அவரது சுயஈடேற்ற எதிர்பார்ப்புகளில் கணிசமானவற்றை அவரால் அடையவும் முடிந்தது.

இராஜதுரை இப்போது மலையக மக்கள் பற்றி அதிக அக்கறையுடன் பேசி வருகிறார். அதுவும் தான் தோட்டத் தொழிலாளியின் பிள்ளை என்றும், கஷ்டப்பட்டுப் படித்து முன்னேறி வந்ததாகவும், உழைக்கும் மக்களிடம் அனுதாபம் தேடி நிற்கிறார். அவர் கூறும் 'லயத்துத் தொழிலாளி' என்பதில் உண்மையுண்டு. அடிமட்ட வாழ்க்கையில் கஷ்டப்பட்டு படித்து முன்னேறி வந்தவர் என்பதும் மறுக்க முடியாத உண்மைதான். ஆனால் தனது பள்ளிக்கால மாணவப்பராயத்தில் புதிய ஜனநாயகக் கட்சியில் இணைந்து மாக்சிசத்தையும், அரசியல் சமூக விடயங்களையும் படித்துக்கொண்டவர். ஏனையோருக்கு மாக்சிசம், சமூகமாற்றம், நேர்மையான அரசியல் மார்க்கம் போன்றவற்றை பிரசாரம் செய்தும் வந்தவர். ஆனால் அவர் சட்டத்துறையில் கல்வி கற்க ஆரம்பித்ததும் அவரது தூர நோக்கானது தனிநபர் முன்னேற்றம், பட்டம், பதவி என்பவற்றை நோக்கி நகர்ந்தது. சட்டத்தரணியானதும் தனது மேன்நிலையாக்கத்தில் திருப்திகண்டார். அவரது ராகலையின் மாசாத் தோட்ட லயன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து நுவரெலியா நகர வாழ்க்கையைப் பெற்றார். தனது பெற்றோரைக்கூட அங்கு வாழ அனுமதிக்கவில்லை. காரணம் தனக்கு அது கௌரவ, அந்தஸ்து குறைச்சலானவொன்று என்பதேயாகும். பட்டம், பணம் அவைகளே தனது சமூக அந்தஸ்து எனத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட சட்டத்தரணி இராஜதுரைக்கு மேலும் பதவியும் தேவைப்பட்டது.

இக்கட்டத்திலேயே இ.தொ.கா.விற்கு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் சாதிய அடிப்படையில் வாக்குகள் வாங்க ஒரு தகுதியான ஆள் தேவைப்பட்டது. அந்த வாக்குகளை ஏற்கனவே இ.தொ.கா.விற்காக காலத்திற்குக் காலம் வாங்கிவந்தவர்கள் சிலர் அவ்வப்போது இ.தொ.கா.வை விட்டு வெளியேறி தமக்கான சாதிய வாக்கு வங்கியை ஏற்படுத்த முனைந்து கொண்டனர். அந்தவழியில்தான் இப்போது இராசதுரை எம்.பி.யும் சென்றுள்ளார். இ.தொ.காவுக்குள் பதவி தராதுவிட்டாலும் யாவற்றையும் பொறுத்துக் கொண்டு எம்.பி.யாகிவிட்டால் அதுவே போதும் என்ற நிலையிலேயே அங்கு சென்றார். அவரது எதிர்பார்ப்புப்படி எம்.பியும் ஆனார்.

இராசதுரை ஆரம்பத்தில் படித்த மாக்சிசத்தின் வழியான தன்மான உணர்வு எங்கோ உடம்பின் ஒரு மூலையில் இருந்த காரணத்தால் போலும் இ.தொ.கா. குடும்ப ஆதிக்க தொழிற்சங்க ஆதிக்கத்தையும், சாதிய அகம்பாவக் கண்ணோட்டத்தையும் பொறுக்க முடியாது வெளியே வந்துள்ளார் என சிலர் மலையகத்தில் பேசிக்கொள்கின்றனர். ஆனால் இராசதுரை எம்.பி. மேற்கூறிய வழியில் சிந்தித்திருந்தால் அது முற்போக்கானது. ஆனால் அவரது விலகல் அவரை எந்த இடத்திற்கு கொண்டு சென்று நிறுத்தியுள்ளது என்பதைப் பார்த்தால் அது சட்டியில் இருந்து நெருப்பிற்குள் வீழ்ந்தாகவேதக் காணப்படுகிறது.

இரண்டு விடயங்கள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. ஒன்று, தான் தொடர்ந்து ஐ.ம.சு.மு அரசாங்கத்தில் அங்கம் வகிப்பேன் என்கிறார். இரண்டாவது, ஏற்கனவே அரசாங்கத்தில் இருந்து வரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரத்துடன் இணைந்து மற்றொரு வகையான ஆதிக்த அரசியலை மலையகத்தில் முன்னெடுக்க நிற்கின்றார். மாக்சிசம், வர்க்க அரசியல் விடுதலை பற்றிப்பேசி தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த ஒரு படித்த மலையக சட்டத்தரணி ஒரு ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறி மற்றொரு ஆதிக்கத்தை வளர்க்க துணை நிற்கின்றார்.

இன்றைய மலையகச் சூழலில் வர்க்க இன ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட வழிகாட்டும் ஒரு முற்போக்கான அரசியல் பாதையை முன்னெடுக்க ராசதுரை எம்.பி முன்வந்திருப்பார் எனின் அது வரவேற்கத்தக்கதாகும். அதனைவிடுத்து பேரினவாதத்திற்கு சாமரை வீசும் மற்றொரு வகை ஆதிக்க அரசியலை முன்னெடுக்க நிற்பது மலையக மக்களை ஏமாற்றுவதாகவே அமையும்.

• • •

# மோட்டார் சைக்கிள் டயரி

**2013.06.13**

*அரச வங்கி ஒன்றுக்கு சென்றிருந்தோம். அங்கு கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பலர் வரிசையில் நின்றிருந்தனர். நான் பணம் எடுப்பதற்கான சீட்டை பூர்த்தி செய்துவிட்டு வரிசைக்கு வந்தேன். எனது முறை வந்தது. எனது சீட்டை வாங்கிய காசாளர் "மேக தெமலேன் லியலா தியனவானே, சிங்ஹளேன் லியன்ன". (இது என்ன தமிழ்ல எழுதியிருக்குது, சிங்களத்தில் எழுதுங்க என்றார்) தமிழிலும் எழுதலாம் தானே! அதுவும் அரச கரும மொழி தானே! என்றேன் .நீங்க பேசுறது சட்டம், அது சரி. இருந்தாலும் எனக்கு தமிழ் தெரியாதே என்றார். நான் கூறினேன், ஒன்று நீங்க தமிழ் தெரிஞ்சிருக்கனும், இல்ல தமிழ் தெரிஞ்சவங்களை சரி வேலைக்கு வச்சுக் கொள்ளனும் என்றேன்.*

*எத்தனையோ அரச நிறுவனங்களில் தமது நாளாந்த கடமைகளுக்காக தமிழ் மொழி பேசுபவர்களும் சென்றுக்கொண்டுத்தான் இருக்கின்றனர். ஆனால் அவர்களது மொழியில் கருமங்களை செய்ய முடிகிறதா என்றால் இல்லையென்றே கூறலாம். 'மும்மொழி... மும்மொழி...' எனக் கூவிக் கொண்டிருக்காமல் தமிழ் பேசுபவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள தமிழ் படித்தவர்களையும் அரச சேவைக்கு தேவைக்கேற்ப உள்வாங்கினால் சரிதானே? அரச சேவையில் தமிழர்கள் இன விகிதாசாரத்திற்கு ஏற்றாற்போல் உள்ளீர்க்கப்படல் வேண்டும் என்பது ஒரு அரசியல் கோரிக்கையாக முன்னெடுக்கப்படல் வேண்டும்.*

• • •

**2013.06.24**

*புதிய நீதி பத்திரிகை விற்பதற்காக செம்புவத்தை தோட்டத்திற்கு சென்றிருந்தோம். எம்மிடம் வந்து ஆர்வத்துடன் பத்திரிகை வாங்கிய ஒருவர் அவசர அவசரமாக எம்மிடம் கதைத்து விட்டு களைந்து செல்ல முற்பட்டார். ஏன் அவசரப்படுகிறீர்கள் நண்பரே என்று கேட்க, இல்லை இன்று மாகாண சபை மந்திரி வரச்சொன்னார். இந்த மண் பாதைய கொங்கீறிட் போட போறாறாம். அவரிடம் பேசத்தான் போகப் போறேன் என்றார். ஆமா ஆமா தேர்தல் வந்தால் தானே நம்மல ஞாபகம் வரும் என்றார் ஒரு தொழிலாளி. 5 வருடத்திற்கு ஒருத்தடவை சலுகை வீசும் அரசியலால் இனியும் ஏமாந்தது போதும். மாற்று அரசியலே எம்முன்னிருக்கும் ஒரே அஸ்திரம் என்றார் மேலும் அவர்.*

*இந்த விழிப்புணர்வும் சரியான அரசியல் ஆர்வமும் முழு மலையகத்திற்கும் ஏற்படும் போதே நமக்கான விடுதலை சாத்தியமாகும்.*

• • •

**2013.07.04**

*நாம் பிட்டகந்த தோட்டத்திற்கு சென்றோம். பொது தேவையொன்றிற்காக வீடு வீடாகச் செல்ல நேர்ந்த போது ஒரு தாய் எம்மிடம் வந்து, என்னுடைய மகனுக்கு ஒரு வேலை பார்த்து தாங்க தம்பி, ஏதோ எங்களால் முடிந்த அளவு படிக்க வைச்சோம், இவன் வேல இல்லாம ரொம்ப கஷ்டப்படுறான் என்றாள். நாங்கள் அந்த அம்மாவை இதற்கு முன் சந்தித்தது கிடையாது இச் சம்பவத்திலிருந்து நாம் கூற முற்படுவது யாதெனில் அரச துறைகளில் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்படும். ஏராளமான விண்ணப்பங்கள் அனுப்பவும்படும். பெரும்பாலும் நேர்முகப் பரீட்சையில் கூட பங்குபற்றுவர். ஆனால் நியமனமோ ஆளுங் கட்சிக்கு சேவகம் புரிந்தவர்களுக்கும் அடிவருடிகளுக்குமே கிடைக்கும். நடுநிலையைக் காட்ட சில எலும்புத்துண்டுகள் வீசப்படும். குறித்த வேலைகளுக்கு தகுதி உடையவர்களின் நிலை, அவர்களின் எதிர்காலம் என்னவாகும் என்பது சிந்தித்து பார்க்கப்பட வேண்டிய விடயமாகும். இதனை அனைவரும் உணர்ந்து இவ்வித நியமனங்களுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அவசியம்.*

• • •

**2013.07.12**

*எக்கட்சி ஆட்சியமைத்தாலும் நாம் அரசாங்கத்தில் தான்! மக்களை குழித் தோண்டி புதைத்தாலும் நாம் அரசுக்குத்தான் ஆதரவு! மலையக மக்களுக்கு காணியுரிமை வழங்க வேண்டும் என மறந்தும் மஹிந்த சென்னாலும் பிறகு பார்க்கலாமே என்கிற மக்கள் அரசியல் எம் அரசியல்! என மக்கள் அரசியல் புரியும் பாரம்பரிய தொழிற்சங்கமொன்று, மாகாண சபையில் காலங் காலமாக இருந்துக்கொண்" , வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக்கொண்டு அரசியல் அரங்கில் 13 ம் திருத்த சட்டத்தை பற்றி பெரிய விவாதங்களே நடந்துக்கொண்டிருக, அதி அரசியல் புத்திசாலித்தனமாக 13 ம் திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே முடிவு சொல்வோம் என்கிறது. என்ன ஒரு ஞானம்! என்ன ஒரு ஞானம்!*

*இவர்களுக்கு ஊழல், மோசடி, அராஜகம், ஆளும் அரசாங்கங்களின் காலில் விழுவது, மக்களை ஏமாற்றி ஓட்டு பொறுக்குவது, மக்களை காட்டிக் கொடுப்பது என்பவற்றில் மட்டும் பரம்பரைப் பரம்பரைக்கும் தலைவன் முதல் தொண்டன் வரைக்கும் நரித்தன புத்தி மட்டும் தவறாது கடத்தப்படுகிறது.*

***சிந்திப்போம் மீண்டும் சந்திப்போம்.***

***சைக்கிள் தோழர்கள்***

# மலையக மக்களுக்கு காணி நில உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருவது ஏன்?

**மாத்தளையில் இடம்பெற்ற பகிரங்க அரசியல் கருத்தரங்கில் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேல்**

மலையகத்தில் அரசால் இணங்காணப்பட்டுள்ள 37000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் முதற் கட்டமாக 25000 ஹெக்டேயர் நிலப்பரப்பை குறைந்த வருமானம் பெறும் குடம்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் தொழில் முயற்சியாண்மைக்கு வழங்கப்படப்போவதாக ஆளுந்தரப்பு குறிப்பிட்டு வருகின்றது. அவ்வாறு வழங்கப்படும் போது மலையக இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இல்லையெனில் மக்கள் சக்தியை கொண்டு அரசின் இம்முயற்சிய்யை முறியடிப்போம் என புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் அவர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று மாத்தளை நகரில் தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற பகிரங்க அரசியல் கருத்தரங்கில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார். இந்நிகழ்வை கட்சியின் மாத்தளைக் கிளை ஏற்பாடுசெய்திருந்தது.

இக்கருத்தரங்கில் தொடர்ந்தும் பேசிய கட்சியின் பொதுச்செயலாளர், இவ் ஆளும் அரசு மலையக தமிழர்கள் உட்பட அனைத்து சிறுபான்மை இனத்தவர்களுக்கும் எதிராக நடப்பதுபோல் சாதாரன சிங்கள மக்களுக்கும் எதிரானதாகவே நடந்து வருகின்றது. சிங்கள மக்களை மாத்திரம் இம்மகிந்த அரசானது சொர்க்கத்தில் வைத்து பார்க்கவில்லை. அனைத்து தேசிய இனங்களுக்கும் எதிராகவே ஒடுக்குமுறைகளை நிகழ்த்தி வருகின்றது. மலையக மக்கள் சொந்த நிலமில்லாதவர்களாக, லயத்திலே வாழ்க்கை செலவுகளுக்கேற்ற சம்பள அதிகரிப்பில்லாது கல்வி, சுகாதாரம் போன்றவற்றில், வேலை வாய்ப்பில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். உற்பத்தி செலவுக்கேற்ப உரிய விலையில்லாமல் ஏழை விவசாயிகளும் கடனாளிகளாகவே இருந்த வருகின்றனர். அதேபோல் மீனவர்கள், அரச, தனியார் ஊழியர்கள் என அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரையும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், மின்சார கட்டண உயர்வு போன்ற பல விடயங்களால் தொடர்ந்தும் நசுக்கி வருகின்றது.

1947ல் பறிக்கப்பட்ட மலையக மக்களின் பிரஜா உரிமை 1988ல் வெறும் தொண்டமான் என்ற அரசியல்வாதியால் பெறப்படவில்லை. அது வரலாறு தெரியாதவர்களின் குறுட்டுத்தனம், இவ்வுரிமை மக்களின் போராட்டங்களாலும் தியாகங்களாலும் கிடைக்கப்பெற்ற ஒன்றாகும். வாக்கு வங்கி அரசியலாலும், புள்ளடி போடும் அரசியலாலும் உழைக்கும் வர்க்கத்தின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை, மாற்றுத்தலைமையின் மூலமே இது சாத்தியப்படும் எனவும் இந்நிகழ்வு தேர்தலை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படவில்லை என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர். வெ.மகேந்திரன் உரை நிகழ்த்தும் போது, மலையகத்தில் தற்போது பல இடங்களில் தன்னெழுந்தவாரியான போராட்டங்கள் நடைப்பெற்று வருகின்றது. இது ஆரம்ப கால மலையகத் தொழிலாளர்களின் போராட்ட குணாம்சங்களை பிரதிபலிக்கும் ஆரோக்கியமான விடயமென்றார்.

மேலும், மலையக மக்கள் இன்றும் மூன்றாந்தர பிரஜைகளாகவே நடாத்தப்படுகின்றோம், எமது பிரச்சினைகளை அரசின் தலையாட்டி பொம்மைகளாகவும் அடிவருடிகளாகவும் இருக்கும் மலையகத் தலைமைகள் என சொல்லிக் கொள்பவர்கள் எவ்வாறு தீர்க்கப்போகின்றார்கள்? என்பது பற்றி நாம் சிந்திக்கவேண்டிய கட்டாயத்தில் நிற்கின்றோம். ஆகவேதான் மாற்று அணியைக் கட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என தனது உரையில் குறிப்பிட்டார்.

இப்பகிரங்க அரசியல் கருத்தரங்கிற்கு மலையகப் பிராந்திய குழு உறுப்பினர் தோழர் பெ. சுரேன் தலைமை தாங்கிய தோடு மலையகப் பிராந்திய தோழர்களான ச.பன்னீர்செல்வம், சட்டத்தரணி சி. மோகனராஜன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் தொழிலாளர்கள், பெண்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள், அரச தனியார் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

புதிய நீதி
Puthiya Neethi
පුදිය නීදි
முரசம் 02, ஜூலை-ஓகஸ்ட் 2013, பக்கம் 16, விலை ரூ.30. முழக்கம் 05
இல. 15/4இ மகிந்தாராம வீதி, கல்கிசை
தொ.பேசி: 0716 745 642, 0779 774 427 தொ.நகல்: 0112 473 757
WEB: www.ndpsl.org Email: puthiyaneethi2012@gmail.com

## தனியார்துறையாக்கப்பட்டு வரும் சுகாதாரமும் மருத்துவமும்

நாட்டின் சுகாதாரத்துறையும் மருத்துவமும் மக்களுக்குப் பயன்தர முடியாத பாதையில் பயணிக்கின்ற போக்கினைக் காண முடிகிறது. இன்றைய நிலையில் எல்லாம் வர்த்தக மயமாக்கலுக்கும், கொள்ளை லாபம் ஆகியவற்றுக்கும் உள்ளாகிவரும் போக்கு நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இவை கடந்த மூன்று தசாப்தங்களில் தாராளமயம், தனியார் மயம், உலகமயம் என்பனவற்றின் ஊடே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் நாட்டில் ஏற்கனவே மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச சுகாதார சேவைகள் படிப் படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று அரசாங்க பொது மருத்துவமனைகள் ஊடான இலவச மருத்துவமும் தனியார் வர்த்தக மருத்துவத்தால் படிப் படியாக விழுங்கப்பட்டு வருவதையும் காணமுடிகிறது.

ஒரு நாட்டின் கல்வியும், சுகாதாரமும் இரண்டு கண்கள் போன்று பாதுகாக்கப்பட வேண்டியவை. சுகாதாரமும் அதனுடன் கூடிய மருத்துவமும் அரசாங்கத்தின் கைகளிலும் கவனிப்பிலும் அக்கறையிலும் இருத்தல் வேண்டும். இவை அப்படி இருப்பதற்கு நாட்டின் பொருளாதாரம் வளர்திசையில் இருக்க வேண்டும். அதற்குச் சரியான உறுதி மிக்க அரசியல், அரசாங்க தலைமைத்துவம் அமைதல் வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கான சுகாதாரமும் மருத்துவமும் பாதுகாக்கப்பட முடியும். இப்பொழுது நாட்டில் பெருகி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தமுடியாத நிலையிலேயே சுகாதாரத்துறை இருந்து வருகிறது. முன்பு மலேரியா, காசநோய், தொழு நோய், கொலரா போன்றவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து அவற்றை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. அத்தகைய நாட்டில் இன்று டெங்கு என்பதைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகி நிற்பதற்குக் காரணம், அரசாங்கம் அதில் மக்கள் சார்பான முடிவுகளுக்கும் செயற்பாட்டிற்கும் வரமுடியாமையேயாகும்.

உலகில் மிக முக்கியமான வர்த்தகங்களில் ஒன்றாக மருந்து உற்பத்தியும் விற்பனையும் இருந்து வருகின்றது. இவற்றை இராட்சத பல்தேசியக் கம்பனிகள் பரந்தளவு வர்த்தகமாக முன்னெடுத்து நிற்கின்றன. அவற்றின் ஆதிக்கமானது அரசாங்கங்களையும் அமைச்சர்களையும், அதியுயர் அதிகாரிகளையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது. அதனாலேயே மருந்து வர்த்தக நிறுவனங்கள் இன்று மா∴பியாக்களாக வளர்ச்சி யடைந்துள்ளன. இன்று பெரும்பாலான நாடுகளில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மருந்துப் பொருள் உற்பத்தி, விற்பனையில் இராட்சத பல்தேசியக் கம்பனிகள் போட்டி போட்டு நிற்கின்றன.

நாடுகளின் அரசாங்கங்களை இவ் இராட்சதக் கம்பனிகள் கட்டுப்படுத்தி தமது உற்பத்திகளை சந்தைப் படுத்துகின்றன. ஒரு நோய்க்கு பத்துக்கும் மேற்பட்ட வகையான பல்வேறு கம்பனிகளின் மருந்துகள் பல விலைகளில் மட்டுமன்றி, அவை சாதாரண மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத உயர்ந்த விலைகளில் காணப்படுகின்றன. அவற்றை விற்பனையாக்குவதற்கு தமது விற்பனை பிரதிநிதிகள் மூலம் வைத்தியர்களை நாடி அவர்களுக்கு வெவ்வேறு வசதிகள், சலுகைகள், கையூட்டல்களைக் கொடுத்து தமது விற்பனையை அதிகரித்துக் கொள்கின்றன. 'மக்களுக்கு மருந்துகள்' என்பது போய் இன்று 'மருந்துகளுக்காக மக்கள்' என்ற நிலை காணப்படுகிறது. அந்தளவிற்கு மருந்து உற்பத்தியிலும் விற்பனையிலும் நவீன வடிவில் மருந்து மா∴பியாக் கம்பனிகளின் ஆதிக்கம் வளர்ந்துள்ளது.

இது போன்றே அரசாங்க பொது மருத்துவமனைகளில் மருத்துவம் சீரழிந்த நிலைக்கு உள்ளாகிவருகிறது: அரசாங்க பொது மருத்துவமனைகள் 'தரும ஆஸ்பத்திரிகள்' என்று கூறப்படுவது மக்கள் மத்தியில் வழக்கம். காரணம் அங்கு பணம் எதுவும் செலுத்தாமல் மருத்துவம் செய்து நோய்களைக் குணப்படுத்தலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்பதாலாகும். இன்றும் ஏகப் பெரும்பான்மையான மக்கள் அவ்வாறே அரசாங்க பொது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சுகாதார மருத்துவத் துறையானது எப்பொழுதும் மக்களுக்கான இலவச சேவைத் துறையாக இருந்து வந்தது. அவற்றில் பட்டம் பெற்ற மருத்துவர்களும் பயிற்சி பெற்ற தாதிகளும் ஏனையோரும் அரசாங்க சம்பளங்களும் ஏனைய சலுகைகளும் பெற்று மக்களுக்குத் தமது சேவையினை வழங்கிவந்தனர். அதனால் சாதாரண மக்கள் 'கடவுளுக்கு அடுத்து மருத்துவர்கள்' என நம்பினர். ஆனால் இன்று மருத்துவர்கள் பணம் பணம் என பிய்த்துப் பிடுங்கும் தனியார் மருத்துவம் செய்வோராகி வருகின்றனர்.

கடந்த முப்பது வருட திறந்த பொருளாதாரக் கொள்கையானது அரசாங்க பொது மருத்துவத்தை சீரழிய வைத்து மருத்துவர்களை தனியார்துறை வைத்திய சாலைகளை நாடி ஓட வைத்திருக்கிறது. அத்துடன் தனியார் துறை மருத்துவத்தை விரிவடையவும் வைத்துள்ளது. மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் மனசாட்சி வழியில் மருத்துவம் செய்யும் வைத்தியர்களின் எண்ணிக்கை மிக மிகத் தாழ்ந்து நிற்கிறது. அதனாலேயே நேர்மையுடன் சேவை செய்யும் மருத்துவர்கள் மக்களால் போற்றப்படுவதும் அவ்வாறு இல்லாதோரை மக்கள் நிந்திப்பதையும் காணமுடிகிறது.

இன்று அரசாங்க பொது மருத்துவமனைகளில் சாதாரண மக்களே சென்று தமது நோய்களுக்கான சிகிச்சை பெறுகின்றனர். ஆனால் அவ்வாறு அங்கு செல்வோர் திருப்தியான் வைத்தியத்தைப் பெறமுடியாத நிலை மேன்மேலும் அதிகரித்து வருகிறது. யாழ் போதனா மருத்துவமனை வடபுலத்திலேயே பெரிய தொன்றாகும். அங்கே இலவச மருத்துவம் என்பதனால் சாதாரண மக்கள் பெருமளவிற்குச் செல்கிறார்கள்.

அண்மையில் அங்கு தனது அல்சர் எனப்படும் குடற் புண் நோய்க்குச் சிகிச்சை பெறச் சென்ற ஒரு நோயாளி இரண்டு வாரங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றார். அவர் அங்கு பெற்ற சிகிச்சையின் போது பதினையாயிரம் ரூபாவிற்கு மேல் செலவிடவேண்டி ஏற்பட்ட அனுபவத்தைக் கூறி இருந்தார். இரத்தப் பரிசோதனை முதல் எக்ஸ்ரே மற்றும் ஸ்கான் போன்ற யாவற்றையும் வெளியில் தனியார் மருத்துவ பரிசோதனைக் கூடங்களில் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை தான் எதிர் கொண்டதாகவும் கூறினார். அத்துடன் மருந்துகள் யாவற்றையும் வெளியே மருந்து விற்பனை நிலையங்களில் வாங்கியதாகவும் கூறினார். அதிலும் அதிக விலை கூடிய மருந்துகளைக் குறிப்பிட்ட மருந்தகங்களில் வாங்குமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்ததாகவும் கூறினார். இவ்வாறான நிலையே இன்று நாடு முழவதிலும் உள்ள அரசாங்க பொது மருத்துவமனைகளில் காணப்படுகிறது. கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில் சாதாரண வலி நிவாரணியான பரசிட்டமோல் போன்ற மருந்துகளைக் கூட வாங்குவது சிரமமாகக் காணப்ப டுகிறது.

அதேவேளை தனியார் மருத்துவம் நாளாந்தம் விரிவடைந்து வருகிறது. பெருநகரங்களிலும் இரண்டாம் நிலை நகரங்களிலும் இத்தனியார் மருத்துவமனைகள் மிக வேகமாக வளர்ச்சிபெற்று வருகின்றன. அண்மையில் கொழும்பின் புறநகர்ப் பிரதேசத்தில் ஜனாதிபதியே ஒரு தனியார் மருத்துவமனையைத் திறந்து வைத்தார். அன்மையில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் தமிழ் முதலாளி ஒருவர் தனது பத்திரிகை முதலீட்டை விற்று மீட்ட மூலதனத்தை தனியார் மருத்துவமனையில் முதலீடு செய்தார். இவை மட்டுமன்றி அரசாங்க மருத்துவர்கள் வெளியே கட்டணம் பெற்று நோயாளர்களைப் பார்வையிட்டு மருந்துகளைச் சிபார்சு செய்கின்றனர். சில வைத்தியர்கள் தமக்கான நடுத்தர மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் நடத்தி வருகின்றனர். அவ்வாறானவர்கள் ஒரு நாளில் இலட்ச ரூபாய்களுக்கு மேல் சம்பாதிக்கின்றனர். இவையாவும் தனியார் மருத்துவத் துறையின் விரிவாக்கத்தை எடுத்துக்காட்டி வருகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன அரசுக்கு வழிகாட்டி வற்புறுத்தி வருவதானது, சுகாதாரத் துறை, கல்வித் துறை ஆகியவற்றை தனியார்மயப்படுத்த வேண்டும் என்பதையாகும். இதற்கு அரசாங்கம் உள்ளார்ந்த அடிப்படையில் தயாராக இருக்கின்ற போதிலும் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்படும் என்பதால் வெவ்வேறு வழிகளில் அரசாங்கம் பொது மருத்துவத்தையும் சுகாதாரத் துறையையும் படிப் படியாகச் சீரழிய வைத்து காலப்போக்கில் அவற்றை இல்லாதொழிப்பதையும் அதன் மூலம் மருத்துவத்தை முழுமையாக தனியார் மயப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. எனவே, மக்கள், இலவசக் கல்வி, சுகாதாரத் துறை என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் தனியார்மயத்திற்கும் தாராளமயத்திற்கும் எதிராக முன்னின்று போராட வேண்டிய அவசியமும் தேவையும் நாளாந்தம் வலுவடைந்து செல்கின்றன.

ஆசிரியர் குழு

# முள்ளிவாய்க்காலில் இருந்து வெலிவேரியா ஊடாகப் பயணிக்கும் ராணுவமயம்

வெகுஜனன்

2013 ஓகஸ்ட் முதலாம் திகதி கம்பஹா மாவட்டத்தின் ரத்துபஸ்வல–வெலிவேரியாவில் சுத்தமான குடிநீர் கேட்டு மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அதில் ஆறாயிரம் வரையான மக்கள் பங்குகொண்டனர். தமது கிணறுகளில், நீர் நிலைகளில் சில காலமாக நீரில் அமிலத் தன்மை ஏற்பட்டு நீர் மாசடைந்து குடிப்பற்குத் தகுதியற்றதாகியதே அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினையாகும். இது பற்றி எவ்வளவோ எடுத்துக்கூறியும் மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு இவ்விடயம் காதுகளில் ஏறவும் இல்லை கண்களுக்குத் தெரியவும் இல்லை. இந்நிலையில் மக்கள் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்து தமக்கு சுத்தமான குடிநீர் தேவை என்பதை வலியுறுத்த ஒன்று திரண்டனர். சுத்தமான குடிநீர் கேட்ட மக்களுக்கு ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சி கொடுத்தது தண்ணீரை அல்ல, ராணுவத்தின் துப்பாக்கி ரவைகளையேயாகும்.

நியாயமான கோரிக்கையை முன்வைத்து ஒன்று கூடிய அப் பிரதேச மக்கள் மீது அரசு யந்திரத்தின் 'காவல் நாய்களாக' இருந்து வரும் ஆயுதப்படைகளின் ராணுவமும் அதிரடிப்படைப் பொலிசாரும் ஏவிவிடப்பட்டனர். அம் மக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், துப்பாக்கிச் சூட்டில் இரண்டு மாணவர்கள் உட்பட 27 வயதான ஒரு பிள்ளையின் தந்தையாகிய ஒரு தொழிலாளி ஆகிய மூன்று உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. நாற்பதுக்கு மேற்பட்ட பொது மக்கள் படுகாயப்பட்டனர். ஒரு ராணுவ வெறியாட்டமே அங்கு இடம்பெற்றது. கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றினுள் தஞ்சமடைந்த மக்களைக் கூட ராணுவம் விட்டு வைக்கவில்லை. அத்துடன் 'நாங்கள் புலிகளை ஒழித்தவர்கள். எங்களை மீறியா ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்' எனக்கூறி யுத்த மமதை கொண்ட ராணுவத்தால் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வெலிவேரியாத் தாக்குதல் சம்பவம் வெறுமனே ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. மக்களது சுத்தமான குடிநீர்க் கோரிக்கையும் திடீர் கோரிக்கை அல்ல. அப்பகுதியில் 1998ம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு றப்பர் கையுறை தயாரிக்கும் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவுநீர் காரணமாக அப்பிரதேச மக்களின் கிணறுகளில் நன்நீருக்கு நாசம் ஏற்பட்டது. சுமார் 300 கிணறுகளில் பெரும்பான்மையானவற்றில் நீர் அமிலத்தன்மையடைந்து மாசடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத நிலைக்கு உள்ளாகியது.

ஒரு தனியாருக்கு சொந்தமான தொழிற்சாலைக் கழிவு நீரால் மக்களது நன்நீர் மாசடைவிக்கப்பட்டது. ஆனால் முதலாளிக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் கொள்ளை லாபம் கிடைத்து வந்தது. அதில் வேலை செய்த தொழிலாளர்கள் சுரண்டப்பட்டதுடன் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள மக்களது நன்நீர் மாசடைவு, சூழல்




மாசடைவுகளால் பாரிய நோய்கள் எதிர்கொள்ளப்பட்டன. இத்தனைக்குப் பின்பும் எவ்வாறு மக்கள் அமைதியாக இருக்க முடியும்? எனவே தமக்குத் தெரிந்த வழிமுறையான வெகுஜனப் போராட்டத்தில் இறங்கினர்.

மனித நேயம் மிக்க அவ்வூர் பௌத்த பிக்கு ஒருவரும் வேறு சிலரும் ஏற்கனவே சுத்தமான குடிநீர் வேண்டி

>>>13

# வெலிவேரியா

## அரசும் அதன் அடக்குமுறைக் கரங்களும்



**மோகன்**

யூ.என்.பி அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அது தமிழ் இளைஞர்களைக் குறிவைத்தே இயற்றப்பட்டது என்று மக்கள் நம்பினர். ஆனால் அதன் முழு வலிமையும் சிங்கள இளைஞர்களை அழிப்பதற்கே 1988-89 காலத்தில் பயன்பட்டது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பேரில் கட்டியெழுப்பப்பட்ட ஆயுதப்படைகள் போர் முடிந்தும் வலுவூட்டப்படுவதையும், பல சமூக அலுவல்களில் ராணுவக் குறுக்கீட்டையும் பற்றித் தென்னிலங்கையில் நேர்மையான இடதுசாரிகள் சிலரை விட யாருமே பேசவில்லை. ஆனால் மாக்சிச லெனினிசவாதிகள் போரின் போதிலிருந்தே ராணுவத்தின் அதிகாரம் மேலோங்குவதன் அபாயங்கள் பற்றிப் பேசி வந்தனர். இதுவரை வடக்கிலும்-கிழக்கிலும் ராணுவமே அனைத்தையும் முடிவெடுக்கும் சக்தியாக உள்ளமை பற்றித் தெற்கின் அரசியற் கட்சிகள் கண்டு கொள்ளவில்லை.

அரச அடக்குமுறை முடிவில் முழுநாட்டையும் பாதிக்கும் என்பதும் நாடு ஃபாசிசப் பாதையில் நடத்தப்படுகிறது என்பதும் தமிழர் தேசியவாதிகள் உட்படப் பாராளுமன்ற அரசியல்வாதிகள் எவருக்குமே அண்மைவரை விளங்கவில்லை. இன்னமும் தேர்தல் மூலம் நாட்டு நிலைமைகளை மாற்றலாம் என்று அவர்கள் கனவு காண்கிறார்கள்.

இரண்டு ஆண்டுகள் முன்னர் சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் தமது சேமலாப நிதிப் பணத்தைக் கையாட அரசாங்கம் வகுத்த சதித்திட்டத்தை எதிர்த்து ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தியபோது ஒரு இளந் தொழிலாளி சுட்டுக்கொல்லப்பட்டார். மறு வருடம் எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு இளம் மீனவர் சுடப்பட்டு பலியானார். இவை நாடு எத்திசையில் போகிறது என்பதன் அறிகுறிகள். அதற்கு மாற்றாக மக்களை அணிதிரட்டுவதற்கான நோக்கமோ ஆற்றலோ நம்பகத்தன்மையோ பாராளுமன்றக் கட்சிகட்கு இல்லை. அவை இன்னமும் தேர்தல் கனவுகளில் தான் மூழ்கியுள்ளன.

யூலை மாதம் கம்பஹா பகுதியில் வெலிவேரிய என்ற சிறுநகரில் நீர் மாசடைந்து மனித நுகர்விற்கு ஆபத்தான நிலை ஏற்பட்டதால் அதைப் பற்றி முறைப்பட்டுச் சோர்ந்து போன மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். அயல் ஊர்களைச் சேர்ந்தவர்களும் தமது பிரதேசங்களில் உள்ள நீரின் தரம் பற்றிக் கவலை தெரிவித்து ஓகஸ்ட் முதலாம் திகதி ஒரு பெரும் ஆர்ப்பாட்ம் நிகழ்ந்தது. அந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு கண்டி வீதிப் போக்குவரத்தையும் பாதித்தது என்று காரணங்கூறி ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக ராணுவம் களமிறக்கப்பட்டது. அதன் பயனாகத் துப்பாக்கிச் சூட்டில் மூவர் இறந்ததாகவும் மேலும் பலர் படுகாயப்பட்டதாகவும், செய்திகள் தெரிவித்தன.

> **பிரச்சினைக்கு மூல காரணமான றப்பர் கையுறை தயாரிப்புக் கம்பனியின் செயற்பாடுகளும் அக்கம்பனிக்கும் அரசாங்கத்தின் பெரும் புள்ளிகளுக்கும் உள்ள உறவும் ஊடகங்களால் கொஞ்சம் அடக்கியே வாசிக்கப்பட்டுள்ளது. வெலிவேரிய அனுபவம் பெரு முதலாளிய நிறுவனங்களால் மனிதச் சுற்றுச்சூழல் சீரழிவது, அரசாங்கத்தின் சமூக அக்கறையின்மை, அரச அடக்குமுறை இயந்திரத்தின் செயற்பாடு ஆகிய மூன்று பரிமாணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளது**

ராணுவம் மிகவும் மோசமான முறையில் நடத்திய தாக்குதலை ஆர்ப்பாட்டத்தலத்திற்கும் அப்பால் கிறிஸ்தவக் கோவில் ஒன்றுக்குள்ளும் தொடர்ந்தமை இத்தாக்குதல் திட்டமிட்டே மக்களைப் பயமுறுத்தி அடக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது என்பதை காட்டுகிறது. அரசாங்கத்தின் அணுகுமுறை வடக்கில் நடக்கும் கொடுமைகளைப் பற்றியது போல மிகவும் மெத்தனமாகவும் அமைதியாக ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியோரைக் குற்றஞ்சாட்டுவதாகவுமே அமைந்தமை அப்பகுதி மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி நாடு பரவலாகவும் அரசாங்கம் அந்த ஆர்ப்பாட்டத்தை கையாண்ட விதம் பற்றிய கோபத்தை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும் பிரச்சினைக்கு மூல காரணமான றப்பர் கையுறை தயாரிப்புக் கம்பனியின் செயற்பாடுகளும் அக்கம்பனிக்கும் அரசாங்கத்தின் பெரும் புள்ளிகளுக்கும் உள்ள உறவும் ஊடகங்களால் கொஞ்சம் அடக்கியே வாசிக்கப்பட்டுள்ளது. வெலிவேரிய அனுபவம் பெரு முதலாளிய நிறுவனங்களால் மனிதச் சுற்றுச்சூழல் சீரழிவது, அரசாங்கத்தின் சமூக அக்கறையின்மை, அரச அடக்குமுறை இயந்திரத்தின் செயற்பாடு ஆகிய மூன்று பரிமாணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளது.

எனினும் பேசப்படுகிற பிரச்சினைகளாக அரசாங்கம் ராணுவத்தைக் கையாண்ட விதமும், உரிய முறையில் விசாரணைகளைக் கையாளாமையும், இச்சம்பவம் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களும் போர்க் குற்றங்களும் பற்றிய சர்வதேச நெருக்குவாரங்களை எவ்வாறு பாதிக்கும் என்பனவாகவுமே காணப்படுகின்றன. இப்பிரச்சினையின் அடிப்படை அம்சங்கள் மக்களிடையே விரிவாகப் பேசப்படவும் வேண்டும். அத்துடன் ராணுவத்தின் வலிமையைக் கட்டுப்படுத்துவதும் ஒரு அரசியற் கோரிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு நாட்டின் ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரிகள் சக்திகள் துணிய வேண்டும்.

அதேவேளை ஓகஸ்ற் 10ம் திகதி மாலை கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள பள்ளிவாசல் ஒன்றை ஒரு ஆயுதக் கும்பல் தாக்கியதால் அங்கு ஒரு கைகலப்பு நேர்ந்தது. அதைக் கையாளப் பொலிசாரும் அதிரடிப் படையினரும் அழைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்ததாகக் கூறப்பட்டது. இச்சம்பவத்ற்கு காரணமாக எவ்விதமான பின்னணியும் இல்லாத நிலையில், இது அரசாங்கத்தின் மீதும் ராணுவத்தின் மீதும் வெலிவேரிய சம்பவத்தால் ஏற்பட்ட மக்களின் சினத்தைச் சிதறடிக்கும் ஒரு நிகழ்ச்சியோ என்ற ஐயமும் எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் அண்மைக்கால நிகழ்வுகள் சிங்கள பௌத்த மதவெறியாளர்களும், அரசாங்கப் படைகளும் நாட்டை ஒரு வன்முறைச் சூழலுக்குள் மீண்டும் ஆழ்த்தி ஒரு ராணுவ ஃபாசிச ஆட்சியை நோக்கி நகர்த்தும் அபாயத்திற்கான எச்சரிக்கை மணிகளாகவே ஒலிக்கின்றன.

• • •

# வடக்கு மாகாண சபை:

## ஒரு வெற்றிடத்திற்கான போட்டி

> **மக்கள் அரசாங்கத்தை நிராகரிப்பது, தன்னளவில், ஒரு சரியான ஜனநாயக நிலைப்பாடு தான். இத்தேர்தலில் வாக்களிப்பது என்பது ஜனநாயக மறுப்பு அரசாங்கத்தை நிராகரிப்பது என்பதை விட்டால் வேறு எந்த அரசியற் பெறுமதியும் அற்றது.**

ஒருவிதமான அரசியல் பொருளாதார அதிகாரங்களோ, பெறுமதியோ அற்ற ஒரு மாகாண சபைக்கு யார் முதலமைச்சர் என்பதற்காக ஆளையாள் தாக்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவலிக்கு மருந்தாக முன்னாள் உயர்நீதிமான்ற நீதவான் சி.வி.விக்னேஸ்வரன் கிடைத்தார். எனினும் மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் பட்டியல் முடிவாகும் வரை குத்துவெட்டுக்கள் குறையின்றி நடந்தேறின.



முன்னெப்போதையும் விட யாழ்ப்பாணத்தில் நடக்கும் இத்தேர்தலில் பேரினவாத ஆளும் கட்சியை மையப்படுத்தியே மக்கள் தம் முடிவை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஒரு நல்ல நியாயமுமின்றி வட மாகாண சபைக்கான தேர்தல் 2009 முதல் இன்றுவரை நான்கு ஆண்டுகளாகத் தவிர்க்கப்பட்டது. அதைவிடவும் சர்வதேச நெருக்குவாரங்களைத் தவிர்க்கும் முகமாக இந்த ஆண்டுக்குள் தேர்தலை நடத்த முன்வந்த பிறகும், அதைத் தட்டிக் கழிக்கப் பல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இன்றும் தேர்தல் ஒழுங்கீனங்களும் தேர்தல் வன்முறைகளும் மிரட்டல்களும் நிகழும் ஒரு சூழ்நிலையில் மக்கள் இத்தேர்தலை அரசிற்கும் சனநாயக உரிமைகட்குமிடையிலான ஒரு போட்டியாக நோக்குவதற்கு நல்ல நியாயம் உண்டு.

தேர்தலை வெல்வதற்கான வாய்ப்பு இல்லை என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்த விடயம். எனினும் த.தே.கூ. அல்லது அரசாங்கத்திற்கு எதிரான' ஒரு கூட்டமைப்பாக அமையக் கூடிய எந்தக் கட்சிகளின் கூட்டும் ஏகப்பெரும்பான்மையைப் பெற இயலாது தடுக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக உள்ளது. பல சுயெச்சை வேட்பாளர் குழுக்களின் களமிறக்கலில் முன்னர் போன்று அரசாங்கத் தூண்டுதலுக்கும் ஒரு பங்குண்டு. எனவே மக்கள் அரசாங்கத்தை நிராகரிப்பது, தன்னளவில், ஒரு சரியான ஜனநாயக நிலைப்பாடுதான்.

எனினும், த.தே.கூ என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளை அடையாளப்படுத்தும் ஒரு அமைப்பாக இன்னமும் தன்னை அமைத்துக் கொள்ளவில்லை. உருப்படியான அரசியல் வேலைத்திட்டமும் அதனிடம் இல்லை. அது இன்னமும் பழைய மேட்டுக்குடிப் பாராளுமன்ற அரசியற் பாணியிலேயே இயங்குகின்றது. அதேவேளை அதற்கு மாற்றாகப் போட்டியிடுகிற எந்த அணியினரிடமும் உருப்படியான ஒரு மாற்று வேலைத் திட்டமும் இல்லை. அனைத்தினதும் முக்கியமாகப் பணமும், மிரட்டலும், மோசடிகளுமே ஆதிக்கஞ் செலுத்துகிற தேர்தல் சூழல் முழுநாட்டிலும் உள்ள போதும் அது வடக்கு–கிழக்கில் மிக மோசமாக உள்ளது என்பதை அறிவோம். எனவே ஒரு மாற்று அரசியல் வழியை மக்களிடையே ஒரு பிரசாரமாகவேனும் கொண்டு செல்லக்கூடிய ஒரு வேட்பாளர் குழுவுக்கான ஒரு வாய்புமற்ற ஜனநாயக விரோதச் சூழலில் மக்களுக்கு யாரை பரிந்துரைப்பது என்பது எளிதல்ல.

த.தே.கூ. விக்கினேஸ்வரன் மூலம் தனக்கு ஒரு நம்பகமான தோற்றத்தைக் காட்ட முயன்றாலும் விக்னேஸ்வரன் இதுவரை த.தே.கூ. அரசியலுடன் தன்னை அடையாளப்படுத்தாது விலகி நிற்பதுடன் மாகாணசபை மூலம் மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு அப்பால் வேறு நோக்கம் தனக்கு இல்லை என்று கூறியுள்ளார். இந்தத் தெளிவு எவ்வளவு காலம் நிலைக்கும் என்பது இன்னொரு கேள்வியேயாயினும் விக்னேஸ்வரன் இதுவரை மிக நிதானமாகவே பேசியும் நடந்தும் வந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

அவருடைய பின்புலம் மேட்டுக்குடிப் பின்புலமாயினும் நீதவானாகக் கடமையாற்றிய காலத்தில் அவருடைய பணியை அவர் மிகவும் தைரியமாக நிறைவேற்றியமையும், ஓய்வின் பின்பும் பல விடயங்களில் அவருடைய துணிவான கருத்துரைப்புகளும் அவருடைய தலைமையிலான வேட்பாளர் பட்டியலுக்கு வலுச் சேர்க்கின்றன. தமிழ்மக்களின் தேசிய இன உரிமைகளை வென்றெடுக்க அவை உதவுவது கடினம். அவருக்கெதிரான பேரினவாத நிந்தனைகளும் தனிப்பட்ட தாக்குதல்களும் வருந்தத்தக்கன மட்டுமன்றி, த.தே.கூட்டமைப்புக்கு ஆதரவை வலுப்படுத்தவும் கூடும்.

எனினும் இத்தேர்தலில் வாக்களிப்பது என்பது ஜனநாயக மறுப்பு அரசாங்கத்தை நிராகரிப்பது என்பதை விட்டால் வேறு எந்த அரசியற் பெறுமதியுமற்றது. அதை மக்கள் எவ்வாறு வெளிப்படுத்துவார்கள் என்பது தனிப்பட்ட வேட்பாளர்களையும் வேட்பாளர் பட்டியல்களைச் சார்ந்தும் வேறுபடலாம். அதேவேளை லஞ்சம், மிரட்டல், தேர்தல் மோசடிகள் போன்றவையும் தமக்குரிய பங்கை ஆற்றும் எனவும் எதிர்பார்க்கலாம். மொத்தத்தில் மக்கள் முன்னாலுள்ள தெரிவு மிகப் பரிதாபமானது.

• • •

# இந்திய முதலீடுகளும் சீனப் பூச்சாண்டியும்

சிறீ

அண்மைக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப்படுவோர் சீன எதிர்ப்பைக் கக்கி வருகின்றனர். அதேவேளை தமது இந்திய அடிமை விசுவாசத்தை அழகாக் காட்டியும் வருகிறார்கள். அவர்களது சீன எதிர்ப்பு எனபது மாக்சிச-கம்யூனிச-சோஷலிச-இடதுசாரி எதிர்ப்பேயாகும். இன்று சீனாவில் மாக்சிசமும், சோஷலிசமும் திசைமாறி விட்டன. அங்கு பெயர்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. சீனா இன்று ஏகாதிபத்தியப் பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிட்டது. அது மாவோவின் தலைமையிலான சோஷலிச சீனாவின் நிலைக்குத் திரும்புமா என்பது பலத்த சந்தேகத்திற்குரியதாகும். சீனா இலங்கையில் மேற்கொள்ளும் நகர்வுகள் புறக்கணிக்கக் கூடியவை அல்ல. அவை ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவை.

ஆனால் தமிழ்த் தரப்பின் இந்திய விசுவாசிகள் சீன எதிர்ப்பைக் கக்குவது இந்திய எசமானர்களிடம் நல்லபிள்ளைப் பட்டம் பெறவேயன்றி தமிழ் மக்களின் நலன் சார்ந்து அல்ல. அதுமட்டுமன்றி அவர்களது வெள்ளைத் தோல் எசமானர்களான அமெரிக்க ஐரோப்பியரின் முதலீட்டு வருகை பற்றி வாய்களை இறுக்கி மௌனித்து கொள்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை யார் வந்தாலும், எவர் முதலீடுகள் செய்தாலும் அவை இலங்கை மக்கள் அனைவரையும் சுரண்டி நமது வளங்களைக் கொள்ளையிட்டுச் செல்வதற்கேயாகும். சீனாவோ இந்தியாவோ பாகிஸ்தானோ அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ எவையானாலும் இங்கே என்ன செய்கிறார்கள் என்பது ஆழ்ந்து நோக்க வேண்டியதாகும்.

இந்தியா முதலிடுவதற்கும், சுரண்டுவதற்கும், வளங்களைக் கொள்ளையடிப்பதற்கும் வக்காலத்து வாங்கி அமெரிக்க ஐரோப்பியர்களுக்கு சாமரை வீசும் அதேவேளை சீனா வந்து விட்டது என அலறிப் பூச்சாண்டி காட்டுவது அரசியல் அறிவிலிகள் அல்லது முட்டாள்கள் செய்யும் அறியாமைப் பிரசாரங்களாகும்.

இந்த நிலையில் வடகிழக்குத் தமிழ் மக்களுக்கு இந்தியாவின் அச்சுறுத்தல் அதிகமாகவுள்ளதா அல்லது சீனாவின் அச்சுறுத்தல் உள்ளதா என்பதை நடப்பு விவகாரங்களில் இருந்து காண்பதே உண்மைப் பொய்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த உதவும். சீனா இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதைவிட பாரிய பொருளாதார நடவடிக்கைகளை தென்பகுதிகளில் மேற்கொள்கின்றது. இது தென்னாசியாவில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் அதனது நிகழ்ச்சிநிரலுக்குட்பட்டது.

இந்தியா வட கிழக்கினை முன்படுத்தி தன்னுடைய பொருளாதார உதவிகளை செயற்படுத்துகிறது. இந்திய திருகோணமலையில் 102 எண்ணெய்க் குதங்களை 2002ல் இருந்து தன் வசம் கொண்டுள்ளது. இதில் ஒரு சில குதங்களை மட்டுமே அது பயன்படுத்துகின்றபோதும் சகலதையும் தனவசமே கொண்டுள்ளது. இந்தியாவின் முதலீட்டு திட்டங்களுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட சம்பூரில் 9600 ஏக்கர் காணியை அதியுயர் பாதுகாப்பு வலயமாக 2006ல் பிரகடனபடுத்திய இலங்கை அரசு அங்கிருந்து 1240 குடும்பங்களை வெளியேற்றியது.

சம்பூரில்
146 ஏக்கர் குடியிருப்பு நிலம்
120 ஏக்கர் தோட்டக் காணிகள்
273 ஏக்கர் நெற்காணிகள்
12 குளங்கள்
21 மீன்பிடித் துறைகள் உட்பட

இந்துக் கோவில்கள், பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள் என யாவும் இன்று உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளன. இன்று சம்பூரை இந்தியா முழுமையாக விழுங்கிக் கொண்டிருக்கின்றது. சம்பூரின் 540 ஏக்கர் நிலம் நிலக்கரி மின் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 818 ஏக்கர் காணிகள் பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 2006ல் வெளியேறிய மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவது மறுக்கப்படுகிறது. நிலக்கரி மூலமான மின் உற்பத்தி என்பது சூழல் பாதுகாப்பு காரணங்களுக்காக இன்று வழக்கொழிந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்திய எண்ணைக் கம்பனியானது இன்று இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் 43.5 சதவீதத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இதைவிட எண்ணெய் இறக்குமதி விநியோக கட்டமைப்பில் மூன்றில் ஒரு பகுதியை கொண்டுள்ளது. அத்தோடு பிரதான நகரங்களில் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் கொண்டுள்ளது. இவையாவும் இந்தியாவால் மிரட்டியே பெறப்பட்டது. இலங்கைக்கு ஒரு சொட்டு எண்ணையையும் ஏற்றுமதி செய்யாத, இலங்கையின் எண்ணை வணிகத்தில் பங்குகொள்ள எவ்வித நியாயத்தையும் கொண்டிராத இந்தியா இலங்கையின் எரிபொருள் விநியோகம் வர்த்தகம் என்பவற்றில் தனியுரிமையை நோக்கி நகர்கின்றது.

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையுள்ள புகையிரதப்பாதை அமைக்கும் திட்டத்தை இந்தியா மேற்கொள்கிறது. சென்ற வருடம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட றெயில் என்ஜின்களில் ஒன்று வெள்ளோட்டத்தின் போது இடைநடுவில் நின்றது. புகையிரத என்ஜின்கள் பெட்டிகள் இறக்குமதியில் பெரும்பான்மையானவை இந்தியாவிடமிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவதும் அவை பெரும்பாலும் தரம் குறைந்தவையாகக் காணப்பட்டு சர்ச்சைக்குள்ளாகிவருவதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான அதிவேகப் பாதையால் இந்தியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனக் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பு- காங்கேசன்துறை புகையிரதப் பாதை அமைத்தபின் அது யாரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமெனக் கூறத் தயாரில்லை. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியையும் இந்தியாவே மேற்கொள்கிறது. யுத்தத்தின் போது கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள், வள்ளங்கள் என்பவற்றை வெளியே எடுக்கும் போர்வையில் இலங்கையின் வடகடல் ஆழமாக்கப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவின் பாரிய கப்பல்களின் நடமாட்டத்திற்கு வழிசமைக்கப்படுகிறது. இவை எதிர்காலத்தில் யாரின் பாதுகாப்புக்கும், பொருளாதார நலன்களுக்கும் அச்சுறுத்தலானவை என்பது இக்குறுந்தேசிய இந்திய விசுவாசிகளுக்குத் தெரியாததல்ல.



பொதுத்தேவைக்கெனக் கூறி, பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கென்று 6400 ஏக்கர் காணிகளை அரசு சுவீகரித்துள்ளது. 1983ல் டீ.சீ.8 ரக ராட்சத விமானங்கள் தரை இறங்கிய ஓடு பாதையை. யுத்தத்தின் போது பாரிய விமானங்கள் இறங்கிய ஓடு பாதையை செப்பனிட்டாலே போதுமானது. வேண்டுமானால் கட்டுப்பாட்டுக் கோபுரத்தையும் நவீனமயப்படுத்தலாம். ஆனால் உண்மையில் இந்திய இராணுவத் தேவைக்காக மிகப்பெரிய எடுப்பில் பலாலி விமான நிலையம் புனரமைக்கப்படுகிறது.

யுத்தத்தின் போது எமது மீனவர்களுக்கு மீன் பிடிப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இதனால் எம்மைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் அதிக அளவில் மீன் வளம் காணப்படுகிறது. இந்த நிலையைப் பயன்படுத்தி இந்திய மீன்பிடிப் பெரு முதலாளிகளிகள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி எமது கடற்பரப்பில் நூற்றுக்கணக்கான வள்ளங்கள் ரோலர்கள் மூலம் அத்துமீறி வந்து மீன் பிடிக்கின்றார்கள். இந்த ஆக்கிரமிப்புக்கு சாதாரண வறிய மீனவர்கள் பயன்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கும் எமது மீனவர்களுக்கும் இடையில் முரண்பாடும் முறுகலும் திட்டமிட்டே விதைக்கப்படுகின்றது. இலங்கைக் கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடித்து வருமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் அப்பாவிகள். ஆனால் அவர்கள் இலங்கைக்குள் வந்து தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைக் கொண்டு மீன் பிடிக்க அனுமதிக்க முடியாது. இவ்வாறு அத்துமீறும் போது அதில் அப்பாவி மீனவர்களே பாதிக்கப்படுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறியமைக்காக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விளக்கமறியலில் வைத்த நீதவானை இந்தியத் துணைதூதரக அதிகாரி மிரட்டி மீனவர்களை விடுவித்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை த.தே. கூட்டமைப்பினர் கண்டிப்பதே கிடையாது. இதற்குக் காரணம் அடிமை விசுவாசமேயாகும். இந்திய மீனவர்கள் அத்துமீறுவதும், இலங்கை மீன்வளங்கள் சூறையாடப்படுவதும், மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுவதும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மோலாக தென் இந்திய, இலங்கை மக்களுக்கு உடனடி ஆபத்தாக மாறியுள்ள கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பில் மறந்தும் பேசி விடக்கூடாது என்பதில் இந்திய அடிமைகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உசாராக உள்ளனர். அணுஉலைக்கெதிரான மக்கள் போரராட்டத்திறகு ஆதரவாகவோ இந்திய, தமிழக அரசுகள் அம் மக்கள் போரட்டத்தின் மீது ஏவிவரும் ஒடுக்குமுறைக்கு எதிராகவோ ஒரு வார்த்தை பேசவோ இந்த அடிமை விசுவாசிகள் தயாரில்லை. அணு உலை செயற்படத் தொடங்கினால் அணுக் கழிவுகளை எங்கே கொட்டுவீர்கள் என இந்திய உச்சநீதிமன்றம் அணு ஆலை நிர்வாகிகளைக் கேட்ட கேள்விக்கு அவர்களிடம் இதுவரை பதில் இல்லை. அணு உலை முழுமையாக செயற்பட தொடங்கினாலோ, அணுக்கழிவுகள் தென்னிந்திய கடற்கரையில் கொட்டப்பட்டாலோ பாதிக்கப்பட்டுப் போவது எமது மக்களுமேயாகும். கூடங்குளம் அணுமின் நிலையத்தில் எதிர்பாராத விபத்தினால் ஏற்படப் போகும் அனர்த்தத்தில் பெருமளவு பாதிக்கப்படப்போவது வடபகுதி மக்களே. இதுபற்றி சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் அக்கறையில்லை, கூத்தமைப்புக்கும் அக்கறையில்லை. அவர்களுக்கு இந்திய பாதுகாப்பு பற்றியே கவலை.

- **இந்தியா திருகோணமலையில் 102 எண்ணெய்க் குதங்களை 2002ல் இருந்து தன் வசம் கொண்டுள்ளது.**
- **இந்தியாவின் முதலீட்டு திட்டங்களுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட சம்பூரில் 9600 ஏக்கர் காணிகள் அதி உயர் பாதுகாப்பு வலயமாக 2006ல் பிரகடனப்படுத்திய அரசு அங்கிருந்து 1240 குடும்பங்களை வெளியேற்றியது.**
- **சம்பூரில் 146 ஏக்கர் குடியிருப்பு நிலம் 120 ஏக்கர் தோட்டக் காணிகள், 273 ஏக்கர் நெற்காணிகள், 12 குளங்கள், 21 மீன்பிடித் துறைகள் உட்பட, இந்துக் கோவில்கள், பொதுக் கட்டிடங்கள், பாடசாலைகள் என யாவும் உயர் பாதுகாப்பு வலயத்தில உள்ளது.**
- **சம்பூரின் 540 ஏக்கர் நிலம் நிலக்கரி மின் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 818 ஏக்கர் காணிகள் பொருளாதார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.**

மன்னாரில் எண்ணெய் அகழ்விற்கு டெண்டர் இல்லாமலே இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி ஏலவே சண்டே ரைம்ஸ் 2012 செப்டம்பர் அளவில், இந்தியக் கம்பனி கோட்டையில் பாரிய திட்டமொன்றைப் பெற்றுள்ளதாக செய்தி வெளியிட்டிருந்தது. 13+, 13- என்று அவ்வப்போது இந்தியா எதையாவது கதைத்து தனது பொருளாதார ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றது. இதனை காட்டி தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழர் தலையில் மிளகாய் அரைத்து வருகின்றது.

இந்தியாவின் புது டில்லியில் பதிவு செய்யப்பட்ட 'கிறிஷ் குழமம்' (KRISH GROUP) கொழும்பு நகரின் மையத்தில் அமைந்துள்ள நிலமொன்றை 490 கோடி ரூபாவிற்கு 99 வருட காலத்திற்கு குத்தகைக்குப் பெற்றுள்ளது. ஜனாதிபதியே இத் திட்ட ஆலோசனையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தார். 'கிறிஸ் குழமம்' இலங்கையில் பொருளாதார கட்டுமானத் துறையில் தொழிலை மேற்கொள்ளும். இக்கம்பனியின் கீழ் அமைக்கப்படும் மிக உயர்ந்த 'ட்ரான்ஸ்வேக் கோபுரம்' திட்டத்திற்கு இந்தியா 46 கோடி அமெரிக்க டொலர்களை செலவிடும். இந்திய வர்த்த அமைச்சர் ஆனந்த் சர்மா, கொழும்பில் இடம்பெற்ற இந்திய இலங்கை நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் செயலமரவின் போது, 2105ம் ஆண்டளவில் இலங்கையுடனான இந்திய வர்த்தகம் ஆயிரம் கோடி டொலர்களாக அதகரிக்குமெனத் தெரிவித்திருந்தார்.

மேற்கூறப்பட்ட நிலவரங்களில் இருந்து ஆபத்து யாரிடமிருந்து வருகிறதென்பதை மக்கள் விளங்கிக் கொள்ள முடியும். நேர்மையான அரசியல் பார்வையற்ற அறிக்கைகளை நம்பி வினையாற்றுவது என்பதற்கு நமது கண்முன்னே நமது நாடு கொள்ளையடிக்கப்படுவதற்கான உரிமையை நாம் அந்நிய சக்திகளுக்கு வழங்குகின்றோம் என்பதே பொருளாகும். இலங்கையின் மீது பொருளாதார ஆக்கிரமிப்பை மேற்கொண்டு நவ தாராண்மைவாதத்தை திணிக்கும் எந்த அந்நிய சக்திகளையும் -அது இந்தியாவாகவோ சீனாவாகவோ ஜப்பானாகவோ அமெரிக்காவாகவோ மேற்கு ஐரோப்பாவாகவோ இருக்கலாம்- எதிர்த்துப் போராட அணிதிரள வேண்டியது எமது கடமையாகும்.




யாழ்ப்பாணத்தில் ஒரு குடைக்குக் கீழ் திருமணமாகாத ஆணும் பெண்ணும் ஜோடியாக இருப்பதைத் தடை செய்யுமாறு ஜூன் பிற்பகுதியில் 'சிவில் பாதுகாப்புக் குழு' கோரியுள்ளதாகச் செய்திகள் வந்தன. வயதுவந்த காதலர்கள் வீட்டை விட்டுப் போனால் அவர்களைப் பிடித்துத் தருவதற்குப் பொலிஸ் மறுப்பதாகவும் அந்தக் குழு முறைப்பட்டுள்ளது. கொழும்பில் ஒரு குடைக்குக் கீழ் ஆணும் பெண்ணும் இருந்தால் குற்றமில்லையாம். ஆனால் அது குடாநாட்டுக் கலாசாரத்துக்கு மட்டும் பொருந்ததாம். இந்த விதமான காதல் எதிர்ப்பின் நோக்கமென்ன?

காதல் என்ற பேரில் இளமைத் துடிப்பில் தமது எதிர்காலம் பற்றி ஒரு ஆணும் பெண்ணும் அவசர முடிவு எடுப்பதையோ பாலுறவு பற்றி எச்சரிக்கையின்றி நடப்பதையோ பற்றிய கவலையின் வெளிப்பாடாக அது இருந்தால் அதை வரவேற்கலாம். ஆனால் உண்மையான கவலை ஏதென்றால் குடாநாட்டுக் கலாசாரம் குலைந்து விடும் என்பதுதான். சாதிக்கு வெளியே காதலிப்பதும் மணம் முடிப்பதும், சமூக அந்தஸ்து வேறுபாட்டை மீறிக் காதலிப்பதும் மணம் முடிப்பதும் அக்கலாசாரத்திற்குக் கேடானது. அதுதான் உண்மையான கவலை. சீதனம் வாங்குவதும் அந்தக் கவலையின் ஒரு பகுதி அல்லவா! இப்படிப்பட்ட கவலைகள் பண்பாடு பற்றியனவல்ல, பழமைவாதத்தைப் பேணுவது பற்றியவை.

நமது பண்பாட்டின் காவலர்கள் கவனிக்க வேண்டியப் பிரச்சினைகள் சில உள்ளன. பெண்கள் முப்பது வயது தாண்டியும் மணம் முடிக்காமல் இருப்பது ஏன்? அது நமது பண்பாடு என்பதாலா? தகாத பாலுறவுகள் குடும்பங்களுள்

**பண்பாட்டுப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை. அதற்குப் பொருளாதாரக் காரணங்கள் உண்டு. அவற்றைப் புறக்கணித்துவிட்டுக் காதலையும், காதல் திருமணத்தையும் மட்டும் குறி வைப்பது சமூக அக்கறையாகாது.**

நடக்கக் காரணம் என்ன? அவற்றைப் பேசுவது நமது பண்பாட்டுக்கு ஒவ்வாதது என்பதாலா? குடாநாட்டுச் சமூகம் வேகமாகச் சீரழிந்து போகிறது என்பதில் உண்மையுண்டு. அதற்கான காரணங்கள் எவையென்று நமது பண்பாட்டின் காவலர்கள் அறிய நியாயமில்லை.

நமது பண்பாட்டில் பேணத்தக்க நல்ல அம்சங்கள் உள்ளன. அவையெல்லாம் நுகர்வுக் கலாசாரத்தின் பயனாகச் சீரழிகின்றன. குடாநாட்டின் ஜனநாயக விரோதச் சூழல், விடயங்களைப் பகிரங்கமாகப் பேசித்தீர்க்க வழி செய்யவில்லை. ராணுவமும் அரச சார்பு அமைப்புக்களும் சீரழியும் பண்பாட்டை ஊக்குவிக்கிறார்கள். வயது குறைந்தோரை மது பாவனைக்கும் போதை மருந்துப் பாவனைக்கும் குற்றச் செயல்கட்கும் பழக்குவோர் யார்? இவற்றையெல்லாம் விசாரிப்போமானால் பண்பாட்டுப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை எனவும் அதற்குப் பொருளாதாரக் காரணங்கள் உண்டென்றும் விளங்கும். அவற்றைப் புறக்கணித்துவிட்டுக் காதலையும் காதல் திருமணத்தையும் மட்டும் குறி வைப்பது சமூக அக்கறையாகாது.

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 22

வெகுஜனன்

2004 டிசம்பர் இறுதி வாரத்தில் ஓரிரு மணி நேரத்திற்குள் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவானது ஏனைய கரையோரப் பிரதேசங்களை விடக் கிழக்கு, வடக்கில் பெரு நாசங்களை விளைவித்துக் கொண்டது. இதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கமும் தப்ப முடியவில்லை. அவர்களுக்கு உயிரழிவுகளும் ராணுவத் தளபாடங்களின் இழப்புகளும் ஏற்பட்டன. இருப்பினும் அவர்களிடம் இருந்து வந்த வளங்களும் வெளியில் இருந்து கிடைத்த பெரும் நிதி உதவிகளும் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளப் போதுமானதாக இருந்தன. அதனைத் தொடர்ந்து வந்த அரசியல் ராணுவ நிலைமைகள் புலிகள் இயக்கத்திற்கு ஏறுமுகமாக இருக்கவில்லை. அவை புலிகள் இயக்கத்தின் இறுதிக்கட்ட நிலைகளுக்கான நகர்வுகளாக முன் செல்ல ஆரம்பித்தன.

**மகிந்த தரப்பினிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை புலிகள் பெற்றனர் என்ற வதந்தி பலமாகப் பரவியது. அத்துடன் மகிந்த வெற்றி பெற்றால் அமெரிக்க மேற்குலகுடன் முரண்பட்டு நிற்பாரென்றும் அதன் மூலம் தாம் அமெரிக்க மேற்குலகின் அரவணைப்பைப் பெற்று தமது போராட்ட வேகத்தை முனைப்படுத்தலாம் எனவும் நம்பினர். ஆனால் அது முற்றாகவே பொய்த்துக் கொண்டது.**

2005 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அதில் புலிகள் இயக்கம் எடுத்த நிலைப்பாடு அரசியல் விவேகமற்றதெனவும் தூர நோக்கற்றதெனவும் நிரூபித்துக் கொண்டது. தேர்தலை வடக்கு கிழக்கில் நிராகரிப்பது என்றும் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும் சடுதியாக முடிவு செய்து கூறியதன் மூலம் ரணிலின் தோல்வியையும் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியையும் உறுதிப்படுத்தினர். இதில் மகிந்த தரப்பிலிருந்து பெருந்தொகைப் பணம் புலிகள் பெற்றனர் என்ற வதந்தி பலமாகப் பரவியது. அத்துடன் மகிந்த வெற்றிபெற்றால் அமெரிக்க மேற்குலகுடன் முரண்பட்டு நிற்பாரென்றும் அதன் மூலம் தாம் அமெரிக்க மேற்குலகின் அரவணைப்பைப் பெற்று தமது போராட்ட வேகத்தை முனைப்படுத்தலாம் எனவும் நம்பினர். ஆனால் அது முற்றாகவே பொய்த்துக் கொண்டது. இது அமெரிக்க மேற்குலகையும் மகிந்த ராஜபக்ஷவையும் புரிந்துகொள்ளாமையின் விளைவாகும்.


மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அவரது சகோதரர்கள், குடும்பத்தவர்கள், இரத்த உறவினர்கள் அனைவரையும் தன்னோடு இணைத்து இறுக்கி அந்த அரவணைப்பின் நடுநாயகமாகிக் கொண்டார். அதன் போக்கில் பசில் ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ ஆகியோர் அவருக்கு இரண்டு கரங்களாகச் செயற்பட ஆரம்பித்தனர். அதனாலேயே கோதாபய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதேவேளை சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக்கப்பட்டார். இவர்களது நியமனங்கள் யுத்தத்தின் மூலம் தேசிய இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் உள்ளார்ந்த திட்டத்தினை வெளிப்படுத்தியது. எனவே விடயங்கள் ராணுவ வியூகங்களை அமைப்பதிலும் ராணுவத்தினரது எண்ணிக்கையை விஸ்தரித்து ராணுவத் தளபாடங்கள் குறிப்பாக பல்குழல் ஏவுகணை சுடுகலங்கள் தொடக்கம் நவீன குண்டுவீச்சு விமானங்கள் வரை கொள்வனவு செய்யப்பட்டன. ஒரு யுத்தத்தில் வெற்றிப் பெறக்கூடியளவுக்கான பெரும் ஆயுதக் கொள்வனவில் அரசாங்கம் இறங்கியது. அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, பிரிட்டன் ஆகியன இலங்கைக்கு பெருமளவான ஆயதங்களை விற்பனை செய்தன.

இவற்றின் நடுவே யுத்த மீறல்கள் எனப்பட்டவை இருபுறத்தாலும் முன்னெடுக்கப்பட்டன. 2005 டிசம்பர் 25ம் திகதியன்று மட்டக்களப்பில் கிறிஸ்மஸ் தின ஆராதனைக்குச் சென்று தேவாலயத்தில் வழிபாட்டில் இருந்த போதே மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்றுவரை அச் சம்பவம் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இதற்கு ஓரிரு மாதங்கள் கழித்து கொழும்பில் பட்டப்பகல் வேளையில் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறு, பிரதான இலக்கு வைக்கப்பட்டோரின் கொலைகள், ஆட்கடத்தல்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்தன.

இதன் போக்கில் 2006ம் ஆண்டின் ஆரம்பத்தில் திருகோணமலையில் இன வன்முறைகளும் அதனைத்தொடர்ந்து கொலைகளும் இடம் பெற்றன. 2006 ஜனவரியில் திருகோணமலைக் கடற்கரையில் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான ஐந்து மாணவர் கூடிக் கதைத்து நின்ற வேளை இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் விசனத்திற்குரியது யாதெனில் அக்கொலைகளைச் செய்த கொலையாளிகள் 7 வருடங்களின் பின்புதான் அரசாங்க அதிரடிப்படையினர் என அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளமையாகும். அதேபோன்று அதே காலப்பகுதியில் **ACF** எனப்படும் பிரான்சு தேச தொண்டு நிறுவனத்தின் ஆண்களும் பெண்களுமாக உள்ளூர் ஊழியர்கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவ்விசாரணை இன்னமும் கிடப்பிலேயே இருந்து வருகின்றது.

இவ்வாறான சூழலில் அரசாங்கத்திற்கு ஒரு பேச்சுவார்த்தை முகம் தேவைப்பட்டது. 2006ன் மார்ச் மாதத்தில் மூன்று ஆண்டு இடைவெளிக்குப் பின்பு ஜெனிவாவில் அரசாங்க–புலிகள் இயக்கப் பிரதிநிதிகளிடையே பேச்சுவார்த்தை தொடங்கியது. வெறுமனே காலத்தை இழுத்தடித்துச் செல்லும் பேச்சுவார்த்தையாகவே அது அமைந்திருந்தது. அரசாங்கக் குழுவிற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் புலிகளின் குழுவிற்கு சு.ப. தமிழ்ச்செல்வனும் தலைமைதாங்கினர். இந்தப் பேச்சுவார்த்தையானது எவ்வித முன்னேற்றத்தையும் கொண்டிருக்கவில்லை. போலி முகங்களே இரு தரப்பிலும் காட்டப்பட்டதுடன் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியும் நின்றனர். குறிப்பாகப் போர் நிறுத்தக் கண்காணிப்பு சம்மந்தமாகவும் போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள்ப் பற்றியும் பேசப்பட்டது. மிகக் கூடுதலான போர் நிறுத்த மீறல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டு பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தரப்பால் முன்வைக்கப்பட்டது. அத்துடன் சிறுவர்களை ராணுவப் பயிற்சிக்குச் சேர்ப்பது பற்றியும் முறையீடுகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறு பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டனவே தவிர அரசியல் தீர்வுக்கான விடயங்கள் விவாதிக்கப்படவே இல்லை. இதில், ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்ளும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நடைமுறையே காணப்பட்டது.

இதேவேளை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான மோதல் நிலை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. 2006 ஏப்பிரல் 12ம் திகதியன்று திருகோணமலையின் பிரதான சந்தை வளாகத்தில் சக்திமிக்க குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது. ஒரு குழந்தையும் நான்கு பேரும் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆயுதப் படையினரும் கூலிப்படையினரும் சேர்ந்து தமிழ்க் கடைகளைச் சூறையாடியதுடன் கொலைகளையும் செய்தனர். இதில் பத்தொன்பது பேர்வரைக் கொல்லப்பட்டனர். இது திட்டமிட்ட சிங்கள இனவெறித் தாக்குதலாகவேக் காணப்பட்டது. இச் சம்பவம் இடம் பெற்று இரண்டு வாரங்களுக்குப் பின்பு 2006 ஏப்பிரல் 25ம் திகதியன்று நன்பகல் வேளையில் ராணுவத் தலைமையகத்திற்கு முன்னால் வைத்து ராணுவத் தளபதியான சரத் பொன்சேகா மீது தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பெண் தற்கொலைப் போராளியே இதனை மேற்க்கொண்டார். சரத் பொன்சேகா பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்; 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலில் இருந்து உயிர் தப்பி கடுமையான காயங்களுக்குச் சிகிச்சை பெற்றபின் சரத் பொன்சேகா தனது ராணுவத் தளபதி பொறுப்பினைத் தொடர்ந்தார். அதன்போது விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் பழி வாங்கும் வேகத்தில் செயல்பட்டார். 'அடிபட்ட புலி சும்மா இருக்காது'' என்பது போலச் சரத் பொன்சேகா யுத்த முனையில் இலங்கை ராணுவத்திற்கு வழிகாட்டி நின்றார்.



இதில் ஒரு வேடிக்கை தரும் முரண் சுவை சுட்டிக் காட்டப்படவேண்டியதாகும். சரத்பொன்சேகா தலைமையில் யுத்த வெற்றியைப் பெற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ஷவும் சகோதரர்களும் வெற்றி விழாவைத் தொடர்ந்து தளபதி சரத் பொன்சேகாவை ராணுவ அரங்கிலிருந்து அகற்றி சிறையில் அடைத்தனர். அவரது பட்டம், பதவி, சீருடை யாவற்றையும் பிடுங்கி சிறைக் கைதியாக்கினர். பல வழக்குகளை ராணுவ நீதிமன்றத்திலும் வெளியேயும் தொடுத்தனர்.

**இறுதி யுத்தத்தை நடாத்தி பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழிக்கத் தலைமை தாங்கியவரான சரத் பொன்சேகா 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நின்றார். அந்த வேளை இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித தயக்கமோ, வெட்கமோ, மான ரோசமோ இன்றி அதே சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டனர்**

இவையாவும் பதவி, அரசியல் எதிர்காலம் பற்றிய அச்சத்திலும் பழி வாங்கும் அடிப்படையிலும் இடம் பெற்றன. இவை ஏன் என்பது பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்க்க முடியும். எவ்வாறாயினும் இறுதி யுத்தத்தை நடத்திப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழிக்கத் தலைமை தாங்கியவரான சரத் பொன்சேகா 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நின்றார்.

>>12

# 35வது ஆண்டில் கால் பதிக்கும்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

- 1943 யூலை 3ம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது
- 1964ல் பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பாதையை நிராகரித்து தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது
- 1978ல் தன்முனைப்பு புத்தகவாதம் வரட்டுப்பிடிவாதம், ஜனநாயக மத்தியத்துவமின்மை தனிநபர் வழிபாடு போன்றன தலைமைக்குள் மேலோங்கி நின்ற காரணங்களினால் தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருந்த மாக்சிச லெனினிசவாதிகள் தனியாக விலகிச் சென்று புதிய கட்சியைத் தோற்றுவிக்க நிர்ப்பந்திக்கப்படனர். அதன் காரணமாக உருவாகியதே இன்றைய புதிய– ஜனநாயக மாக்சிச– லெனினிசக் கட்சியாகும்.

**இலங்கையின்** பொதுவுடைமை இயக்கம் கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் ஆரம்பித்தது. 1943 யூலை 3ம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டது. சுமார் இரண்டு தசாப்த காலத்தில் அக்கட்சி இலங்கையின் இடதுசாரிப் பரப்பில் தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் சரியான திசையில் வழிகாட்டித் தலைமை தாங்கி வந்தது. ஆனால் அக்கட்சி அறுபதுகளில் பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பாதைக்குச் சென்றதால் 1964ல் தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. அக் கட்சியின் தலைமயில் 1964-1978 வரையான காலப்பகுதியில் தென்னிலங்கையிலும், வடக்குகிழக்கு, மலையகத்திலும் பல்வேறு நிலைகளிலான புரட்சிகரப் போராட்டங்கள் இடம்பெற்றன. அவை தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பரந்துபட்ட மக்களின் எழுச்சிப் போராட்டங்களாக அமைந்தன.

இவற்றின் அனுபவங்கள் பட்டறிவுகள் வெற்றி தோல்விகள் என்பனவற்றின் ஊடாக, மாற்றமடைந்து வந்த புதிய நிலைமைகளுக்கும் ஏற்ப கட்சியையும் அதன் முன்னோக்கிய பயணத்தையும் முன்கொண்டு செல்வதில் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகளும் விவாவதங்களும் இடம்பெற்றன. இவற்றில் தன்முனைப்பு, புத்தகவாதம், வரட்டுப்பிடிவாதம், ஜனநாயக மத்தியத்துவமின்மை தனிநபர் வழிபாடு போன்றன தலைமைக்குள் மேலோங்கி நின்றன. இக்காரணங்களினால் தோழர் நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருந்த மாக்சிச லெனினிசவாதிகள் தனியாக விலகிச் சென்று புதிய கட்சியைத் தோற்றுவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதன் காரணமாக உருவாகியதே இன்றைய புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியாகும்.

அன்று மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் 1978 யூலை மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட எமது கட்சிக்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) எனப் பெயரிடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கட்சியை உருவாக்குவதற்குக் கூடியிருந்த பிரதிநிதிகள் மேற்படி கட்சிப் பெயரைத் தீர்மானித்ததுடன் கட்சியின் முதலாவது அனைத்திலங்கை மாநாட்டை நடத்துவதற்கான ஒரு தயாரிப்புக் குழுவையும் தெரிவு செய்திருந்தனர். அக்குழுவானது மாநாடு வரையான ஆரம்பக் கட்சித் தலைமையாகச் செயல்படுவதைப் பிரதிநிதிகள் ஏகமனதாக அங்கீகரித்துக் கொண்டதுடன் அக்குழுவின் செயலாளராக தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தை தெரிவு செய்து கொண்டனர். அன்று புரட்சிகரப் பாதையில் பயணிக்க ஆரம்பித்த எமது கட்சியானது 1984ல் தனது முதலாவது கட்சிக் காங்கிரசை நடாத்தியது. அதில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியை அமைப்பு வாயிலாகவும் வெகுஜனத் தளத்திலும் கட்டியெழுப்புவதற்கு தோழர் மணியமும் மத்திய குழுவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். மலையகத்தில் வாலிபர் இயக்கத்தையும் அதன் ஊடாக கட்சியையும் வலுப்படுத்தி முன்னெடுக்கும் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டன. 1989 நவம்பரில் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்துவந்த தோழர் கே.ஏ. சுப்பரமணியம் கடும் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார். அவ்விடத்திற்கு தோழர் சி.கா.செந்திவேல் அடுத்த மாநாடுவரை மத்திய குழுவால் தெரிவு செய்யப்பட்டார். 1991ல் இடம் பெற்ற இரண்டாவது கட்சி மாநாடு கட்சியின் பெயரை புதிய ஜனநாயகக் கட்சி எனப் பெயர்மாற்றம் செய்து கொண்டது. இம் மாநாடு தோழர் சி.கா.செந்திவேலைப் பொதுச் செயலாளராகவும் தோழர் இ.தம்பையாவைத் தேசிய அமைப்பாளராகவும் சோ. தேவராஜாவைப் பொருளாளராகவும் தெரிவு செய்து கொண்டது. இதன்பின்னர் 2012ல் நடைபெற்ற கட்சியின் ஐந்தாவது அனைத்திலங்கை மாநாடு கட்சிப் பெயரைப் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி என மாற்றிக் கொண்டது.

நமது கட்சி கடந்த முப்பத்திநான்கு வருடங்களில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளும் அரசியல் அடக்குமுறைகளும், குறிப்பாக யுத்தமாக்கப்பட்ட இன ஒடுக்குமுறையும் நீடித்து வந்த காலகட்டத்தின் ஊடே பயணித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நாட்டில் ஜே.ஆர். ஜயவர்த்தனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் 1977ல் பதவிக்கு வந்து 1978ல் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டதே இன்றைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்ட அரசியலமைப்பாகும். அவ் அரசியலமைப்பிற்கும் எமது கட்சிக்கும் ஒரே வயதாகும். ஆனால் அவை இரண்டும் இரு துருவங்களாகவே இருந்து வந்துள்ளன. எமது கட்சி இன்றைய அரசியலமைப்பை ஆரம்பம் முதல் எதிர்த்து வந்திருக்கிறது. அதன் பயங்கர அபாயம் பற்றி எச்சரித்து வந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை நவகொலனியமாக்கியதுடன் தாராளமயம் தனியார் மயம் உலகமயமாதல் என்பனவற்றின் ஊடாக நவதாராள பொருளாதாரக் கொள்கையை வலுப்படுத்திக் கொள்ளவும் இவ் அரசியலமைப்பு வழிவகுத்துக் கொடுத்தத. இன்றும் அதன் தொடர்ச்சி முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு தலைமை தாங்குவதில் ஜே.ஆர்., பிரேமதாசா, டி.பி. விஜயதுங்கா, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரரணதுங்கா, இப்பொழுது மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நிறைவேற்று அதிகார ஜனாதபதிகளாக இருந்து ஆட்சி அதிகாரம் புரிந்து வந்திருக்கின்றனர்.

அதேவேளை தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி கொடிய பேரினவாத ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மீது ஏவி வந்ததில் மேற்கூறிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் யாவரும் ஒருவருக்கு ஒருவர் குறைவின்றித் தலைமை தாங்கி வந்துள்ளனர். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு எவ்வித முன் முயற்சியும் குறைந்த பட்சி அரசியல் நேர்மையுடன் முன்னெடுக்கப்படவில்லை. அதன் அடிப்படை இனத்துவ நிலைப்பாடு என்பதுடன் ஆளும் வர்க்க நிலைப்பாடு முக்கியமானதாகும். நாட்டின் பெருமுதலாளித்துவ சக்திகளும் அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க வாதிகளும் கூடிக் குலாவியே இன ஒடுக்குமுறை யுத்தத்தை முன்னெடுத்து வந்துள்ளனர்.

பெருமுதலாளித்துவ ஆட்சியினர் நாட்டின் நவதாராளவாத பொருளாதாரத்தின் கீழான தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் என்பனவற்றை முன்னெடுப்பதற்கு அத்தகைய யுத்தத்தை ஒரு கவசமாக்கிக் கொண்டனர். தேசிய இனப்பிரச்சனையை யுத்தமாக்கி விரிக்கப்பட்ட பெரும் திரையின் முன்னால் பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொன்றொழக்கப்பட்டு வந்த சூழலில் திரைக்குப் பின்னால் நாட்டின் பொருளாதாரமும் வளங்களும் உள்ளூர் பெருமுதலாளிகளாலும் அந்நியப் பல்தேசிய நிறுவனங்களாலும் அவற்றின் ஏகாதிபத்தி வல்லரசு நாடுகளாலும் வாரிச்சுருட்டிச் செல்லப்பட்டன. யுத்தம் முடிந்த பின்பும் அவை பன்மடங்கு வேகத்துடன் இடம்பெறுகின்றன.

இவ்வாறு நாட்டின் தரகு முதலாளத்துவ சக்திகள் தமது ஆளும் வர்க்க நிலைப்பாட்டை சர்வாதிகாரப் பாதையில் அதன் உச்சமான பாசிச வழிகளில் முன்னெடுத்து வந்த அதேவேளை, மறுபுறத்திலே பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையினைத் தமிழ் மக்கள் மீது கொடிய யுத்தமாக முன்னெடுத்தும் வந்தனர். இவை இரண்டும் கடந்த முப்பத்தைந்து வருடங்களில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று இருந்து வந்துள்ளன. இதே கால கட்டத்தின் ஊடாகவே எமது கட்சி தனது வர்க்கக் கடமைக்குரிய அரசியல் பயணத்தை மேற்கொண்டு வந்திருக் கிறது. மிகக் கடுமையான அரசியல் நெருடிக்கடிகளின் கீழும் கொடிய அடக்குமுறைகள் மத்தியிலும் கட்சியானது தன்னிலை இழக்காத ஒரு மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியாகச் செயல்பட்டு வந்திருக்கிறது.

அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பனவற்றின் கீழ் அடக்குமுறைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் கட்சி அவற்றுக்கு முகம் கொடுத்தவாறே மக்கள் மத்தியில் தனது வெகுஜன அரசியல் வேலைகளை முன்னெடுத்த வந்துள்ளது. இதுவரை கட்சி தனது ஐந்து அகில இலங்கை மாநாடுகளை நடாத்தி அவற்றில் நாட்டின் அரசியல் பொருளாதார சமூக பண் பாட்டுத் தளங்களிலான பிரச்சினைகளையும் தீர்வுகளை யும் மாக்சிச லெனினிச அடிப்படையிலான வர்க்கக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து கொள்கை வேலைத் திட்டங் களை வகுத்து முன்சென்றது.

நாட்டின் அடிப்படை முரண்பாடு, வர்க்க முரண்பாடு என்பதையும் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினை பிரதான முரண்பாடாகவும் நீடித்து வருவதையும் கட்சி தெளிவுபடுத்திக் கொண்டது. மோசமடைந்து செல்லும் பொருளாதார நெருக்கடி தொழிலாளர்கள் விவசாயகள் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களையும் வர்க்க அடிப்படையில் சுரண்டி அமுக்கி வருவதை எடுத்துக் காட்டியது. அதேவேளை அவற்றுக்கு எதிரான மக்களது எதிர்ப்புக்களை முளையிலே கிள்ளி எறிவதற்கு ஜனநாயக விரோத, மக்கள் விரோத வழிகளில் அடக்குமுறைகளை ஏவி வந்துள்ள போக்குகளையும் அம்பலப்படுத்தி எதிர்த்து வந்துள்ளது. அதேவேளை பிரதான முரண்பாடாகி கொடிய யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மறுக்கப்பட்டு வந்துள்ளமையைக் கட்சி எதிர்த்து வந்துள்ளது.

தேசிய இனப் பிரச்சினையை இலங்கையின் விஷேட சூழலில் வைத்து ஆராய்வதில் மாக்சிச லெனினிச நிலைப்பாட்டை கடைப்பிடித்து வந்தது. குறிப்பாக இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என்போர் நான்கு தேசிய இனங்களாகவும், பறங்கியர், மலாயர், வேடர்களாகிய பழங்குடியினர் சிறு சமூகங்களாகவும் இருந்து வருவதை கட்சயின் இரண்டாவது அனைத்திலங்கை மாநாடு அங்கீகரித்துக் கொண்டது. தேசிய இனப்பிரச்சினை மீதும் அதை தெளிவுபடுத்திக்கொள்வதிலும் கட்சி மிகவும் நிதானமான நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டது.

ஐக்கியப்பட்ட இலங்கையில் தமிழர் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி அமைப்புகளை அரசியல் தீர்வாக முன்னெடுக்கப்படுவதை கட்சி முன்வைத்தது. ஒவ்வாரு கட்சிக் காங்கிரசிலும் இவை மேன்மேலும் செழுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக யுத்தத்தற்குள் இருந்து வந்த வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு மட்டுமன்றி அங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த சிங்கள மக்களினது உரிமைகளுக்கும் வாழ்வுக்குமுரிய அம்சங்களை கட்சி முன்வைத்து, 15 அம்ச தீர்வுத் திட்ட யோசனைகளை வலியுறுத்தி நின்றது.

ஒருபுறம் தரகு முதலாளித்துவத்தின் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை, மறுபுறத்தல் தமிழீழக் கோரிக்கையும் குறுந்தேசியவாத சக்திகளின் போராட்டங்களும்; இவற்றின் மத்தியில் ஒரு நேர்மையான மாக்சிச லெனினிசக் கட்சி எவ்வித சந்தர்ப்பவாதமும் சமசரசமும் இன்றி, தனிமைப்படல் அடிபணிதல் இன்றி தனது வர்க்கப் போராட்ட அடிப்படையுடனான நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வருவதென்பது இலகுவானதாக இருக்கவில்லை. அரசாங்க ஒடுக்குமுறை ஒருபுறம் என்றால் மறுபுறம் ஆயுத இயக்கங்களின் குறிப்பாகப் புலிகள் இயக்கத்தின் ஜனநாயக மறுப்பு அராஜகங்களுக்கு முகமங்கொடுக்க வேண்டியதாயிற்று. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் இருந்தவாறே கட்சி தனது செயற்பாடுகளைப் பல்வேறு தந்திரோபாயங்களுடன் முன்னெடுக்க வேண்டியதாயிற்று. அதனால் தலைமைத் தோழர்கள் முதல் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் வரை பல்வேறு நெருடிக்கடிகள் மிரட்டல்களை எதிர்கொண்டனர்.

சங்கானை நிச்சாமத்தைச் சேர்ந்த கட்சி உறுப்பினரான தோழர் சி. துரைசிங்கமும் ஆதரவாளரான எஸ். நடேசுவும் புலிகளால் கூட்டிச் செல்லப்பட்டு சில மாதங்கள் தடுப்பில் வைக்கப்பட்ட பின்பு கொல்லப்பட்டதாகத் தெரிவித்தனர். அதேபோன்று பல பகுதிகளிலும் கட்சித் தோழர்கள் விசாரணை என்ற பெயரில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் புலிகளின் கொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் பாதுகாக்கப்பட்டு கண்டியில் ஒரு கிராமத்தில் தலைமறைவு வாழ்வு வாழவேண்டியதாயிற்று. தலைமைத் தோழர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் உயிர் தவறிக் கொண்டதுடன் தலைமறைவு வாழ்வையும் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. எமது கட்சி ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியாகத் தொடர்ந்து வேலை செய்து வந்த போக்கினை உள்வாங்க முடியாத நிலையிலேயே தமிழீழத்திற்கான ஆயுதம் தாங்கிய அமைப்புகளில் அதிகமானவை இருந்து வந்தன.

அதேவேளை அரசாங்கம் தனது அடக்குமுறைக் கரங்களைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஜனநாயக சக்திகள் மீதும் பாராளுமன்றத்திற்கு அப்பாலான இடதுசாரி சக்திகள் மீதும் பிரயோகித்து வந்தது. எமது கட்சியின் ஐந்து தோழர்கள் மலையகத்தில் கைது செய்யப்பட்டு நீண்டகால விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். அதேபோன்று வவுனியாவில் ஒரு தோழர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். அவர்களில் ஐவர் சுமார் மூன்று வருடங்களின் பின் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தமுடியாத நிலையில் விடுவிக்கப்பட்டனர். தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒருவரான தோழர் சுகேசனன் ஆறு வருடங்களின் பின்னர் புனர்வாழ்வுக்கென அனுப்பப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பரில் விடுவக்கப்பட உள்ளார். இவ்வாறு சிறைவைப்புக்கு உட்படுத்தப்பட்ட நமது ஆறு தோழர்களும் இளம் கட்சித் தோழர்களாவர். சிறைவாழ்வுக்குப் பின்பும் அத்தோழர்கள் கட்சியோடும் கட்சி வேலைகளோடும் இணைந்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே சுட்டிக்காட்டியவாறு கடந்த முப்பத்திநான்கு வருடங்களில் நாட்டின் பொருளாதாரப் போக்குகள் முற்று முழுதாகவே அந்நிய சக்திகளின் கைகளுக்கு கையளிக்கப்பட்டு வந்த சூழலில் அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்கள் யாவும் அதற்கு இசைவானதாக மாற்றப்பட்டது. இரண்டாவதாக தேசிய இனப்பிரச்சினை யுத்தமாக்கப் பட்டமையானது பேரினவாதத்தை

தொடர்ச்சி >>13

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

41

**இமயவரம்பன்**

1971 ஏப்ரல் கிளர்ச்சிக்குப் பின்பு மெல்ல மெல்ல ஆளும் கூட்டணிக்குள் இருந்த கட்சிகளிடையே உள் நெருடிக்கடிகள் தோன்றின. ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் சிரிமா பண்டாரநாயக்காவின் மூத்த மகள் சுனேத்ராவின் கணவர், குமார் ரூபசிங்ஹவின் தலைமையில், இடதுசாரிகளாகச் சொல்லப்பட்ட சிலரையும் கொண்டு, 1973இல் 'ஜனவேகய' என்ற குழுவை அமைத்து 'ஜனவேகய' என்ற ஒரு



பத்திரிகையையும் தொடக்கினர். அதன் தமிழ்ப் பதிப்பான 'ஜனவேகம்' தொடர்ந்து சில காலம் வெளிவந்தது. 'இடதுசாரிப்' போக்குடைய இந்தக் குழுவின் உள் நோக்கம் சிரிமா பண்டாரநாயக்காவின் அரசியல் வாரிசாக குமார் ரூபசிங்ஹவைக் கொண்டு வருவதுதான் எனப் பரவலாகப் பேசப்பட்டது. மறுபுறம் 1974இல் வெளிநாட்டில் படிப்பை முடித்துவிட்டு மீண்ட அநுர பண்டாரநாயக்க தானே இயல்பான அடுத்த வாரிசு என்ற எண்ணத்துடன் இருந்தார். அவர் ஜனவேகயவுக்கு எதிராக 'அத' என்ற போட்டிப் பத்திரிகையைத் தொடங்கினார். ஸ்ரீ.ல.சு.க வலதுசாரிகள், குறிப்பாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் மருமகனும் சிரிமாவின் நெருங்கிய ஆலோசகருமான ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அநுரவுக்கு ஆதரவாக இருந்தனர்.

1974ம் ஆண்டு கலாவெவ தொகுதி உறுப்பினரின் சாவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப நடக்கவிருந்த இடைத் தேர்தலில் வேட்பாளராக விரும்பிய அநுரவின் எண்ணம் நிறைவேறவில்லை. அது அவருடைய விரக்தியை அதிகமாக்கியதுடன் கட்சியின் குடும்ப வாரிசு யார் என்ற போட்டியை மேலும் உக்கிரமாக்கியது. 'ஜனவேகய' குழுவின் தொடக்கக் கால வேகம் மந்தமடைந்ததுடன் பாராளுமன்ற இடதுசாரிகளுடன் அதன் முரண்பாடுகளும் அதன் வளர்ச்சிக்குத் தடையாயின. அந்நிலையில், ஜனவேகவுக்கு 'நக்சலைற்றுக்கள்' என முத்திரை குத்தப்பட்டது. அக்காலத்தில், அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு, வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்நோக்கியது.

தேர்தலில் தோல்வியடைந்த பின்பு யூ.என்.பி சோர்வுற்று இருந்தது. 1971 கிளர்ச்சிப் பின்னணியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் முயற்சியும் வெல்லவில்லை. 1972 இல் ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் யூ.என்.பி தலைவர் டட்லி சேனநாயக்கவுக்கும் முறுகல் வலுக்கத் தொடங்கியது. கட்சிக்குள் தனிமைப்படத் தொடங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தில் இணைய முயன்றார். அதற்கு ஸ்ரீ.ல.சு.க. வலதுசாரிகள் சிலரது ஆதரவு இருந்தாலும், இடதுசாரிக் கட்சிகளின் கடும் எதிர்ப்பினால் அந்த முயற்சி தடைப்பட்டது. எனவே அவர் கட்சிக்குள் மேலும் தனிமைப்பட்டவராக இருக்கையில் டட்லி சேனநாயக்கவுடன் நெருக்கமாயிருந்த பிரேமதாசவின் கை ஓங்கத் தொடங்கியது. எவ்வாறாயினும் டட்லிக்கும் பிரேமதாசவுக்கும் சிலகாலத்தில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. ஜே.ஆர். டட்லியுடன் கொஞ்சம் சமரசமாகினார். அப் பின்னணியில், பிரேமதாச இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த காலத்தில், டட்லி 1973 ஏப்ரல் மாதம் திடீரென நோய்கண்டு இறந்தார். அக்காலம் கடும் வரட்சி காரணமாக அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட காலமாகும். இந்த நிலையில் ஜே.ஆர். மிகவும் தந்திரமாகக் காய் நகர்த்தி டட்லியின் இறுதிச் சடங்கு முழுவதையும் தன் பொறுப்பிற்குட் கொண்டுவந்து, அதன் மூலம் அதுவரை யூ.என்.பியின் முன்னிலையிலிருந்த பிரேமதாசவை ஓரங்கட்டியதுடன், டட்லி சேனநாயக்க, 1960இல் 2 கிலோ இலவச அரிசி வழங்கிய காலத்தை நினைவூட்டி, சிரிமா அரசாங்கம் தனது 1970 தேர்தல் வாக்குறுதியான "சந்திரமண்டலத்தில் இருந்தாவது அரிசி கொண்டு வருவோம்" என்பது தவறி வழமையாகக் கிடைக்கும் அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதைச் சுட்டிக் காட்டி அதை அடுத்த தேர்தலுக்கான ஒரு ஆயுதமாக்கினார்.

## பிளவுகளும் பின்னடைவுகளும்

**1977இல் தேர்தல் நடந்தது. தேர்தலில் யூ.என்.பி வெல்லும் வாய்ப்புக்கள் வலுவாக இருந்தான. ஸ்ரீ.ல.சு.கட்சியும் இடதுசாரிகளும் மீண்டும் கூட்டணியாகப் போட்டியிட்டிருந்தால் யூ.என்.பிக்குப் பூரண பெரும்பான்மையை மறுத்திருக்க இயலுமோ என்பது நிச்சயமற்றதாயினும் அவை இணைந்ததுமன்றித் தேர்தல் பிரசாரங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி ஒருபுறமும் இடதுசாரி முன்னணியாக இணைந்த சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ற் கட்சியம், ஸ்ரீ.ல.சு.கட்சி அதிருப்திக் குழுவும் கடுமையாக மோதிக் கொண்டமையும் இரண்டு தரப்பினரது ஆதரவாளர்களிடையேயும் அதிருப்தியையும் அவநம்பிக்கையும் ஏற்படுத்தியது.**

1953இல் யூ.என்.பி அரிசி விலையை உயர்த்தியதும் ஹர்த்தாலுக்கு ஒரு காரணம் என்பது வசதியாக மறக்கப்பட்டது. ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இருந்த முரண்பாடுகளின் நடுவே 1974இல் யூ.என்.பியுடன் இணைய யோசித்த அநுர பண்டாரநாயக்கவை அவ்வாறு செய்ய வேண்டாம் என ஜே.ஆர். ஆலோசனை கூறியதும் இங்கு நினைவு கூரத்தக்கது. எவ்வாறாயினும், ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் வலதுசாரிகளதும், குறிப்பாக ஃபீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவினதும் செல்வாக்கு சிரிமாவுடனான அவருடைய நெருக்கத்தால் வலுத்து வந்தது. தமது இடதுசாரி நம்பகத் தன்மையை வலியுறுத்தும் நோக்கில் சமசமாஜக்கட்சி முன்வைத்த கருத்துக்கள் சிரிமாவுக்கு உடன்பாடாக இல்லாததோடு பல்வேறு அன்றாட அரசியற் தகராறுகளும் சேர்ந்து சம சமாஜக் கட்சியினதம் ஸ்ரீ.ல.சு.கட்சியினதும் தலைமைகளிடையில் முறுகலை ஏற்படுத்தியது இது 1975இல் முற்றியது. அதைத்தொடர்ந்து சமசமாஜக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியது. எனினும் மூத்த சமசமாஜத் தலைவர்களுள் ஒருவரான சம்ளி குணவர்தன அந்த முடிவை எதிர்த்து சம சமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து ஒரு தனிக் கட்சியை அமைத்தார்.

அதைத்தொடர்ந்து 1976இல் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டரசாங்கத்திலிருந்து விலகியது. 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் நெருங்குகிற கட்டத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் மேலம் ஒரு பிளவு ஏற்பட்டு ற்றி.பி.சுபசிங்ஹவும் இடதுசாரிக் கட்சிகட்கு நெருக்கமான சிலரும் பிரிந்து ஒரு தனிக் கட்சியாகத் தம்மை அறிவித்தனர்.

பல்வேறு தனித்த நிகழ்வுகளும் ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கத்தின் ஆதரவுத் தளத்தைப் பலவீனப்படுத்தின. 1976 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நடத்திய அலுவலக முற்றுகையொன்றின் போது பொலிஸ் சூட்டில் வீரசூரிய என்ற மாணவனின் சாவையும் யூ.என்.பி தந்திரமாகத் தனது பிரசாரத்துக்குப் பயன்படுத்தியது.

அரசாங்கத்தின் உணவு இறக்குமதிக் கட்டுப்பாட்டால் வடக்கில் கிழங்கு, வெங்காயம், மிளகாய்ப் பயிர்செய்கையில் ஈடுபட்ட சிறு விவசாயிகளின் வருமானம் உயர்ந்திருந்தமையால் அவர்களிடையே அரசாங்கத்தைப் பற்றிய நல்லெண்ணம் இருந்து வந்தது. எனினும் தேசிய இனப் பிரச்சினையைத் தவறாகக் கையாண்டது மட்டுமன்றி தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம் போன்றவற்றால் தீவிரப் போக்கில் இறங்கியிருந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த கடும் பொலிஸ் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் குடாநாட்டில் பதற்றச் சூழலை உருவாக்கியிருந்தது. இப் பின்னணியில் 1976ல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழக் கோரிக்கையைப் பிரகடனஞ் செய்த சூழலும் பொதுவாகத் தமிழ் மக்களிடையே அரசாங்க எதிர்ப்பு மனநிலையை வலுப்படுத்தியிருந்தது.

சிங்களப் பேரினவாத விஷமிகளின் செயற்பாடுகள் 1970களின் பிற்பகுதியில் வலுப்படத் தொடங்கியிருந்தன. முஸ்லிம்கட்கெதிரான சில வன்செயல்கள் நடந்தன. எனினும் புத்தளத்தில் 1976இல் ஏற்பட்ட ஒரு பெரிய மோதலை அரசாங்கம் பொறுப்புணர்வுடன் கையாண்டு அது பரவாமல் தடுத்தது. எனினும் அதே அளவான கட்டுப்பாடு பிற சமயங்களில் இருந்ததாகக் கூற முடியாது. 1977 முற்பகுதியில் நாவலப்பிட்டியை அண்மிய தோட்டமொன்றில் மலையகத் தமிழருக்கு எதிரான வன்முறையில் பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அதைத் தூண்டுவதில் அப்பிரதேச ஸ்ரீ.ல.சு.க பிரமுகர்கள் சிலருக்கும் ஒரு பங்கு இருந்தமை கவனிக்கத்தக்கது.

தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் இறந்ததையடுத்து வெறும் தேர்தல் அரசியல் பிரசார நோக்கில் அவருடைய சாம்பலை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஊர்வலமாகக் கொண்டுசென்ற போது திருகோணமலையில் பேரினவாதிகள் வன்முறையில் இறங்கினர். இதுவே திருகோணமலையில் நடந்த முதலாவது பேரினவாத வன்முறை நிகழ்வெனலாம்.

இவ்வாறான நிகழ்வுகள் ஏலவே இடதுசாரிகளுடனான முறிவால் தனிமைப்பட்டிருந்த ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்திற்கும் சிறுபான்மைத் தேசிய இனங்களிடையிலான சிறிதளவு ஆதரவை மேலம் பலவீனப்படுத்தியது. அதேவேளை, ஒரு பேரினவாத நிகழ்ச்சி நிரலை மனதில் வைத்திருந்த யூ.என்.பி.யின் தலைமை (குறிப்பாக ஜே.ஆர். ஜயவர்த்தன) த.தே.வி. கூட்டணி, தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் நட்புத் தோற்றத்தை வலுப்படுத்தியது.

அனைத்ினும் முக்கியமாக, நகர் சார்ந்த நடுத்தர வர்க்கம் இறக்குமதி நுகர் பொருட்களின் தட்டுப்பாட்டாலும் 1975-76 காலத்தின் அரிசித் தட்டுப்பாடு போக, பாண் கியூக்களாலும் கடும் அதிருப்தியுடனிருந்தது. அதைவிடவும் வேலையின்மைப் பிரச்சினையும் விலைவாசி உயர்வுகளும் பொதுவாகவே ஓர் அதிருப்திச் சூழலை ஏற்படுத்தியிருந்தன. அரசாங்கம் கொண்டிருந்த தெளிவீனமான தேசிய பொருளாதாரக் கொள்கையால் கிராமியப் பொருளாதாரமோ புதிதாகத் தொடங்கிய தொழில்களோ கைத்தொழில்களோ நாட்டின் பொருளாதாரத்தில் குறைந்தளவு தாக்கத்தையே ஏற்படுத்த முடிந்தது.

இச்சூழலிலேயே 1977இல் தேர்தல் நடந்தது. தேர்தலில் யூ.என்.பி வெல்லும் வாய்ப்புக்கள் வலுவாக இருந்தன. ஸ்ரீ.ல.சு.கட்சியும் இடதுசாரிகளும் மீண்டும் கூட்டணியாகப் போட்டியிட்டிருந்தால் யூ.என்.பிக்குப் பூரண பெரும்பான்மையை மறுத்திருக்க இயலுமோ என்பது நிச்சயமற்றதாயினும் அவை இணையாததுமன்றி தேர்தல் பிரசாரங்களில் ஸ்ரீ.ல.சு. கட்சி ஒருபுறமும் இடதுசாரி முன்னணியாக இணைந்த சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும், ஸ்ரீ.ல.சு.கட்சி அதிருப்திக் குழுவும் கடுமையாக மோதிக் கொண்டமையும் இரண்டு தரப்பினரது ஆதரவாளர்களிடையிலும் அதிருப்தியையும் அவநம்பிக்கையும் ஏற்படுத்தியது. இரு தரப்பினரும், முக்கியமாக இடதுசாரிகள், தமது வலிமையை மிகையாக மதிப்பிட்டு இருந்தனர். ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு எதிராக சமசமாஜக் கட்சியினரின் வன்மம் மிகவும் கடுமையாக இருந்தது. இப் பலவீனங்களின் நடுவே, தெற்கில் தமிழரிடையே தமிழர் விடுதலைக் கூட்டணியினது மறைமுக ஆதரவையும் இ.தொ.கவுடனான கூட்டணி மூலம் ஆதரவையும் உறுதிப்படுத்திய யூ.என்.பியால் வரலாறு காணாத ஒரு தேர்தல் வெற்றியைப் பெற முடிந்தது. ஜே.ஆர். ஜயவர்த்தன இக் காலப்பகுதியில் ஸ்ரீ.ல.சு. கட்சியிலிருந்து பிரிந்த றொனி டி மெல் மூலம் சிறையிலிருந்த ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீரவுடனும் சில இரகசிய உடன்பாடுகளைச் செய்தார். தேர்தலில் வென்றால் 1971 கிளர்ச்சியுடன் தொடர்புடையோர் எனச் சிறைக்கனுப்பப்பட்ட ஜே.வி.பியினரை விடுவிப்பது அதில் ஒன்றாகும். அதற்குப் பிரதியாக என்ன பெறப்பட்டது என்பதை 1978 அளவிலேயே அறிய முடிந்தது. தொகுதிவாரித் தேர்தல் முறை மூலம் 1970இல் ஸ்ரீ.ல.சு.க தலைமையிலான ஒரு கூட்டணி 2/3 பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்தது. அக் கூட்டணி பிளவுண்டு அரசாங்கம் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்த நிலையில், 1977ல் நடந்த தேர்தல் அக் கூட்டணிக் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் கடுமையான அதிர்ச்சியை அளித்தது.

168 ஆசனங்களில் யூ.என்.பி. 140 ஆசனங்களைப் பெற்றது. ஸ்ரீ.ல.சு.க. 8 ஆசனங்களை மட்டுமே பெற்றது. த.தே.வி. கூட்டணி 18 ஆசனங்களுடன் இரண்டாவது பெரிய பாராளுமன்றக் கட்சியாகியது. பாராளுமன்ற இடதுசாரிகள் ஒரு ஆசனத்தையும் வெல்லத் தவறியது மட்டுமன்றி எந்தவொரு தொகுதியிலும் இரண்டாம் இடத்தையேனும் வெல்லத் தவறினர். ஒரு காலத்தில் சமசமாஜக் கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சியினும் கோட்டைகளாகக் கருதப்பட்ட தொகுதிகளிலும் இவ்வாறு நடந்தமை இடதுசாரிகள் தேர்தல் அரசியலின் பயனாக எவ்வளவு தூரம் தம்மைப் பலவீனப்படுத்தி மக்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்டனர் என்பதைப் புலப்படுத்தியது.

தேர்தலின் விளைவுகள் பாரதூரமான பின்விளைவுகளைக் கொண்டிருந்தன. அவற்றை இனிவரும் பகுதிகளிற் கவனிப்போம்.

• • •

**வளர்ச்சியடைந்த நாடுகள் படிப்படியாக தம்மிடம் இருக்கும் அணுமின் நிலையங்களை மூடிவிட முடிவு செய்துள்ளன. புதிதாக அணுமின் நிலையங்களை நிறுவ முன்வரவில்லை. யப்பான் 2030ம் ஆண்டில் சகல அணுமின் நிலையங்களையும் மூடவுள்ளது. ஜேர்மனி 2015ம் ஆண்டளவில் அதன் அணுமின் நிலையங்களையும் மூடவுள்ளது. இந்த நிலையில் இந்தியா அணுமின் நிலையத்தை நிறுவ முயற்சிக்கின்றது.**



# கூடங்குளம் அணு மின் நிலையம்

## தமிழ்த் தேசியவாதிகளின் மௌனம்

கொழும்பு – யாழ் அதிவேகப் பாதை அமைப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என த.வி.கூ. எம்.பி. சுரேஷ் பிரமேச்சந்திரன் கவலைப்படுகிறார். அதேவேளை இலங்கைக்கு மட்டுமல்லாமல் இந்தியாவின் தென்பகுதிக்கும் அச்சுறுத்தலாய் அமைந்துள்ள கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக எமது தமிழ்த் தேசியவாதிகள் கவலைப்படவில்லை. தமிழ் ஊடகங்களும் அது பற்றி நன்றாக அடக்கியே வாசிக்கின்றன.

எமது ஊடகங்கள் சுடச்சுட தென் இந்தியச் செய்திகளை குறிப்பாக இன, மத, சாதியச் செய்திகளை வெளியிட்டுவரும் அதேவேளை இலங்கைத் தமிழருக்கும், இந்தியத் தமிழருக்கும் குமுறும் எரிமலை போல் எச்சமயமும் தீப்பிழம்பைக் கக்கக்கூடிய கூடங்குளம் அணுமின் நிலையம் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு தயாராய் இல்லை. இந்தியாவின் அணுசக்தி திணைக்களம் 2013 ஏப்பிரலில் அணு உலை திரவக் கழிவுகள் இந்து சமுத்திரத்திலேயே கொட்டப்படும் என்பதை ஏற்றுக் கொண்டது. இந்தியாவின் சிரேஷ்ட அணு விஞ்ஞானி ஒருவர் ரஷ்யாவால் கட்டப்பட்ட கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பான முறையிலும் தரமான முறையிலும் கட்டப்படவில்லையெனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவின் அணுசக்தி ஒழுங்கமைப்பு சபையின் முன்னாள் தலைவரான கலாநிதி அ. கோபாலகிருஷ்ணன் 'டைம்ஸ் ஒவ் இந்தியா', 'நியு இன்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளுக்கு எழுதுகையில், "கூடங்குளம் அணுமின் நிலையத்திற் தரம் குறைந்த யந்திரங்கள், கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன" எனக் கூறியிருந்தார்.

அணுசக்தி ஒழுங்கமைப்பு சபையில் கலாநிதி அ.கோபாலகிருஷ்ணன் இருந்த சமயம் கூடங்குளம் அணுமின்நிலையத்திற்கான இயந்திரங்கள், கருவிகள், பொருத்துக்களை வினியோகித்த ரஷ்யக் கம்பனிகளான ஷியோ பொடோய்ஸ்க் (ZIO PODISK), இன்போம்டெக் (INFORMTECK) முகவர்களிடம் விளக்கங்களைக் கேட்டதாகவும், அவர்கள் நேரடியாகவோ, நேர்மையாகவோ பதிலளிக்கவில்லையெனவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

2006ம் ஆண்டின் முற்பகுதியில் 40,000 மெகாவாட் சக்தியுடைய இலகுரக நீர் சுத்திகரிப்பு யந்திரம் இறக்குமதி செய்யப்பட்டபோது அதன் தொழிநுட்ப-பொருளாதார அனுகூலங்களை அணுசக்தி ஆணைக்குழுவோ, வேறு சம்பந்தப்பட்ட நிறுவனமோ மதிப்பீடு செய்யவில்லை. பிரதமர் வெளிநாடுகளுக்கு அளித்த உறுதி மொழிகளை நிறைவேற்றும் நோக்கில் அவசர அவசரமாக அணுமின் நிலையம் ஸ்தாபிப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் கடும் மக்கள் போராட்டம், எதிர்ப்பு காரணமாக சென்ற வருடத்தில் இருபது தடவைகள் மின் நிலைய செயற்பாடடை ஆரம்பிக்கும் திகதி பிற்போடப்பட்டது.

கூடங்குளம் அணு உலைக்கெதிரான தமிழ்நாடு எதிர்ப்பாளர்கள் தகவல் தருகையில் "தரம் குறைந்த யந்திரங்கள், கருவிகள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பாக விளக்கம் கொடுப்பதை இந்திய அணுசக்தி கூட்டுத்தாபனம், அணுசக்தி ஒழுங்கமைப்பு சபை, கூடன்குளம் அணுமின் நிலைய அதிகாரிகள் அனைவரும் தவிர்த்து வருகின்றனர்" என்கின்றனர். 2007ல் இருந்து தரம் குறைந்த உபகரணங்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அணு ஆலைகளுக்கு வழங்குவதாக ரஷ்யாவிலேயே குறித்த கம்பனிகளுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகிறமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தென் இந்தியாவில் கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிரான மக்கள் இயக்கத் தலைவர் எஸ்.பி. உதயகுமார் கூறுகையில், இயந்திரங்களை குளிரவைப்பதற்கு கடல்நீரைப் பயன்படுத்துவதாலேயே துருப்பிடித்தல், கசிவு என்பன ஏற்படுவதாகவும், அதன் காரணமாகவே கூடங்குளம் அணு ஆலை இயங்க ஆம்பிப்பதற்கு தாமதமாகின்றது என்றும் கூறுகிறார். அதேவேளை சர்வதேச அணுசக்தி அதிகாரசபை அங்கத்துவ நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடமாட்டாதெனவும் உதயகுமார் மேலும் கூறுகிறார்.

கூடங்குளம் வதிவிட இயக்குனர் ஆர்.எஸ்.சுந்தர் 'இந்து' பத்திரிகைக்கு தகவல் தருகையில், இந்திய அணுமின் கூட்டுத்தாபனம் ரஷ்யாவிடமிருந்து மின் நிலையத்திற்கான இணைப்புக்கள், பொருத்துக்களை பெற்றுக் கொள்ளும் அதேவேளை, தென்கொரியாவின் எல்.ஜி. எலெக்ரோனிக்ஸ், எல்ஸ் ரொம், பிரான்சின் வீ.ஏ. ரெக், ஜேர்மனியின் சீமன்ஸ் ஆகியவற்றிடமிருந்தும் இவற்றிற்கான கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

தமிழ்நாடு சூழல் பாதுகாப்பு சபையானது பெருமளவிலான கழிவுகளையும், உப்பையும் நீரில் இருந்து அகற்றும் செயற்பாட்டில் பெறப்படும் கழிவு, தாதுப் பொருள்களை வேறுபடுத்தும் போது வரும் கழிவுகள், நீராவி பிறப்பாக்கியிலிருந்து வரும் கழிவுகள், கரைந்த திண்மப் பொருள்கள் உட்பட வேறு பல கழிவுகளையும் கடலில் கொட்ட அனுமதி வழங்கியுள்ளது. கூவம் வாய்காலில் சாக்கடைகள் கொட்டுவதைக்கூட தடுத்து நிறுத்த முடியாத அமைப்பே தமிழ் நாடு சூழல் பாதுகாப்பு சபை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சல்பர் டைஒக்சைட், நைத்தரசன் டை ஒக்சைட், அத்துடன் பாதிப்பை விளைவிக்கக் கூடிய, சூழலை மாசுபடுத்தக் கூடிய கதிரியக்க வாயுக்கள் காற்றில் கலப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. காற்றில் கலக்கும் கதிரியக்க வாயுக்கள் இலங்கையின் வட பகுதிக்கும் காற்றுடன் கலந்து வரும் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டும்.

அணுமின் நிலையம் ஒன்று இந்தியாவுக்கு தேவையா? என்ற கேள்விக்கு, மாற்று வழிகளில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றபோதும், இவை உலக அணு வர்த்தக நலன் சார்ந்தவை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இங்கு மக்களின் நலன்களுக்கு இடமில்லை. இந்த மின் நிலையம் அமைப்பது தொடர்பில் தாராளமாக ஊழல் நடந்துள்ளமையும் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இத்தனைக்கு மத்தியில் கூடங்குளம் மின் நிலையம் சர்வதேச தரத்திற்கேற்ப பாதுகாப்பான முறையில் அமைக்கப்படவில்லையென்பதை மையப்படுத்தியே அதற்கெதிரான இயக்கம் செயற்படுகிறது. சுற்றாடலில் உள்ள மக்களுக்கு உடன் அச்சுறுத்தலாக மின் நிலையம் விளங்குவதாகவும், பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படவில்லையெனவும் கூறப்படுகிறது. 2013 ஏப்பிரல் மாத இறுதியில் மின் நிலையத்தின் நான்கு வால்வுகள் சரிவர இயங்கவில்லையென தகவல் வெளியாகியுள்ளன. இந்தத் தகவலை இந்தியாவின் அணு சக்தி ஒழுங்கமைப்பு சபை ஊர்ஜிதம் செய்தது. எவ்வாறாயினும் இது சரி செய்யப்பட்டு மின் நிலையம் மே மாதத்தில் இயங்க ஆரம்பிக்குமென அறிவிக்கப்பட்டது.

"அரசு 2012 மார்ச் மாதத்திலிருந்து அவ்வப்போது மின் நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் திகதிகளை அறிவித்த போதும் ஏதும் இடம்பெறவில்லை" என தமிழ் நாட்டின் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த விக்டோரியா புஸ்பராஜன் தெரிவித்தார். "நான்கு வால்வுகள் சீரற்றமுறையில் இயங்குவது சிறிய விடயமென அணுசக்தி ஒழுங்கமைப்பு சபை தெவிரித்ததானது அது பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதைக் கோடிட்டுக் காட்டுகிறது" என அணுஉலை எதிர்ப்பியக்கத் தலைவர் எஸ்.பி. உதயகுமார் தெரிவித்தார். 1991ல் கூடங்குளம் அணுமின் நிலையம் அமைப்பதற்காக ஏற்பாடு செய்த சமயம் அதன் பிரதம வடிவமைப்பாளராயிருந்த ரஷ்யாவின் சேர்ஜி றிக்கோவ் விமான விபத்தொன்றில் காலமானார். இப்போது மின் நிலையத்தின் வடிவமைப்பு சம்பந்தப்பட்ட எந்தக் கேள்விகளுக்கும் ஒருவரும் பதில் கூற முன்வருகிறார்களில்லை.

இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ஆர்.எல். விஜேவர்த்தன பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளிக்கும் போது பின்வருமாறு தெரிவித்திருந்தார், "அணு மின் நிலையங்கள் அமைக்கும் போது நாடுகள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் உண்டு. இந்தியா தன்னிச்சையாக அணுக்கழிவுகளை கடலில் கொட்டமுடியாது' என்றார். "இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக விளக்கம் கொடுத்துள்ளது. எங்களுக்குத் தரப்பட்ட விளக்கங்களை அடிப்படையாக கொண்டே நான் எனது அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன். பத்திரிகையில் அம்பலப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இந்திய அணுசக்தி அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன" என கலாநிதி விஜேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த நாடுகள் படிப்படியாக தம்மிடம் இருக்கும் அணுமின் நிலையங்களை மூடிவிட முடிவு செய்துள்ளன. புதிதாக அணுமின் நிலையங்களை நிறுவ அவை முன்வரவில்லை. யப்பான் 2030ம் ஆண்டில் சகல அணுமின் நிலையங்களையும் மூடவுள்ளது. ஜேர்மனி 2015ம் ஆண்டளவில் அதன் அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடவுள்ளது. இந்த நிலையில் இந்தியா அணுமின் நிலையத்தை நிறுவ முயல்கின்றது. உலக அணு வியாபாரம் வழக்கொழிந்து வரும் அணுத் தொழிநுட்பங்களையும், மனித குலத்துக்கே அச்சுறுத்தலான அணு மின் உற்பத்தியையும் மூன்றாம் உலக நாடுகளின் தலையில் கட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையும், இந்தியாவும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின் சக்தியைப் பெறுவது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்பதை நாம் அவதானிக்கலாம். இவை பண்நாட்டு கம்பனிகளிடம் நாட்டையும் மக்களையும் தரகு பணத்திற்காக காட்டிக்கொடுப்பதில் வலு ஒற்றுமையாகவே உள்ளன. இந்த போக்கிற்கு எதிராக நாம் போராடும் மக்களுடன் ஐக்கியப்பட வேண்டும்.

• • •

---

## 02>> பு.ஜ.மா.லெ.க தேர்தலில்...

பேரினவாதத்தையும் அதன் ஆட்சியினரையும் எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் தமிழ் தரப்பு கட்சிகள், குறுந்தேசியவாதத்தில் தங்கி நின்று ஆதிக்க அரசியலை முன்னெடுப்பதில் அக்கறையுடன் இருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றில் போட்டியிட்டு பதவிகள் பெற்றால் போதுமானதாகும். அதற்கு அப்பால் சென்று கடந்த காலத்தின் தோல்விகண்ட அனுபவங்கள், பட்டறிவுகள் மூலம் புதிய கொள்கைத் திட்டங்களையோ வேலைத்திட்டங்களையோ முன்வைத்து மக்களை அணிதிரட்ட முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர். இதற்குக் காரணம் அவர்களது பழைமைவாத கருத்தியல் சிந்தனையும், மேட்டுக்குடி உயர்வர்க்க நிலைப்பாடுமேயாகும்.

ஆனால் இன்றைய சூழலில், இவற்றுக்கு அப்பால் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் என்ற அடிப்படையில் உழைக்கும் மக்களை முதன்மைப்படுத்தி நிற்கும் கொள்கைகளும் வேலைத்திட்டங்களுமே முன்னெடுக்கப்படல் வேண்டும். அத்தகைய மாற்று அரசியல் அரங்கிற்கு தமிழ் மக்களை அணிதிரட்டி தங்களது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கக் கூடிய புதிய அரசியல் சூழல் உருவாக்கப்படல் வேண்டும். அதன் ஊடாகவே ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லிம் மலையகத் தேசிய இனங்கள் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கையில் சுயாட்சி உரிமைகளை வென்றெடுக்க முடியும். இத்தகைய போராட்ட முன்னெடுப்பில் அரசினால் ஒடுக்கப்படும் உழைக்கும் சிங்கள மக்களை நட்பு சக்திகளாக இணைத்துக்கொண்டு முன்செல்வது அவசியமானதாகும். இதனை தேர்தல் அரசியலுக்கு அப்பால் வெகுஜனப் போராட்ட அரசியல் தளத்தில் மக்களை அணிதிரட்டுவதன் ஊடாகவே அடைய முடியும்.

அதேவேளை இம்மாகாண சபை தேர்தல்களில் மகிந்த சிந்தனை அரசாங்கம் அபிவிருத்தி, சலுகைகள், வேலைவாய்ப்புக்கள், பொருள் உதவிகள் என வழங்கி மக்களிடம் வாக்கு வாங்கிக் கொள்வதில் மும்மரமாக உள்ளனர். குறிப்பாக வட மாகாண சபை தேர்தல் களத்தில் இவை தாராளமாக இடம்பெற்று வருகின்றது. இவற்றின் மூலம் பெறப்படும் வாக்குகளைக் காட்டி தமிழ் மக்கள் தம்முடன் இருப்பதாகக் கூறி அரசியல் தீர்வை மறுப்பதனை நியாயப்படுத்துவதுடன் தொடர்ந்து பேரினவாத ஒடுக்குமுறையை தொடர்ந்தும் மேற்கொள்ளவே செய்வர். இந்நிலையில் இன்றைய ஜனநாயக விரோத சர்வாதிகார ஆட்சிக்கு மக்கள் வாக்களிப்பது என்பது தமது தலைகளுக்கு தாமே மண் வாரிப் போடுவதாகவே அமையும். ஆதலால் தேர்தல்களில் வாக்களிக்க விரும்பும் மக்கள் இன்றைய ஒடுக்குமுறைக்கு எதிரான சக்திகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு தமது வாக்குகளை அளிப்பதே நியாயமான நிலைப்பாடாக இருக்க முடியும்.

# பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது

**தேசபக்தன்**

அரசியலமைப்புக்கான 13வது திருத்தச் சட்டம் பற்றிக் கிளப்பப்பட்ட சர்ச்சை எதற்கானது என்ற விவாதங்களும் விளக்கங்களும் தொடர்கின்றன. எனினும் அதை ஒரு பிரச்சினையாக எழுப்பியவர்கள் எவரும் சனாதிபதி ராஜபக்சவின் மறைமுக அங்கீகா ரமாவது இல்லாமல் அதைத் தொடங்கியிருக்க இய லாது. 13வது சட்டத்தின் கீழான முக்கியமான அதி காரம் எதுவுமே இதுவரை மாகாண சபைகட்குப் பரவலாக்கப்படவில்லை. எந்த வடக்கு- கிழக்கு மாகாண சபை தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர் வாக அமையும் என்று சொல்லப்பட்டதோ அந்த மாகாண சபை செயற்படாது போனமைக்கு விடுத லைப் புலிகளின் பங்களிப்பு முக்கியமானது. அது மட்டுமன்றி மாகாண சபையைத் தான் நினைத்த போது கலைக்கும் அதிகாரத்தைச் சனாதிபதி பெறு வதற்கு உதவியர்களும் அவர்களே.

போர் முடிவதற்கு முன்பே வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டன. அது இந்தியாவின் முகத்தில் அறை யும் விதமான செயல் எனப்பட்டது. இருந்தும் இந் திய அரசாங்கம் அதைப் பெரிதுபடுத்தாமல் விடுத லைப் புலிகட்கு எதிரான போரில் இலங்கைக்குப் பல வழிகளிலும் உதவியது. அதன் பின்பு 13வது சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக சனாதிபதி ராஜ பக்ச இந்தியாவிடம் உறுதியளித்ததாகக் கூறப்பட் டது. அதேவேளை மாகாண சபைகட்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க இயலாது என்ற நிலைப்பாட்டையும் ராஜபக்ச தெரிவித்தார்.

இந்த அதிகாரங்கள் சட்டத்தில் இருந்தாலும் அதை நிறைவேற்றும் நோக்கம் ராஜபக்ச அரசாங் கத்திற்கு இல்லை என்பது எப்போதிருந்தோ தெளி வாகியிருக்க வேண்டும். எனவே 13வது சட்டத் திருத் தத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வந்தோ அதை முற்றாகவே இல்லாமற் செய்தோ மேற்படி அதிகார ங்களை மறுப்பது, நீதிமன்ற மூலம் மாகாண சபை கள் அந்த அதிகாரங்களைப் பெறுவதைத் தடுக்கும் ஒரு நிரந்த வசதி மட்டுமே.

மற்றப்படி, அந்த அதிகாரங்களைப் பெயரளவில் பேணிக் கொண்டு நடைமுறையில் வழங்காமல் விடும் எண்ணம் இந்த அரசாங்கத்திற்கோ அதை தொடர்ந்து வரக்கூடிய எந்தப் பேரினவாத அரசாங்கத்தி ற்குமோ இல்லாததல்ல. அதை விட இப்போதைய உயர் நீதிமன்றம் மகிந்த சிந்தனை அரசாங்கம் இழுத்த இழுப்பு க்கு வளைந்து கொடுக்கும் என்பதும் நமக்குத் தெரிந் ததே. நாளை அதைவிடச் சுயாதீனமான ஒரு உயர்நீதி மன்றம் அமையுமானாலும் பாராளுமன்றத்தில் 2/3 பெரு ம்பான்மையுடன் புதிய சட்டத் திருத்தங்களைப் புகுத்து வது இயலாததல்ல. தென்னிலங்கை அரசியலில் பேரின வாதம் கோலோச்சும் வரை, 13வது சட்டத்திருத்தத்தின் மூலம் பயனுள்ள முறையில் மாகாண சபைகளுக்கு எந்த அதிகாரமும் கிடைக்காது என்பது உறுதி.

13ம் சட்டத்திருத்தம் தொடர்பான விவாதங்களும், காணி பொலிஸ் அதிகாரங்களைப் பறித்தபின்பே வட மாகாண சபைத் தேர்தல் என்ற கோரிக்கையும் வலுப் பெற்ற காரணம் வடமாகாண சபைத் தேர்தலைத் தவிர்ப் பதுதான் என்று பேசப்பட்டது. ஆனால் அந்த அதிகாரங் களைத் தேர்தலுக்கு முன்பு பறித்தாலும் தேர்தலுக்குப் பின்பு பறித்தாலும் அதில் ஒரு வேறுபாடும் இராது. ஏனெ னில் மகிந்த சிந்தனை அரசாங்கம் எதைப் பற்றியும் எவ ருடைய எந்த வியாக்கியானத்தாலும் தன் நடத்தையை மாற்றிக் கொள்வதில்லை. எனவே 13வது சட்டத் திருத் தத்தைப் பற்றிய பல்வேறு சர்வதேச அழுத்தங்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிற சூழ்நிலையில் அது ஒரு பிரச்சினையாக்கப்பட்டதில் என்ன நோக்கங்கள் உள் ளன என்பதை ஆராய்வது பயனுள்ளது.

13ம் சட்டத்திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு என்பதே குறைபாடானதாக இருக்கையில் மேற்குலகைத் திருப்திப்படுத்தக் கூடிய 'கற்ற பாடங்கள்' ஆணைக்குழு அறிக்கையின் நிறைவேற்றலையே இழுத்தடிக்கிற ஒரு அரசாங்கம் 13ம் சட்ட திருத்தத்திற்கு அதன் நோக்கங் களை நிறைவு செய்யும் விதமாக எதையும் செய்யாது. அதைவிட, அதை எதிர்காலத்திலும் எவரும் நிறைவேற் றுவதற்கு ஆப்பு வைக்கும் நோக்கத்துடனேயே அது போர் முடிந்து நான்கு ஆண்டுகளின் பின்பு பிரச்சினை யாக்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் ஜாதிக ஹெல உறுமயவும் பிற சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புகளும் விமல் வீரவன்ச போன்றோரும் அதன் சூத்திரதாரிகளாகக் காட் டப்பட்டாலும் உண்மை யில் ராஜபக்ஷ அரசாங் கத்தின் உட்கிடக் கையை நிறைவேற்றவே அவர்கள் தூண்டிவிடப் பட்டுள்ளனர். ஜாதிக ஹெல உறும யவுக்கும் அரசாங் கத்திற்குமி டையே 'ஜனநாயகம்' 'ஊழல்' போன்றவை பற் றியும் 'சனாதிபதி ஆட்சி முறை' பற்றியும் முரண் பாடுகள் உள்ளதாகச் சொல்லி யூ.என்.பி. தலைமை மத வெறி பிடித்த ஜாதிக ஹெல உறுமயவுடன் உறவு கொண்டாடினாலும், அரசா ங்கத்தின் பேரினவாத வேலைத் திட்டத்தின் ஒரு கருவி யாகவே அது இன்னமும் இயங்குகிறது. ஹெல உறுமய விற்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுட னும் பாதுகாப்புப் படையிலும் வலுத்து வரும் செல்வாக் கும் அவர்கட்குச் சிங்கள பௌத்த தீவிரத்துடனான நெருக்கமும் இவ்வேளை கவனத்திற்குரியன.

13ம் சட்டத்திருத்தத்தில் அரசாங்கம் எப்படிக் கை வைத்தாலும் அதை எதிர்ப்பது முக்கியமானது. அந்த எதிர்ப்பு வெறுமனே பாராளுமன்றக் கையுயர்த்தல்கட்கும் அந்நிய நாடுகளின் குறுக்கீடு பற்றிய எதிர்பார்ப்புக்களுக்கும் நடுவே முடங்கிப் போகும் என்றால், அது பேரினவாதிகளின் நோக்கத்திற்கே உதவும்.

13ம் சட்டத்திருத்தத்தில் அரசாங்கம் எப்படிக் கை வைத்தாலும் அதை எதிர்ப்பது முக்கியமானது. அந்த எதிர்ப்பு வெறுமனே பாராளுமன்றக் கையுயர்த்தல்கட்கும் அந்நிய நாடுகளின் குறுக்கீடு பற்றிய எதிர்பார்ப்புக் களுக்கும் நடுவே முடங்கிப் போகும் என்றால், அது பேரி னவாதிகளின் நோக்கத்திற்கே உதவும். சிங்கள மக்கள் நடுவே அரசாங்கத்தினதும் பேரினவாதிகளதும் நோக் கங்களைத் தெளிவாக விளக்குகிற பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ராஜபக்ச அவருக்கு முன் ஜயவர்த்தன செய்தது போல, ஒரு புறம் பேரினவாதத் தீவிரவாதிகளைத் தூண் டிவிட்டுத் தன்னை ஒரு மிதவாதி போலக் காட்டிக் கொள் வதும் அதன் மூலம் தனது பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதும் நமக்கு விளங்க வேண்டும். அதை நாம் மக்களுக்கும் விளக்க வேண்டும்.

• • •

## 8>> வட்டுக்கோட்டை

அந்த வேளை இரா.சம்பந்தன் தலைமையிலான தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித தயக்கமோ, வெட் கமோ, மானமோ, ரோசமோ இன்றி அதே சரத் பொன் சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட் டுக்கொண்டது. 2005ல் மகிந்த ராஜபக்ஷ முதல் தட வையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவ தற்கு விடுதலைப்புலிகள் உதவினார்கள். ஐந்து வரு டங்களுக்குப் பின்பு அதுவும் முள்ளிவாய்க்காலில் நாற்பதினாயிரம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட பின்பு சரத்பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டதன் மூலம் மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக வும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட உதவினர். இவ்விரண்டு தடவைகளிலும் தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு அடிப்படையில் ஒன்றாகவே அமைந்தி ருந்த ஒற்றுமையைத் தமிழர் ஆதிக்க அரசியலில் காணமுடிந்தது. இது அடிப்படையில் பாராளுமன்ற அரசியலிலும் பின்னர் ஆயுதப் போராட்ட அரசியலி லும் பின்பற்றப்பட்டு வந்த தமிழ்க் குறுந்தேசியவாத மேட்டுக்குடி உயர்வர்க்க சிந்தனைவயப்பட்ட அரசி யல் முடிவுகளாகவே அமைந்திருந்தன.

முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களில் போட்டுக் கொள்ளவே என்று முது மொழிக்கு இணங்க புலிகள் இயக்கம் 2006ம் ஆண் டின் யூலையில் முன் பின் யோசனையற்ற ஒரு முடிவை மேற்கொண்டனர். அதாவது 2006ம் ஆண்டு யூலை மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் சம்பூருக்கு அண்மையில் அமைந்திருந்த மாவிலாறு நீர்த் தேக்கத்திலிருந்த விவசாய நீர்ப்பாசனத்திற்கான வான் கதவுகளை மூடிக் கொண்டதுடன் அதனைத் திறக்கவிடாது ராணுவக் காப்பரண்களையும் ஏற்படுத் தினர். இதனால் சிங்கள விவசாயிகளின் பல ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் நீர் இன்றி வாடிக் கருகத் தொடங்கின. இதனை நல்ல சந்தர்ப்பமாகவும் காரண மாகவும் கொண்ட ராணுவம் மாவிலாறு மீட்புக்கான ராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. அதனைப் பெரும் ஊடகப் பரப்புரையாக்கி சிங்கள விவசாயிக ளையும் மக்களையும் உணர்ச்சியூட்டிக் கொண்டது.

ஏற்கனவே புலிகள் இயக்கம் திருகோண மலையின் நகரத்திற்கு அப்பாலான கிராமங்களில் தம்மை நிலைப்படுத்தி வைத்திருந்தனர். மூதூர் சம் பூர் பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. திருகோணமலையின் புவியியல் அரசியல் இனத்துவ சூழலில் மேற்படி பிரதேசங்கள் புலிகள் இயக்கத்திற்கு மிக முக்கியத்துவமுடையதாக இரு ந்து வந்தது. அதேவேளை இலங்கை ராணுவத்திற்கு ஒரு உறுத்தலாக மட்டுமன்றி அச்சுறுத்தலாகவும் இரு ந்து வந்தது. எனவே மாவிலாறுப் பிரச்சினை ஏற்பட்ட தும் ராணுவத்திற்கு நல்ல சந்தர்ப்பமாகவும் அமை ந்து கொண்டது.

மாவிலாறுடன் மட்டும் ராணுவம் தனது நடவடிக் கைகளை நிறுத்திக் கொள்ளவில்லை. ராணுவ நகர்வு, மூதூர், சம்பூர் நோக்கிச் சென்றது. புலிகள் நின்றுபிடிக்க முடியாது அங்கிருந்து பின்வாங்கிக் கொண்டனர். அதேவேளை சம்பூர் முழுவதும் ராணு வத்திடம் வந்ததுடன் அங்கு வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் அகதிகளாகினர். இன்றுவரை சம்பூர் மக்கள் தமது பூர்வீக மண்ணுக்குத் திரும்ப முடியவில்லை. இனிமேலும் திரும்புவதற்கு அரசாங்கம் விடமாட்டாது. ஏனெனில் அப்பிரதேசம் அபகரிக்கப்பட்ட தமிழர் பிர தேசம் என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அங்கேதான் இந்தியா அறுநூறு ஏக்கர் நிலத்தில் அனல் மின் உற்பத்தி நிலையத்தைக் கட்டவுள்ளது. ஏனைய நிலப்பகுதியில் பாரிய வெளிநாடுகளின் முத லீடுகளுடன் கைத்தொழில் பேட்டை உருவாக்கப்பட வுள்ளது. புலிகள் இயக்கத்தின் தந்திரோபாயமற்ற மாவிலாறு அணையை மூடும் முட்டாள்தன நடவடிக் கையானது அவர்களைத் தோல்விக்கு உள்ளாக்கிய துடன் மக்களையும் அகதிகளாக்கி தமிழர் பிரதேசம் பறிபோகவும் வைத்தது.

மாவிலாறில் ஆரம்பித்த தரை, கடல், ஆகாயத் தாக்குதல் என்பன முழுக் கிழக்கை நோக்கியும் திருப்பப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் புலிகள் செல் வாக்குப் பெற்றிருந்த போதிலும் அங்கே வடக்கு வன்னிப் பெரு நிலப்பரப்பில் செலுத்திவந்த கட்டுப் பாடு போன்று நிலைமைகள் இருக்கவில்லை. தமிழ் முஸ்லீம் பிரதேசங்கள் கலந்திருந்தன. அதேபோன்று சிங்கள் மக்களும் தமிழ் முஸ்லீம் மக்களோடு கலந் திருந்தனர். எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப் பாகப் படுவான் கரைப் பிரதேசத்தில் உள்ள கிராமங் களில் புலிகளின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. புலிகளின் கிழக்கு வளர்ச்சிக்கும் குறித்தளவு கட்டுப் பாட்டிற்கும் புலிகளின் தலைமைத் தளபதிகளில் ஒருவராக இருந்த 'கருணா அம்மான்' என அழைக் கப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரனும் அவருக்கு அடுத்ததாக இருந்து வந்த 'பிள்ளையான்' என அழை க்கப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தனும் முக்கிய மானவர்களாக இருந்தனர். இவர்களது தலைமையில் கிழக்கில் போராளிகளின் பலமான அமைப்பாக விடுத லைப் புலிகள் இயக்கம் அமைந்திருந்தது.

ஆனால் அவர்கள் 2004ம் ஆண்டில் புலிகள் இய க்கத்தில் இருந்து பிரிந்து சென்று மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தனர். இப்பிளவுச் செயலைத் தடுக்கவும் பிரிந்து சென்றோரைத் தண்டித் துப் பழிவாங்கவும் புலிகள் கிழக்கில் அவர்கள் மீது ஒரு தாக்குதல்களை மேற்கொணடனர். அதில் புலிக ளின் தலைமை பிரதேசவாதக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்டதான குற்றச்சாட்டு எழுந்தது.

அதேவேளை, பிரிந்து சென்ற கருணா குழுவினர் அரசாங்கப் படைகளின் ஆதரவையும் அரவணைப் பையும் பெற்றனர். புலிகள் கிழக்கில் பலவீனமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இச்சந்தர்ப்பத்தை அர சாங்கப் படைகள் நன்கு பயன்படுத்தி கிழக்கின் மீது உக்கிரத் தாக்குதலை நடாத்தினர். தொப்பிக்கல என ப்பட்ட குடும்பிமலைக் காட்டுப் பிரதேசங்களிலும் விவ சாய பிரதேசங்களிலும் தாக்குதல்கள் தீவிரமாக்கப் பட்டதுடன் விமானக் குண்டு வீச்சானது மிக மோசமா னதாக அமைந்திருந்தது.

புலிகளுக்கு எதிரான, கிழக்கை விடுவிக்கும் இப் போரில் சுமார் இரண்டரை லட்சம் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகினர். புயல், மழை, சுனாமி என் பனவற்றாலும் இயக்கங்களிடையேயான மோதல்க ளாலும் ராணுவம், அதிரடிப்படைகளாலும் அவ்வப் போது பாதிக்கப்பட்டு வந்தவர்கள் கிழக்கின் மக்கள். மேலும் புலிகள் மத்தியில் ஏற்பட்ட பிளவினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். இறுதியாகப் புலிகளை அழிக் கும் 2006 ஆண்டின் இலங்கை ராணுவ நடவடிக்கைக ளாலும் மோசமான தாக்குதல்களாலும் மக்கள் கடும் பாதிப்புக்களைப் பெறவேண்டியதாயிற்று.

கிழக்கின் மீது தொடுக்கப்பட்ட போரில் புலிகள் தலைமை தமது நிலைகளில் இருந்து பின்வாங்கி பெரும் இழப்புக்களைத் தவிர்த்தவாற வன்னிக்கு மீண்டனர். கிழக்கைச் சேர்ந்த போராளிகள் வன்னிக் குச் செல்வதை விரும்பாது ராணுவத்திடம் சரண டைந்தனர். அதிகளவு போராளிகள், கருணா, பிள்ளையான் அணிகளில் இணைந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர். 2006ம் ஆண்டு இறுதிப் பகுதியில் அரசாங்கம் கிழக்கின் ராணுவ வெற்றி யைக் 'கிழக்கின் உதயம்' என்ற பெயரில் விழா எடுத்துக் கொழும்பில் கொண்டாடினர். அந்த வெற்றி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியாகப் பரப்புரை செய் யப்பட்டது. அடுத்து வெற்றி கொள்ளப்பட வேண்டியது வடக்கு என்ற சூளுரையுடன் அரசாங்கம், படைகள் என்பனவற்றின் கவனம் வடக்கு நோக்கித் திருப்பப் பட்டது. அது பற்றி அடுத்த இதழில் நோக்குவோம



**ஒரு கம்யூனிச சமுதாயம் நிறுவப்பட்ட போதிலும் ஒவ்வொருவரும் முழுமையானவராக இருக்க முடியாது. அப்போதும் மக்களிடையே முரண்பாடுகள் இருக்கும். அப்போதும் நல்ல மனிதர்களும் தீயமனிதர்களும் இருப்பார்கள். ஒப்பீட்டளவில் சரியான சிந்தனை உள்ளவர்களும் ஒப்பீட்டளவில் தவறான சிந்தனையுள்ள பிறரும் இருப்பார்கள். எனவே அதன் தன்மையும் வடிவமும் வர்க்க சமுதாயத்தில் இருப்பதைவிட மாறுபட்டதாக இருந்தாலும் அப்போதும் மக்களிடையே போராட்டம் இருக்கும்.**

# சோசலிசத்தின் கீழ் முரண்பாடுகள்

ஏப்ரல் 5, 1956

சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் ஒருபோதும் நிலவுவதில்லை என்று சில சூதுவாதற்ற கருத்துக்கள் தெரிவிப்பதாகத் தோன்றுகின்றது. முரண்பாடுகள் இருப்பதை மறுப்பது இயக்கவியலை மறுப்பதாகும். பல்வேறு சமுதாயங்களில் முரண்பாடுகள் அவற்றின் பண்புகளில் மாறுபடுகின்றன. அதுபோலவே அவற்றிற்கான தீர்வுகளும் மாறுபடுகின்றன. ஆனால் சமுதாயம் தொடர்ந்து முரண்பாடுகளினூடே எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கிறது. சோசலிச சமுதாயம்கூட உற்பத்திச் சக்திகளுக்கும் உற் பத்தி நிலைமைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளினூடே வளர்கிறது. ஒரு சோசலிச அல்லது கம்யூனிச சமுதாயத்தில் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் சமூக அமைப்பில் முன்னேற்றமும் தவிர்க்க முடியாதவாறு நிகழ்கின்றன. இல்லாவிட்டால் சமுதாயத்தின் வளர்ச்சி ஸ்தம்பித்துவிடும். சமுதாயம் அதற்குமேல் முன்னேறாது.

மனித இனம் இன்னும் அதன் இளம்பருவத்திலேயே இருக்கிறது. அது இன்னும் பயணம் செய்யவேண்டிய பாதை அது ஏற்கெனவே பயணம் செய்து வந்த பாதையைக் காட்டிலும் எத்தனை மடங்கு நீண்டது என்பது யாருக்கும் தெரியாது. முற்போக்கிற்கும் பழமைவாதத்திற்கும் இடையிலான முரண்பாடு, உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் இடையிலான முரண்பாடு, முன்னேறியுள்ளதற்கும் பின்தங்கியுள்ளதற்குமான முரண்பாடு, உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் இடையேயான முரண்பாடு வேறுவேறு சூழ்நிலைகளில் மாறுபடும் நிலைமைகளில் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும்.

நிகழ்வுகள் இவ்வாறுதான் போய்க் கொண்டேயிருக்கும். ஒரு முரண்பாடு தீர்க்கப்படுகிறபோது புதிய முரண்பாடுகள் தோன்றும். சிலர் நினைத்துக் கொண்டிருப்பது போல் சோசலிச அல்லது கம்யூனிச சமுதாயத்தில் கருத்து முதல்வாதத்திற்கும் பொருள் முதல்வாதத்திற்கும் இடையிலான முரண்பாடு ஒழிக்கப்பட்டுவிட முடியும் என்று கூறிக் கொண்டிருப்பது மிகவும் தவறானது. அகவய நிலைக்கும் புறவய நிலைக்கும் இடையிலான முரண்ாடுகள் நிலவும்வரை, உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி நிலைமைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவும்.

கருத்து முதல்வாதத்திற்கும் பொருள் முதல்வாதத்திற்கும் இடையிலான முரண்பாடு, சோசலிச அல்லது கம்யூனிச சமுதாயத்தில் தொடர்ந்து கொண்டேயிருக்கும், அது வேறு வேறு வடிவங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். மனிதன் சமுதாயமாக வாழ்வதால், வேறு சூழ்நிலைகளில் மாறுபடும் அளவுகளில் ஒவ்வொரு சமுதாய வடிவிலும் நிலவும் முரண்பாடுகளைப் பிரதிபலிக்கிறான்.

எனவே ஒரு கம்யூனிச சமுதாயம் நிறுவப்பட்ட போதிலும் ஒவ்வொருவரும் முழமையானவராக இருக்க முடியாது. அப்போதும் மக்களிடையே முரண்பாடுகள் இருக்கும். அப்போதும் நல்ல மனிதர்களும் தீய மனிதர்களும் இருப்பார்கள். ஒப்பீட்டளவில் சரியான சிந்தனை உள்ளவர்களும் ஒப்பீட்டளவில் தவறான சிந்தனையுள்ள பிறரும் இருப்பார்கள். எனவே அதன் தன்மையும் வடிவமும் வர்க்க சமுதாயத்தில் இருப்பதைவிட மாறுபட்டதாக இருந்தாலும் அப்போதும் மக்களிடையே போராட்டம் இருக்கும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், ஒரு சமுதாயத்தில் தனிநபருக்கும் ஒட்டுமொத்தத்தினருக்கும் இடையில் இருக்கும் முரண்பாடு புதுமையானதல்ல.

**(1956ஆம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் நாள் மக்கள் தினசரி இதழில் 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி' என்று தலைப்பிட்ட தலையங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள். )**

• • •

## 05>>> முள்ளிவாய்க்காலில் இருந்து.....

உண்ணாவிரதம் இருந்துவந்தனர். அவை எதுவும் கவனிக் கப்படவில்லை. இந்நிலையில் வேறு மார்க்கம் இன்றி மக்கள் திரண்டெழுந்து நியாயங்கோரினர். அத்தகைய மக்கள் மீதே ராஜபக்ஷ சகோதரர் ஆட்சி தமது படைக ளைக் கட்டவிழ்த்துவிட்டது.

இச்சம்பவமும் ஏற்கனவே இடம்பெற்ற கட்டுநாயக்கா, சிலாபம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் எடுத்து விளக்கும் அடிப்படை உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. அந்நிய உள்நாட்டு முதலீட்டாளர்களின் சுரண்டுவதற்கான மூலதனம் என்பது தொழிற்சாலைகளாக 80களில் இருந்தே இங்கு நடைமுறையாக்கப்பட்டன. அவை சுதந்திர வர்த்தக வலயம் என்னும் பரப்பில் கடைவிரிக்க ஆரம்பித்தன. அந்த மூலதனத்திற்கு அரசியலமைப்பு வாயிலாக்ப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதில் பிரதானமானதே அரசு யந்திரத்தினது பிரதான பகுதியாகிய ஆயதப்படைகள் அம் மூலதனத்தின் காவல் நாய்களாக வைக்கப்பட்டன.

இம்மூலதனத்தை வைத்து சுரண்டுவதற்குத் தொழிலாளர்கள், அந்நிய முதலீட்டால் வேலை வாய்ப்பு எனக் கூறி அமர்த்தப்பட்டனர். தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்துடனும் சில ஏமாற்றுச் சலுகைகளுடனும் உழைப்பில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதனால் லாபம் கோடி கோடியாகக் கொட்டியது. அத்தகைய தொழிற்சாலைகளின் ஒன்றே 1998ல் கம்பஹா-ரத்துஸ்பஸ்வல-வெலிவேரியாப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'டிப்ட் புரடக்ட்ஸ் பி.எல்.சி' (Dipped Products PLC) ரப்பர் கையுறை தயாரிக்கும் தொழிற்சாலையாகும். இங்குதான் வின்குரோஸ் என்னும் பெயரிலான கையுறை தயாரிக்கப்படுகிறது. இதில் ஆகக்கூடிய பங்கினைக் கொண்டிருப்பவர் சிங்களக் கோடீஸ்வரர்களில் ஒருவரான தம்மிக்க பெரேரா ஆவார். இவர் சம்பத் வங்கியின் தலைவராகவும் நாற்பது நிறுவனங்களுக்கு மேற்பட்டவற்றில் அதிக பங்குகளைக் கொண்டவருமாவர். இப்போது ராஜபக்ஷ சகோதரர்களது ஆட்சியில் இத்தொழிற்சாலை பங்குதாரர்கள் பற்றி மிக இரகசியம் பேணப்படுகிறது. அது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது. இந்நிலையில் ஓகஸ்ட் முதலாம் திகதி தாக்குதலுக்குப் பின் அத் தொழிற்சாலை மூடப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி ஆணை பிறப்பித்துக் கொண்டார். இது சம்பவத்தின் எதிர் அலையினைத் திசை திருப்புவதற்கு முயற்சிகள் செய்யப்படுவதன் ஒரு பகுதியேயாகும்.

இத்தாக்குதல் மக்களுக்குக் குறிப்பாகச் சிங்கள மக்களுக்கு ஒரு உண்மையை நடைமுறை ரீதியாக நிரூபித்துக் கொண்டது. அதாவது ஆளும் மகிந்த சிந்தனையின் கீழான ராஜபக்ஷ சகோதரர்களது ஆட்சியும் அவர்களது ஆயுதப் படைகளும் தங்களுடையவை அல்ல என்பதுவே அதுவாகும். மேட்டுக்குடி உயர் வர்க்க சிங்களவருக்கிடையிலான முரண்பாட்டில், பிரச்சினைகளில் ஆட்சியினரும், ஆயுதப்படைகளும் சாதாரண சிங்கள மக்களின் பக்கம் இருக்க மாட்டார்கள் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. இது முன்பும் பல தடவைகள் முந்திய யூ.என்.பி ஆட்சியிலும் நிரூபிக்கப்பட்டு வந்தன.

தமிழ் மக்க ளுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தின் போது சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் காப்பாற்றவே தாம் யுத்தத்தில் தமிழ் மக்களைக் கொல்ல வேண்டி ஏற்பட்டது எனக் கூறியவர்கள் ராஜபக்ஷ சகோதரர்கள். ஆனால் இப்போது குடிநீர் கேட்ட சிங்கள உழைக்கும் மக்களான ரத்துபஸ்வல வெலிவேரிய மக்கள் மீது ஏன் சுட்டார்கள் என்பதற்கு உரிய விடையினைச் சிங்கள மக்கள் தேடவேண்டும். ஆளுவோர் யார் பக்கத்தில் உள்ளனர் என்பது உற்று நோக்கப்பட வேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகளின் தொழிற்சாலைகள் தமது கொள்ளை லாபத்திற்காக நிலம், நீர், காற்று என்பனவற்றை எவ்வாறு காட்டுமிராண்டித்தனமாக மாசடையவைத்து வருகின்றன என்பதையும் காணுதல் வேண்டும். எனவே இவற்றின் ஊடாக இன்றைய பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களுக்கு வழி காட்டித் தலைமை தாங்கும் இன்றைய அரசியலமைப்பும் அதன் கீழான ஆட்சி அதிகாரத் தலைமைகள் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதனையே வர்க்க அடிப்படையில் வைத்து நோக்குதல் வேண்டும் எனக் கோரப்படுகிறது.

நேற்று எங்களுக்கு நடந்தது இன்று அவர்க ளுக்கே நடக்கிறது. நன்றாகவே நடக்கட்டும், இது போதாது, தொடரவேண்டும் எனக் கூறுவது தமிழ்க் குறுந்தேசியவாதப் பிற்போக்குத்தனமாகும். முள்ளிவாய்க்காலில் இடம் பெற்றவை பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையாகும். வெலிவேரியாவில் நடைபெற்றவை வர்க்க ஒடுக்குமுறை சார்ந்த ஒன்றாகும். முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் உழைக்கும் வர்க்கத் தமிழர்கள். வெலிவேரியாவில் கொல்லப்பட்டவர்களும் தாக்குதலுக்குள்ளானவர்களும் சாதாரண சிங்கள உழைக்கும் மக்களாவர். இவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால், வெலிவேரிய நிகழ்வுகளுக்கு முன்பும் நிறைவே நடந்துள்ளன. மென்மேலும் நடக்க உள்ளன. இவற்றிலிருந்து உரிய பாடத்தை படித்து ஆளும் வர்க்கப் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகவும் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் சரியான அரசியல் மார்க்கத்தில் அணிதிரள வேண்டியதே உழைக்கும் மக்களுக்கு முன்னால் உள்ள அரசியல் பாடமும் கடமையுமாகும்.

## 13>>> 35வது ஆண்டில்...

*மூன்றாவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் அரசியல் நீக்க வேலை முறையும் அத்துடன் நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் வருகையும் மக்களது வாழ்வில் பாதகமான தாக்கங்களை விளைவித்தன. ஒட்டுமொத்தத்தில் தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் என்பனவற்றின் மூலம் இடதுசாரி இயக்கமும் தொழிலாளி வர்க்க செயற்பாடுகள் முடக்கம் பெற்றன. அடையாள அரசியல் போக்குகள் மேற் கிளம்பின. ஒவ்வொரு தேசியமும் தமக்கென தனித்தனி வேலிகள் இட்டுக் கொண்டன. இத்தகைய சூழலில் ஒரு மாக்சிச லெனினிசக் கட்சி தன்னைத் தக்கவைத்துக் கொள்வது என்பது எவ்வளவு சிரமும் கடினமும் என்பதை எமது கடந்த கால கட்சி வாழ்வு எமக்கு பெரும் அனுபவமாகியுள்ளது.*

*எமது கட்சி வடக்கிலும் மலையகத்திலும் கொழும்பிலும் தனது வர்க்க நிலைப்பாட்டுடனான அரசியல் வேலைகளையும் கலை இலக்கிய பண்பாட்டு வேலைகளையும் முன்னெடுத்து வந்துள்ளது. அவற்றின் ஊடாக நமது மாக்சிச லெனினிச அரசியலை மக்கள் மத்திக்கு முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருந்தது. மக்கள் மத்தியில் வெகுஜன அமைப்புகள் மூலம் தனது சக்திக்கும் வளங்களுக்கும் ஏற்ப வேலை செய்து வந்துள்ளது. வளப் பற்றாக்குறைகளும் நிதி நெருக்கடிகளும் இருந்து வந்தபோதிலும் வெகுஜன அரசிய இதழாக பாட்டாளி, செம்பதாகை, புதிய பூமி, புதிய நீதி மாதாந்தப் பத்திரிகைகளை வெளியிட்டு வந்துள்ளது. அதேவேளை கட்சியின் தத்துவார்த்த சஞ்சிகையாக ஆங்கிலத்தில் வெளிவந்த* ***New Democracy*** *தற்பாது* ***Marxist Leninist New Democracy*** *ஆக வெளிவந்துகொண்டிருக்கிறது. தேசிய கலை இலக்கியப் பேரவை மக்கள் கலை இலக்கிய அமைப்பாக இயங்கவும் அதன் சஞ்சிகையாகத் தாயகம் வெளிவருவதற்கும் கட்சி தனது ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளது.*

*அதேபோன்று, மக்களது பிரச்சினைகளுக்கு அதன் தேவைகளுக்கு ஏற்ப வெகுஜன அமைப்பகளை வடக்கிலும் மலையகத்திலும் கொழும்பிலும் உருவாக்கி பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதில் கட்சி தனக்குரிய பாத்திரத்தை வகித்து வந்துள்ளது. இவை யாவும் கட்சியின் 35 வருடகால வரலாறு தொகுக்கப்படும் போது விரிவான பார்வைக்கு உட்படுத்தப்படும்.*

*அன்று கட்சியைத் தோற்றுவிப்பதில் முன்னின்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இன்று நம்மிடையே இருந்து மறைந்துபோன ஆரம்ப பொதுச் செயலாளர் கே.ஏ. சுப்பரமணியம், அரசியல் குழு உறுப்பினர் தோழர் சி. நவரட்ணம், மத்தியகுழு உறுப்பினர் தோழர் இ.கா. சூடாமணி, மலையகப் பிராந்தியக்குழு உறுப்பினர் தோழர் பெ. சந்திரகுமார், வடபிராந்திய குழு உறுப்பினர் தோழர் மகாதேவன்(லிங்கம்), தோழர் க. இராசையா, தோழர் தா. தருமலிங்கம் ஆகியோர் உணர்வோடு நினைவுகூரப்பட வேண்டியவர்கள். இவர்களோடு கட்சி உறுப்பினர்களான சி. துரைசிங்கம், மு. கந்தப்பிள்ளை, சி. இராசதுரை, பா. இராதா, பா.பசுபதி, க. பரமு, ஆகியோர் புரட்சிகர நினைவுக்குரியவர்களாகின்றனர்.*

*கடந்த 34 வருடங்களில் பல்வேறு நெருக்கடிகள் அடக்குமுறைகள் வாழ்க்கைத் துன்பங்கள் மத்தியில் கட்சியைக் கட்டிக்காத்து வளர்த்து முன்னெடுப்பதில் தத்தமது ஆற்றல்கள் அர்ப்பணிப்புகள் மூலம் பங்களிப்புச் செய்த அனைத்து தோழர்களும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அவர்களில் சிலர் இன்று கட்சியுடன் இல்லாது தனி மனிதர்களாக இருந்து வருகின்றனர். அவர்களைக் கட்சி என்றும் நிராகரித்தது கிடையாது. வெவ்வேறு காரணங்களினால் அத்தகையவர்கள் தூர விலகி நின்ற போதிலும் அவர்கள் அவ்வக் காலங்களில் வழங்கிய பங்களிப்பைக் கட்சி நினைவில் கொண்டுள்ளது.*

*இலங்கையில் தொடர்ச்சியாக 34 வருடங்கள் செயற்பட்டு வந்து இன்று 35வது வருடத்தில் கால் பதிக்கும் ஒரு மாக்சிச லெனினிசக் கட்சி என்பதில் எமது கட்சி பெருமைப்படுகிறது. இது தற்திருப்தியுடன் கூடிய ஒன்றல்ல. மிகவும் பாதகமான சர்வதேசச் சூழலிலும் மோசமடைந்த தேசிய நிலைமைகளிலும் எதிர்ப்புகள் விமர்சனங்கள் அவதூறுகள் பழிசுமத்தல்கள் மத்தியிலும் எமது கட்சி ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியாக, பாட்டாளி வர்க்கக் கட்சியாக தலைநிமிர்ந்து நிற்பதில் புரட்சிகர மகிழ்ச்சி அடைகின்றது. இச் சுருக்க வரலாற்றுக் குறிப்பினை விரைவாகவே விரிவான வரலாறாக வெளிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது கூற வேண்டியதொன்றாகும்.*

# குருதி தோயும் அரபு வசந்தம்

உலகோன்

இன்று துருக்கியில் அரங்கேறும் இராணுவ ஒடுக்குமுறையும் லிபியாவின் அரசற்ற நாட்டின் குழு வன்முறைகளும் துனிசியாவில் தொடரும் மக்கள் ஆர்ப்பாட்டங்களும் “அரபு வசந்தம்” மக்களுக்கு எதைப் பரிசளித்திருக்கிறது என்பதை காட்டுகின்றன. இரண்டு ஆண்டுகளிற்கு முன்பு வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகளின் விளைவான ஆட்சி மாற்றங்கள் சிலாகிப்பாக “அரபு வசந்தம்” என்று அழைக்கப்பட்டன. புதிய உலக ஒழுங்கில் சமூக வலைத்தளங்களின் உதவியோடு இவ்வாறே மக்கள் புரட்சிகள் சாத்தியம் என்று பேசப்பட்டது. எந்தெந்த வீதிகளில், சதுக்கங்களில் மக்கள் கூடினார்களோ அங்கெல்லாம் இன்று இன்னமும் குருதி சிந்துகிறது. அமெரிக்காவினதும் மேற்குலகத்தினதும் தேவைகளுக்கேற்ப ஆள்வோரின் தலைகளை மாற்றியதோடு அரபு வசந்தம் முடிவானது; தலைவலிக்கு தலையணையை மாற்றியது மட்டுமே இதன் விளைவானது.

இன்னொருவர் வந்தார். எகிப்தின் இராணுவக் கட்டமைப்பு உள்ளபடியே இருக்கிறது. எகிப்தை இன்னமும் இராணுவமே ஆளுகிறது; அதுவே அன்றாட அலுவல்களையுந் தீர்மானிக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் அதையே வேண்டுகின்றன. அமெரிக்காவிற்கு முழு உடன்பாடாக நடக்கத்தவறிய புதிய எகிப்திய ஜனாதிபதியை இராணுவம் பதவி விலக்கிச் சிறை வைத்துள்ளது. அரபு வசந்தம் தொடங்கிய துனிசியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்கிறது. அங்கு மக்கள் இன்னமும் தங்கள் உரிமைகட்காகப் போராடுகிறார்கள். யெமனில் ஊழல் அதிகரித்திருக்கிறது, மக்கள் அல்லற்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட நாடுகளின் மக்கள் பலர் இன்னுயிர் ஈந்து போராடியும் அவர்கள் வேண்டிநின்ற எந்த நற்பயனும் விளையவில்லை. தலைகள் சில மாறியதை விட்டால் வேறெதுவும் மாறவில்லை. போர்கள் இப்போது யாரையும் பாதுகாக்க அல்லாது லாபத்திற்காகவே நடக்கின்றன. உலக முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவத்தைப் புதிய போர்களை நோக்கி உந்துகிறது.

அரபு வசந்தம் என்ற பெயரில் பலவாறு மழுங்கடிக்கப்பட்ட தன்னனெழுச்சியான மக்கள் போராட்டங்கள்

*இஸ்லாமிய மதவாத, புரட்சிகர சக்திகளிடையே வேறுபாடுகள் சமூக ஏற்றத் தாழ்வுகளை வெளிச் சத்துக்கு கொண்டுவருவதோடு இஸ்லாமிய மதவாத சக்திகளின் நோக்கங்களையும் கேள்விக்குட்படுத்துகின்றன.*



*மக்கள் போராட்டங்களின் வெற்றிகள், வட ஆபிரிக்காவினதும் மத்திய கிழக்கினதும் ஏனைய நாடுகளினதும் மக்களுக்கு தமது உரிமைகட்காகவும் விடுதலைக்காகவும் போராடும் ஊக்கத்தைக் கொடுத்தது. அதனால், மக்கள் போராட்டங்கள், யெமன், பாஹ்ரேன், ஜோர்டான், சவூதி அராபியா ஆகிய நாடுகட்கும் பரவின. அவை, ஈரான், சிரியா, ஹிஸ்புல்லா, ஹமாஸ் என்பவற்றைக் கொண்ட ஒரு அமெரிக்க எதிர்ப்பு இணைவுக்குப் (axis of resistance) வலுவான ஒரு அரசியற்தளத்தை வழங்கின.*

எவ்வித உரிமைகளையும் வெல்லாதனவாக முடக்கப்பட்டன. இது இன்றைய உலகில் மக்கள் போராட்டங்கள் எவ்வாறு திசைதிருப்பப்படுகின்றன என்று விளங்க முக்கியமான பாடங்களைத் தருகிறது.

மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் அரபு வசந்தத்தின் பெயரால் இதுவரை நடந்தது என்ன? லிபியாவில், கடா.்.பியைக் கொன்று மேற்குலகிற்கு ஆதரவான ஆட்சியொன்று நிறுவப்பட்டது. ஆனால் மேற்குலக உதவி பெற்ற குழுக்களுக்கிடையான மோதல் லிபியாவில் அரசற்ற நிலையை உருவாக்கியுள்ளது. லிபியாவிற் போன்று சிரியாவிலும் ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் முயலுகின்றன. லிபியக் கிளர்ச்சியாளர்களுக்காக கொண்டுவந்த ஆயுதங்கள் லிபியாவை அண்டிய வட ஆபிரிக்க நாடான மாலியில் இராணுவச் சதி மூலம் ஆட்சியை மாற்றப் பயன்படுகிறது.

எகிப்தில் முபாரக் போனாலும் அமெரிக்க நலன்களுக்குப் பாதகமில்லாமற் கவனிக்க

2011இன் தொடக்கத்தில் அமெரிக்காவின் மிக முக்கிய “கூட்டாளிகள்” மூவர் நெருக்கடிக்குட்பட்டனர். முதலாமவர் துனிசியாவின் பென் அலி: துனிசிய மக்கள் எழுச்சியால் அவர் நாட்டைவிட்டு ஓடநேர்ந்தது. துனிசிய எழுச்சியலை எகிப்திற் தொற்றியபோது முபாரக் பதவி விலக நேர்ந்தது. தனது கூட்டாளியைக் காப்பதை விட எகிப்தில் தனது நலன்களை தொடர்ந்து நிலைநிறுத்துவது அமெரிக்காவிற்கு மட்டுமன்றி இஸ்ரேலுக்கும் தேவையாகியது. குறிப்பாக, முபாரக் போனாலும் எகிப்தின் கட்டுப்பாடு இராணுவத்திடமே இருந்தது. எனவே அமெரிக்கா முபாரக்கைக் கைகழுவியது. மூன்றாவதாக லெபனானின் சாட் ஹரீரி பாராளுமன்றத்தாற் பதவி விலக்கப்பட்டார்.

இவ்வாறான மக்கள் போராட்டங்களின் வெற்றிகள், வட ஆபிரிக்காவினதும் மத்திய கிழக்கினதும் ஏனைய நாட்டு மக்களுக்குத் தமது உரிமைகட்காகவும் விடுதலைக்காகவும் போராடும் ஊக்கத்தைக் கொடுத்தது. அதனால், மக்கள் போராட்டங்கள், யெமன், பாஹ்ரேன், ஜோர்டன், சவூதி அராபியா ஆகிய நாடுகட்கும் பரவின. அவை, ஈரான், சிரியா, ஹிஸ்புல்லா, ஹமாஸ் என்பவற்றைக் கொண்ட ஒரு அமெரிக்க எதிர்ப்பு இணைவுக்குப் (axis of resistance) வலுவான ஒரு அரசியற்தளத்தை வழங்கின. வலுச் சண்டைக்கான இணைவாக (axis of aggression) உள்ள அமெரிக்காவும் மேற்குலகும் அதை ஒரு பெரும் ஆபத்தாகக் உணர்ந்து மக்கள் எழுச்சிகட்கெதிரான எதிர்ப்புரட்சிச் செயற்பாடுகளைத் தொடங்கின. அதன் விளைவுகளையே நாம் இன்று காணுகிறோம்.

மத்திய கிழக்கில் ஆட்சி மாற்றத்துக்காகப் பொதுத்தளத்தில் போராடிய, போராடுகின்ற குழுக்கட்கிடையிலான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. குறிப்பாக இஸ்லாமிய மதவாத, புரட்சிகர சக்திகளிடையே வேறுபாடுகள் சமூக ஏற்றத் தாழ்வுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதோடு இஸ்லாமிய மதவாத சக்திகளின் நோக்கங்களையும் கேள்விக்குட்படுத்துகின்றன. மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் மில்லியன் கணக்கானவர்களைப் போராடுமாறு வீதிக்கு இழுத்துவந்த வறுமை, வேலையின்மை, சமத்துவமின்மை, ஜனநாயக உரிமையின்மை போன்ற சமூக, அரசியற் பிரச்சினைகள் தொடர்கின்றன. குறிப்பாக அமெரிக்காவிற்கும் அதன் கூட்டாளிகட்கும் எதிரான அலை இன்று தவிர்க்கவியலாது அரபுலகில் எழுகிறது. அண்மைய நிகழ்வுகள் அதை வெளிப்படையாக்கியுள்ளன.

அரபு வசந்தம் தங்களுக்கு எதையும் வழங்கவில்லை என அரபு மக்கள் உணர்கிறார்கள். எனவே அவர்கள் தொடர்ந்தும் போராடுகிறார்கள். அமெ ரிக்காவும் அதன் கூட்டாளிகளும் மக்கள் எதிர்ப்பைச் சமாளிக்க மீண்டும் தலைகளை மாற்றத் தயங்கா. மக்கள் தொடர்ந்தும் ஏமாறாதிருக்க, அவதானமாயிருத்தல் முக்கியமானது. ஏனெனில் அமெரிக்காவிற்கோ அதன் கூட்டாளிகளுக்கோ தங்கள் வேலையைச் செய்ய யாரேனும் இருந்தாற் சரி. இன்னார்தான் இருக்கவேண்டும் என்றில்லை. இன்று எகிப்தில் நடப்பது அதற்கான சான்று.

• • •

**இன்று ஸ்னோடென் மிக முக்கியமான செய்தியொன்றை அமெரிக்க மக்களுக்கும் உலகில் உள்ள மக்களுக்கும் விடுத்துள்ளார். நாம் எமது படுக்கையறைகள் உளவு பார்க்கப்படுவதை அனுமதிக்கப்போகிறோமா என்பது தான் அச்செய்தி.**

# படுக்கையறையையும் உளவு பார்க்கும் பரதேசிகள்

உலகெங்கும் ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் வாய் கிழியப் பேசும் அமெரிக்காவின் யோக்கியதை மீண்டுமொருமுறை சந்தி சிரிக்கிறது. வெட்கங்கெட்ட அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு இது புதிதல்ல என்பதால் சந்திக்குக் கொண்டுவந்தவரைத் தண்டிக்கத் துடிக்கிறது. அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு நிறுவன ஒப்பந்தச் சேவையாளர் எட்வட் ஸ்னோடென், அமெரிக்க அரசு எவ்வாறு அமெரிக்கர்களையும் உலக மக்களையும் இரகசியமாக வேவு பார்க்கிறது எனபதையும் அதில் தனது பணியையும் விவரமாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உலகளாவிய ஒற்றுத் திட்டங்களைத் தைரியமாக அம்பலப்படுத்திய ஸ்னோடென் அமெரிக்கர்கள் தெரிவுசெய்த அரசாங்கம் அவர்களை என்ன செய்கிறது எனத் தெரிவிக்கும் உந்துதலால் தான் செயற்பட்டதாக கூறுகிறார். “இன்று எங்கள் படுக்கையறை வரை அனைத்தும் வேவு பார்க்கப்படுகின்றன. இரகசியம் என்றொன்றே இல்லை. இத்தகைய செயல்களைச் செய்யும் ஒரு சமூகத்தில் நான் வாழ விரும்பவில்லை. நான் செய்வது, பேசுவது அனைத்தும் பதிவாகும் ஒரு உலகில் நான் வாழ விரும்பவில்லை” என்றார். அமெரிக்க மக்களுக்குச் செய்யும் கடமையாகவே தான் இதைக் கருதுவதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். அவரது துணிவும் கொள்கைப்பிடிப்பும் மெச்சத்தக்கன. ஓபாமாவின் அமெரிக்க அரசு இவரை “தேசத் துரோகி” என்று முத்திரை குத்தி அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கிறது. இப்போது அவர் ரஷ்யாவில் தற்காலிக அரசியல் தஞ்சம் பெற்றுள்ளார். அவரைத் திருப்பி அனுப்புமாறு ரஷ்யாவை மிரட்டும்போது அமெரிக்காவின் மனித உரிமை முகத்தின் கோரம் தெரிகிறது.

**“இன்று எங்கள் படுக்கையறை வரை அனைத்தும் வேவு பார்க்கப்படுகின்றன. இரகசியம் என்றொன்றே இல்லை. இத்தகைய செயல்களைச் செய்யும் ஒரு சமூகத்தில் நான் வாழ விரும்பவில்லை.”**

இவை கண்காணிப்பு அரசியலின் சில முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன. அரசாங்கங்கள், நாட்டின் பாதுகாப்பிற்குக் கண்காணிப்புத் தவிர்க்கவியலாதது என வாதித்து அதை நியாயப்படுத்துகின்றன. ஆனால் தனிமனித உரிமைகளை மனிதர் விட்டுக்கொடுக்கும் போது தமது அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்தற்கான முதற்படியை எடுத்து வைக்கின்றனர் என்பதே உண்மை.



இன்று ஸ்னோடென் மிக முக்கியமான சவாலொன்றை அமெரிக்க மக்களுக்கும் உலகில் உள்ள மக்களுக்கும் விடுத்துள்ளார். நாம் எமது படுக்கையறைகளை உளவு பார்ப்பதை அனுமதிக்கப் போகிறோமா என்பது தான் அச்சவால். தேசப் பாதுகாப்பின் பேரால் அதை அனுமதிப்பது எம் எதிர்கால சந்ததியரையும் என்றென்றைக்கும் பாதிக்கும். இவ்வாறான செயல்கள் ஜனநாயகத்தின் பெயரால் .்.பாசிசத்தை செயற்படுத்தும் வேலைகளன்றி வேறில்லை.

• • •

# முன்னாள் இடதுசாரியின் கவனப் பிசகும் கருத்துப் பிறழ்வும்

**[நெல்லிமரப் பள்ளிக்கூடம், நந்தினி சேவியர், S.கொடகே சகோதரர்கள், கொழும்பு 10, ப.104]**

நந்தினி சேவியருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு இடதுசாரிகளின் கவனிப்பைப் பெறவில்லை என்று ஒரு சஞ்சிகையில் வெளிவந்த திறனாய்வுக் குறிப்பு வருந்தியிருந்தது. அதைவிடச் சிறப்பான எத்தனையோ நல்ல படைப்புக்கள் எல்லாம் எவருடைய கவனிப்பையும் பெறாத ஒரு சூழலில் 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' எவரது கவனிப்பையும் பெறாமைக்குச் சிறப்பான காரணம் எதுவும் தேவையில்லை. என்றாலும் ஒரு முன்னாள் இடதுசாரிப் படைப்பாளியாகவும் தொழிலாளி வர்க்க நிலைப்பாடினின்று சில நல்ல ஆக்கங்களைப் படைத்தவரெனவும் அறியப்பட்ட நந்தினி சேவியரின் இத் தொகுப்பைப் பற்றி நான் பேச வேண்டிய காரணம் வருந்தத்தக்க விதமாக அதன் இலக்கியத்தரமோ அதன் அரசியற் பெறுமதியோ அல்ல.

தொகுப்பிலுள்ள எட்டுக் கதைகளில் வலுவான கதையம்சம் கொண்டது இரண்டே பக்க நீளக் கதையான 'மனிதம்'. ஒரு வேலைக்காரச் சிறுவனின் அப்பாவித்தனமான மனிதாபிமானம் நுண்ணியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 'மேய்ப்பன்' என்ற கதை, ஒரு கோவிலின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த சங்கிலித்தம்பி, கிறகோரி விதவையான தனது மருமகளுக்கு அவள் விரும்பிய 'இந்து' ஒருவனை மணமுடித்துக் கொடுத்ததால் அவரும் கோவிலும் ஒரு வருட காலமாகப் புறக்கணிக்கப்பட்டதை விவரிக்கிறது. கோவிற் பராமரிப்புக்குப் பணம் தேவை என்பதால் தனது முதுமையையும் பொருட்படுத்தாது கடலுக்குப் போன கிறகோரி திரும்பவில்லை. புறக்கணிக்கப்பட்ட கோவில் இனிச் சிதைந்து அழியும் என்ற கருத்துப்படும் ஒரு கேள்வியுடன் முடிவுக்கு வருகிறது. கிறகோரி மீதான பகைமையால் மட்டுமே கோவில் புறக்கணிக்கப்பட்டது என்றால் இனிக் கோவிலுக்குப் பொறுப்பேற்க எவரும் வரமாட்டார்களா என்ற எதிர்க் கேள்வி மனதில் எழுந்தது.

தனது குடும்பம் முழுதும் அழிந்தும் மன உறுதி தளராத ஒரு முதியவரை மகனின் இழப்பால் மனம் நொருங்கிய இன்னொரு முதியவருடன் ஒப்பிடுகிற 'ஒற்றைத் தென்னை' 'தம் தோல்விகளால் விரக்தியுறுபவர்களுமான இளம் சந்ததியினருக்கு ஒரு உதாரணம் காட்டக்கூடிய மனவலிமை மிக்க சலியாத உழைப்பாளியான நேர்மைத் தொழிலாளி வர்க்க வாரிசு' என்ற சந்தியாக் கிழவரைப் பற்றிய சான்றுப் பிரகடனத்தை நிலை நிறுத்த எழுதப்பட்ட இக்கதையில், கதையம்சம் பலவீனமானது என்பது போக சந்தியாவின் வர்க்க நிலைப்பாடு கதாசிரியரின் பிரகடனகளிற் கூறப்படுமளவுக்குக் கதையின் நிகழ்வுகளூடு புலப்படவில்லை.

'கடலோரத்துக் குடிசைகள்' ஒரு பாதிரியாருக்கும் அவர் பல வருடங்கள் கழித்துச் சந்திக்கும் கம்யூனிஸ்ற்றான தம்பியாருக்குமிடையிலான முரண்பாட்டை வெளிப்படுத்துவது. ஓரளவு சிறப்பாக நகர்த்தப்பட்டுள்ள இக்கதையில் வரும் விவாதத்தின் உச்சநிலையில் மதம் அபின் என்று உணர்ந்ததால் கடவுள் இல்லை என்று முடிவு செய்ததாக அந்தக் கம்யூனிஸ்ட் சொல்வதாக கூறப்பட்டது. 'மதம் மக்களின் அபின்' என்ற மாக்ஸின் கூற்றுக்கு வழங்கப்பட்டு வந்த வறட்டு வியாக்கியானத்தை கதாசிரியரும் ஏற்றுள்ளதையே உணர்த்துகிறது. இருவருக்குமிடையிலான உரையாடல் கதையை மிகவும் பலவீனப்படுத்துகிறது.

'தவனம்' 1983 வன்முறையின் போது தமது பணிமைனக்குள் சிக்குண்டிருந்த சிலரது அனுபவம். 'எதிர்வு' போர்ச் சூழலில் ஒரு சாவீட்டை நடத்துகிற சூழ்நிலை பற்றியது. 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' சாதியத்தின் விளைவான ஒரு நிகழ்வால் ஒரு முழுக் கிராமமும் ஒரு பாடசாலையைப் பகிஷ்கரித்த கதை. கதை இறுக்கமாகப் பின்னப்படாமையும் குழப்பமான வாக்கியங்களும் அதன் பாரிய பலவீனங்கள்.

சுயசரிதை ஒன்றை வாழிடங்களிற் சந்தித்த மரங்களுடன் தொடர்படுத்தி எழுதும் ஒரு முயற்சி 'விருட்சம்'. கதையில் வருகிற மரங்களைப் போலக் கதையில் கூறப்படும நிகழ்வுகளும் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்து நிற்கின்றன. அதன் விளைவாகக் கதை உருப்படியாக என்ன சொல்லுகிறது என்று கூற இயலாதுள்ளது.

கதாசிரியருக்கு இடதுசாரி, மாக்சிய அடையாளங்கள் வழங்கப்பட்டுள்ளதால் அவை அவருடைய கதைகளில் எவ்வளவு தூரம் வெளிப்படுகின்றன என்பது கவனிப்புக்குரியது. 1970, 71, 75ம் ஆண்டுக் காலத்தில் வந்த கதைகளில் தாம் காணுகிற படைப்பாளியையும் நீண்ட இடைவெளிக்குப் பின் 1987இலும், குறிப்பாகப் பின்பு 2001 முதல் 2004 வரையிலும் காணுகிற படைப்பாளியையும், எழுத்து நடையை விட்டால், ஒரே ஆளாகக் கருதுவது கடினம். இடதுசாரி அடையாளம் இல்லாமை மட்டுமன்றித் தனிமனிதனின் மன உளைச்சல்களையும் தனிமனித இருப்பை வலியுறுத்தும் தன்மையும் மிகுதியாகத் தெரிகின்றன.

வாக்கிய அமைப்புக்களில் நூலாசிரியரின் பலவீனங்கள் ஏறத்தாழ ஒவ்வொரு கதையிலும் தென்படுகின்றன. சில உதாரணங்கள் போதுமென நினைக்கிறேன்.

"கடற்கரைப் பிராந்தியத்தில் விரிந்து இருக்கும் கடற்கரையின் எதிர்ப்புறத்தில்....." (ப.16) இந்த வாக்கியத்தின் முதற் பகுதி கடலோரம் என்ற எளிய பதத்தைத் தவிர்த்து அமைத்த சொற்றொடர் காரணமாக கொஞ்சம் அபத்தமாக உள்ளது. அதுபோக, கடற்கரையின் எதிர்ப்புறத்தில் நிற்கிற கட்டிடம் எங்கே நிற்கும் என்ற கேள்வி மனதில் எழுகிறது.

"வயது சுமார் அறுபதுக்கு மேல் இருக்கலாம்" (ப.17) வயது அறுபதுக்கு மேல் என்றால் விளங்கும். வயது சுமார் அறுபது என்றாலும் விளங்கும். சுமார் அறுபதுக்கு மேல்?? "முன்பே பல பிரச்சனைகளால் கோவிலுக்கு வராமல் இருந்தவர்கள்.... வருவதை நிறுத்திக் கொண்டார்கள்" (ப.19) வராமல் இருந்தவர்கள் எப்படி வருவதை நிறுத்த முடியும்?

"காலையில் எட்வேட்டின் வீட்டினுள் அவர் புகுந்த போது ஒரு பரவசம் அவருள் பொங்கியது" (ப.33) இவ்வாக்கியம், அவர் படலையில் நின்று வீட்டைப் பார்க்கிற நேரத்திற்குரியது.

"எவ்வளவு வளர்ந்திட்டான். ஒரு இருபத்தெட்டு வயதெண்டாலும் இருக்கும்" (ப.36) இது, தன்னுடைய சொந்தத் தம்பியின் தோற்றத்தை வைத்தே வயதை மதிப்பிடும் தமயனின் கூற்று.

சின்னானின் அண்ணன் இறந்த பின்பு "பல நாட்கள் தாமரைக் குளத்தடிக்குப் போகாமலிருந்தது இவனுக்கு நினைவிலிருந்தது" (ப.44) ...... "செத்த பிறகு தாமரைக் குளத்துப் பாதையை மறந்தமையும் இவனுக்கு நினைவிலிருந்தது" (ப.45) இதில் எது உண்மை? பலநாட்கள் போகாததா, பாதையை மறந்தே போனதா?

"மூன்றாம் மாடியின்..... கம்பிக் கிராதியில் நின்று தொலைதூரம் பார்த்தான்". (ப.47) அவன் கலைக்கூத்தாடியல்ல!



நந்தினி சேவியர் நெல்லிமரப் பள்ளிக்கூடம்

ஒரு மலையாளியின் பேச்சு இது, "ஞான் இப்போது கேள்வி கேட்கும். நீங்கள் சரியாக சொல்லாவிட்டால் ஞான் உங்களுக்கு அடிக்கும்" (ப. 74). நான் என்பதை "ஞான்" என்பவர் நீங்கள் என்பதை "ஞீங்கள்" என்றுதான் சொல்லுவார். இது ஞாபகப் பிசகா அல்லது கோளாறான புனைவா என நிச்சயமில்லை.

"நாவல் மரங்கள் சூழப்பட்ட வேதக் கோவில் கிராமம்" (ப.82)

"வேப்ப மரங்கள் சூழப்பட்ட" (ப.82)

"மின்சாரம் தாக்கி மரணப்பட்டபோது..." (ப.82)

இவ்வாறான குறைபாடான வாக்கியங்களையே நுஃமான் 1993இல் தனது விமர்சனத்தில் முன்வைத்தார். கதைகளைப் பற்றிய நுஃமானின் மதிப்பீட்டுடன் யாரும் முரண்படலாம். அபத்தமான வாக்கியத்தை அபத்தம் என்று ஏற்க இயலாமல், ஏன் இப்படி விளங்கிக் கொள்ள இயலாது? ஏன் அப்படி விளங்கிக் கொள்ள இயலாது? என்று விதண்டாவாதமாக விமர்சகர் மீது சீறுவது ஒரு நல்ல படைப்பாளிக்கு அழகல்ல. அதைத்தான் நந்தினி சேவியர் அன்று செய்தார். அது போலத்தான் 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைகள் சிலவற்றின் சொற் குழறுபடிகள் சிவசேகரத்தால் சுட்டிக்காட்டப்பட்டபோது மு.பொன்னம்பலமும், உ.சேரனும் தமது எதிர்வினைகளிற் செய்தார்கள்.

இவற்றுக்கும் அப்பால், ஏராளமான எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஏனோ "முத்துவும்... பெண்டிலும்.... செத்துப் போச்சுதுகளாம்" என்பதிற் போன்று தேவையற்ற பல இடங்களில் மூன்று புள்ளிகள் சொற்களைப் பிரிக்கின்றன. பழைய கால அச்சுக் கோப்பில் புள்ளிகட்குப் பஞ்சம் இருந்திருக்கலாம். கணனியில் அவ்வாறில்லை என்பதால் அவை தாராளமாக இடப்பட்டுள்ளனவோ தெரியவில்லை.

இச் சிறுகதைத் தொகுதி நந்தினி சேவியர் என்ற வளர்ந்து வந்த ஒரு படைப்பாளியின் வளர்ச்சியில் தடைப்பாட்டையும் சமூக நோக்கில் இடதுசாரிச் சிந்தனையிலிருந்து ஒரு விலகலையும் அடையாளப்படுத்துகின்றன. அவர் நன்றி தெரிவித்தோரின் பட்டியல் அதை மேலும் உறுதி செய்கிறது.

இந்நூலில் நூலாசிரியர் பற்றி நால்வரது மதிப்புரைகள் உள்ளன. ஒன்று 'தலித்' இதழில் 2003இல் ரவிக்குமார் எழுதியது. அடுத்து 'மல்லிகை'யில் 2007இல் செ.யோகராசா எழுதியது. நூலின் முடிவில் வரும் இரண்டில் முதலாவது 'ஞானம்' இதழில் செல்லத்துரை சுதர்சன் 2009இல் எழுதியது. மற்றது இனியொரு (inioru.com) இணையத்தளத்தில் 2010இல் லெனின் மதிவானம் பதிவாக்கியது.

இந்த நால்வரிடமும் இருந்து வந்துள்ள மாக்சிச விரோத வன்மம் பலரும் அறிந்ததே. அது ஒரே நிலைப்பாட்டிலிருந்து எழுவதல்ல என்றாலும், ஒரே விதமாக மாக்சிச லெனினிசக் கட்சிகளையும் நேர்மையான இடதுசாரிகளையும் தாக்குவன அல்ல என்றாலும், அந்த வன்மம் வரலாற்றுத் திரிப்பாகவோ இருட்டடிப்பாகவோ தனிப்பட்ட தாக்குதலாகவோ வெளிப்படுவது கவனத்திற்குரியது. இவர்களுடைய வக்கிரமான கருத்துக்களை விரிவாக விமர்சிப்பதை இடமின்மை காரணமாக மட்டுமன்றி அவற்றின் பெறுமதியின்மை காரணமாகவும் தவிர்க்கின்றேன். எனினும் அவர்கள் தங்களை வெளிக்காட்டியுள்ள விதத்தை மட்டும் இங்கு சாடையாகச் சுட்டிக் காட்டுவது தகும்.

யோகராசா தன்னை ஒரு இலக்கிய வரலாற்றாசிரியராகவும் காட்ட முனைபவர். நந்தினி சேவியரின் எழுத்துக்கள் இருட்டடிப்புக்குள்ளானதாகக் கூறும் அவர், தேசிய கலை இலக்கியப் பேரவையில் 'அவ்வப்போது தொடர்புடையவராக' இல்லாது, தீவிர செயற்பாட்டாளராக இருந்ததைப் பற்றியும் அவரது முதலாவது சிறுகதை நூலைத் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிட்டதையும் கூறாமல் தவிர்க்கிறார்.

ரவிக்குமார் என்கிற 'காலச்சுவடு' அக்கிரகார தலித்தியவாதிக்கு "கைலாசபதி, சிவத்தம்பி போன்ற மார்க்சிய விமர்சகர்களின் தொடர்போ முற்போக்கு அணியினரின் தொடர்போ இன்றி சுயமான தேடலில்" நந்தினி சேவியர் இலக்கியத்தைப் பயின்றமை முக்கியமாகத் தெரிகிறது. இதன் சரி பிழைகள் ஒருபுறமிருக்க நூலாசிரியர் தனது நூலில் இந்தப் பிதற்றலுக்கு முதன்மை வழங்கியுள்ளமை எதைக் குறிக்கிறது?

இடதுசாரிகளைத் தாக்கி எழுதுகிற எந்த உதிரியும் சிலருக்கு 'நடுநிலையாளர்' தான். அந்த வகையிலேயே செல்லத்துரை சுதர்சனுக்கு நந்தினி சேவியர் நடுநிலையாளராகிறார். 2010 இல் வெளியான 'தேடல்'(கனடா) சிறப்பிதழில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியையும் அதனுடன் தொடர்புடைய சிலரையும் ஆதாரமற்றுத் தூற்றியுள்ள நந்தினி சேவியருக்கு, இவர் போன்றோர் நடுநிலையாளராகத் தெரிவதில் வியப்பில்லை. நந்தினி சேவியரின் சிறுகதைகளுக்கு நுஃமானின் நிதானமான விமர்சனத்தை 'காரசாரமானது' என்று எழுதியுள்ளதிலிருந்தே சுதர்சனின் 'நடுநிலை' தெளிவாகிறது.

லெனின் மதிவானம் நீண்டகாலமாகவே தேசிய கலை இலக்கியப் பேரவையையும், புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியையும் நிந்தித்துப் பொய்களையும் திரிப்புகளையும் வழங்கி வருபவர். 20 ஆண்டுகளுக்கு முன்னமே தந்தினி சேவியரின் சிறுகதைகளையும் கட்டுரைகளையும் வாசித்திருப்பதாகச் சொல்லும் அவரது கட்டுரையில் நந்தினி சேவியரின் முதலாவது தொகுப்பில் உள்ள கதைகளை நுனிப்புல் மேய்கிற தோரணையில் 'விமர்சித்து' வைத்துள்ளார். இந்த அழகில் 'குறுக்கு வழித் திறனாய்வு முறையையும்' 'ஆழ்ந்த தேடலின்மையையும்' சாடியிருக்கிறார். அதுபோக, 'நிலப பிரபுத்துவத்தின் உண்மை முகம்' எப்படியிருக்கிறது என்பதை, "அதன் கொடூரத்தை எடுத்துக் கூறுவதற்காகத் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவமே நாவலாகும்" என்று ஒரு கண்டுபிடிப்பையும் உதிர்த்திருக்கிறார். "இரட்டைத் தேசியத்தை" என்றாவது அவர் விளக்குகிற போது இதையுஞ் சேர்த்து விளக்குவாராக!

நந்தினி சேவியர் என்கிற ஒரு முற்போக்குப் படைப்பாளியின் வர்க்க நிலைப்பாட்டின் சிதைவை அவரது பிற்காலக் கதைகளும் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களும் இந்நூலின் மூலம் புலப்படுத்துகின்றன.

**திருமுருகன்**



# ஒரு முழுநிலா இரவில்

புத்த பிரானே
நான் எனது மார்க்கத்தின் வழி நடப்பவன்
நான் சிலைகளை வழிபடுவோனல்ல
எனினும்
உமது தியான நிலையின் கம்பீரம்
எப்போதும் என்னைக் கவர்ந்துள்ளது
உமது முகத்தின் அமைதி
என்னை வசப்படுத்தியுள்ளது
நிலாக் காயும் இரவுகளில்
விகாரைகளின் வெண்ணிற ரம்மியம்
என் நெஞ்சை நிறைத்துள்ளது
அன்பும் அகிம்சையும் பற்றிய உமது
போதனைகள்
என்னை ஆட்கொண்டுள்ளன
வெசாக் போசன் பண்டிகை நாட்கள்
எனக்குக் களிப்பூட்டியுள்ளன.

இன்று
உமது உருவப் படங்கள்
காணுந் திசைதோறும் காட்சியாகின்றன
உமது உருவச் சிற்பங்கள்
நின்றவாறும் அமர்ந்தவாறும்
எங்கெங்கெல்லாமோ எழுகின்றன
விகாரைகளும் உயர எழுகின்றன
சிலர் இந்த நாடு உமது மண்
என்கிறார்கள்
உமது மண் எனின் இந்த நாடு
அமைதி வழியில் நடந்தாக வேண்டும்.
எனினும்
உமது பெயரால்
எனது நம்பிக்கைகள் நிந்திக்கப்படுகின்றன
எனது சமூகத்தினர் இழிவுக்குட்படுகின்றனர்
அவர்களுடைய பிழைப்புக்குத் தடைகள்
எழுகின்றன
உமது பெயரைத் தியானிக்கும்
காவியுடைத் தேரர்களின் வழிநடத்தலில்
நாம் தொழும் பள்ளிவாசல்கள்
இடிபடுகின்றன.

இப்போது
ஒவ்வொரு காவியுடையும்
என்னைக் கலக்குகிறது
ஒவ்வொரு முழுமதி நாளும்
என்னை அழவைக்கிறது
உமது அமைதியான தோற்றம்
என்னை அச்சுறுத்துகிறது
உமது மௌனம்
என்னை நிலைகுலைக்கிறது.
...


எல்லா மதங்களும் அன்பையே
உரைப்பதாகவும்
வெறுப்பை மறுப்பதாகவும் பலர் கூறுவதை
உலகப் பரப்பில் வைத்து அலசி
ஆராய்கிறேன்.

ஒவ்வொரு விகாரையும் பன்சாலையும்
மட்டுமன்றி
ஒவ்வொரு கோவிலும் தேவாலயமும்
மட்டுமன்றி
ஒவ்வொரு பள்ளிவாசலுங் கூட
என்னைக்
கலக்கி அழவைத்து அச்சுறுத்தி
நிலைகுலைத்து
நடுநடுங்க வைக்கிறது.

• • •

**புவனம்**

WEB: www.ndpsl.org
Email: puthiyaneethi2012@gmail.com
Registered as a Newspaper in Sri Lanka




ஒபாமாவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சிரியா மீதான ஆக்கிரமிப்பு போரிற்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டனிலும் அமெரிக்காவிலும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள்




# சிரிய இரசாயன குண்டுத் தாக்குதல்

சிரியாவில் தொடரும் அமெரிக்க மேற்குலக ஆதரவுக் கிளர்ச்சியின் தொடர்ச்சியாக டமாஸ்கஸ் நகர் மீது ஓகஸ்ட் 21 அன்று இரசாயன குண்டுத்*(Nerve Gas)* தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் பச்சிளம் குழந்தைகள் பெண்கள் உட்பட சுமார் 1300ற்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். இத்தாக்குலுக்கு அமெரிக்க மேற்குலக ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள், சிரிய அரசப்படைகளே இத்தாக்குதலுக்குப் பொறுப்பு எனக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அல்-அசாத் தலைமையிலான சிரிய அரசு இக்குற்றச்சாட்டை மறுத்து வருகின்றது. யார் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்பதற்கு போதிய ஆதாரம் அற்ற நிலையில், இத்தாக்குதலுக்கு சர்வதேச சமூகம் உடனடியாக பதிலடிக் கொடுக்க வேண்டும் என்றுக் கூறும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அதிபர் ஒபாமா சிரியா மீது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ தாக்குதலுக்கு அமெரிக்கா தயாராகி வருவதாக கூறியுள்ளார். மேலும் தனது வல்லாதிக்க கூட்டாளிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

சிரியா மீதான ஆக்கிரமிப்பு திட்டத்தில் இணைந்துக்கொள்ள பிரிட்டன் பிரதமர் ஆர்வத்துடன் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணை 16 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளது. அதேவேளை, பிரான்ஸ் அதிபர் ஹோலன்டே, பிரிட்டன் பாராளுமன்றத்தின் முடிவுகள் பிரான்ஸின் தீர்மானத்தைப் பாதிக்காது எனக்கூறி அமெரிக்காவுடன் இணைந்து சிரியாவைத் தாக்க உடண்பட்டுள்ளார். ஆனால் பிரான்ஸில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்று 64 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் சிரியா மீதான பிரான்ஸின் தாக்குதல் தீர்மானத்தை எதிர்துள்ளனர்.

சிரியாவில் கடந்த இரண்டு வருடங்களாக தொடரும் அமெரிக்க மேற்குலக ஆதரவுடனான ஆட்சிக் கவிழ்ப்பு கலகம் பற்றி 2012ல் கருத்து வெளியிட்ட ஒபாமா, சிரிய அரசு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பமே தாம் சிரியா மீது தாக்குதல் நடத்துவதற்கான எல்லைக்கோடு எனக் கூறியிருந்தார். இரசாயன தாக்குதல் தொடர்பில் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் கலோவே, இஸ்ரேல் அல்-கைதாவுக்கு இரசாயன ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாகவும் அவற்றைக் கிளர்ச்சியாளர்கள் உலகின் அனுதாபத்தை தம் பக்கம் திருப்ப பயன்படுத்தியிருக்கிறார்கள், ஐ.நா. கண்கானிப்புக் குழு சிரியா செல்லவிருந்த நேரத்தில் சிரிய அரசு இவ்வாறானதொரு தாக்குதலை நடத்தியிருக்க வாய்ப்பில்லை எனச் சுட்டிக் காட்டுகின்றார். மேலும் தாக்குதல் நடைபெறுவதற்கு ஒரு நாளிற்கு முன்னதாகவே கட்டாரின் அல்-ஜசீரா தொலைக் காட்சியும் ரொய்டர் செய்திச் சேவையும் இப்படுகொலை தொடர்பில் செய்திகளை வெளியிட்டுள்ளமை இது அமெரிக்க மேற்குலகின் வழிகாட்டலில் அல்-கைதாவுடன் கூட்டுச்சேர்ந்து செயற்படும் கிளர்ச்சியாளர்களின் சதிச் செயல்தான் என்பதனை வலுப்படுத்துகின்றது என வும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அமெரிக்கா, ஈராக் இரசாயன ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறியே அதன் மீது ஆக்கிரமிப்புப் போரை கட்டவிழ்து விட்டது. ஆனால் இன்று வரை ஈராக்கில் இரசாயன ஆயுதம் எதனையும் அது கண்டெடுக்கவில்லை. இன்று, சிரிய இரசாயன குண்டு தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க ஐ.நா. பாதுகாப்பு சபையின் அங்கீகாரமோ அமெரிக்க காங்கிரஸின் அனுமதியோ தனக்குத் தேவையில்லை என ஓபாமாவும் பென்டகனும் கூறிவருகின்றர். 2012ல் ஒபாமா கூறிய, இரசாயன குண்டுத் தாக்குதல் வரை மட்டுமே பொறுமை என்ற எல்லைக் கோடு தாண்டப்பட்டுள்ளது எனக் காட்டப்படுகிறது. ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பால் பல லட்சம் பேர் பலி கொள்ளப்பட்டது போல், சிரியாவில் இடம் பெற்றுள்ள தாக்குதலைக் காட்டி இன்றோ நாளையோ இடம் பெறக்கூடிய அமெரிக்காவினதும் அதன் கூட்டாளிகளினதும் தாக்குதல்களில் பல ஆயிரம் குழந்தைகள் பெண்கள் உட்பட பொதுமக்கள் கொல்லப்படுவர் என்பதில் ஐயமில்லை. அமெரிக்க பொருளாதார இராணுவ விரிவாக்கம் சிரியாவுடன் நிற்கப்போவதில்லை என்பது நிச்சயமானது.







## உலக கசினோ சூதாட்ட மன்னனுக்கு கோட்டையில் சூதாட்ட மையத்துக்கு காணி

அவுஸ்திரேலியாவின் சூதாட்ட மன்னன் ஜேம்ஸ் பாக்கருக்கு முதலில் திட்டமிட்ட இடத்திலேயே சூதாட்ட நிலையம் கட்டியெழுப்ப நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாக்கர் 35 கோடி அ.டொல் முதலீட்டை டீ.எஸ். விஜயவர்த்தனா மாவத்தையில் முன்புகுறித்த இடத்திலேயே மேற்கொள்வார் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார்.

400 அறைகளுடன் கூடிய உல்லாசவிடுதியில் (சூதாட்ட) விளையாட்டு வசதிகளையும் உள்ளடக்கும். ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்திற்கு முன்புறமாக திரையங்கிற்கு எதிரே உள்ள காணியில் விடுதி அமைக்கப்படவுள்ளது. 36 மாதங்களுக்குள் கட்டிடம் அமைக்கப்படும். கோட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ சம்புத்தாலோக்க விகாரைக்கு அருகில் இச் சூதாட்ட நிலையக் கட்டிடம் அமைக்கப்படுவதற்கு பௌத்தமதக் காவலர்களான மகிந்த சிந்தனை அரசாங்கம் அனுமதி வழங்கி உள்ளது.

உலக சூதாட்ட மன்னன் ஜேம்ஸ் பாக்கரின் இத்திட்டத்தை மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக ஏற்று பாரிய வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. முழுத் திட்டமும் பத்து வருடங்களுக்குள் பூர்த்தியாகும் என சொல்லப்படுகிறது. கம்பனிகளுக்கான வருமானவரி இத்திட்டத்திற்கு விலக்களிக்கப்படும். உல்லாச விடுதித் துறைக்குரிய 50 வீத வரிக்குப் பதிலாக வெறும் 06 வீத வரியே அறவிடப்படும். இந்த வரிவீதம் 12 வருடங்களுக்கு அமுலில் இருக்கும். பங்கு லாபத்திற்குரிய வரி பதினொரு வருடங்களுக்கு அறவிடப்படமாட்டாது. திட்டம் சம்பந்தப்பட்ட பொருள்களுக்கு சுங்கத் தீர்வை, பெறுமதி சேர்வரி, துறைமுக, விமான நிலையக் கட்டணமும் வேறு பல தீர்வைகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

இப்பெரும் சூதாட்ட நிலையத்தில் பெறும் சூதாட்டம் மட்டுமன்றி சகலவிதமான இழி செயல்களும் இடம்பெறும். வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் தமது பணத்தை இங்கு செலவு செய்வார்கள். பிரதானமாக விபச்சாரம் இடம்பெறும். அதனாலேயே 2020ம் ஆண்டின் போது இலங்கையின் உல்லாசப் பிரயாணிகளின் வருகை 2.5 மில்லியன் அதாவது 25 லட்சம் பேராக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது கௌதம புத்தர் வந்து போன நாடெனக் கூறிச் சாதாரண சிங்கள மக்களை பௌத்த நாகரிக நாடெனக் கூறி ஏமாற்றியபடி உலகின் முதல்தர சூதாட்ட மன்னனுக்கு செங்கம்பளம் விரித்து வரவேற்கப்பட்டுள்ளது. பௌத்த விகாரையும் சூதாட்ட நிலையமும் அருகருகே தான் இருக்கப் போகின்றன. வாழ்க பௌத்தமும் சூதாட்டமும். பௌத்த சிங்கள மக்கள் தான் பரிதாபத்திற்குரியவர்கள்.

1>> வேண்டாத விருந்தாளியா.....

நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முயலுகின்றனர். அவர்களுக்கு அதன் தேர்தல் அரசியல் பெறுமானம் தெரிகின்ற அளவுக்கு வேறு எதுவும் முக்கியமானதா என்பது ஒரு முக்கிய கேள்வி.

நவநீதம் பிள்ளை ஐ.நா. செயலாளர் நாயகத்தை விடக் கூடிய பொறுப்புடனும் அக்கறையுடனும் நேர்மையுடனும் நடந்துக்கொள்வார் என்பதில் ஐயமில்லை. ஆனால் கவனிப்பிற்குரிய பிரச்சினை அவருடைய அந்தஸ்தோ நம்பகத்தன்மையோ அல்ல. மாறாக அவரையும் ஐ.நா. மனித உரிமைகள் கழகத்தையும் பயன்படுத்தும் மேற்குலக எசமானர்களின் நோக்கம் என்ன என்பதே.

ஐ.நா. மனித உரிமைகள் கழகம் இனி என்ன செய்யும் என்பதைப்பற்றி மேலும் சிலகாலத்தை நாம் வீணாக்கலாம். அதன் மூலம் செய்ய வேண்டிய காரியங்கள் சிதறுண்டு போகலாகாது. மக்கள் அணிதிரண்டு போராட ஊக்குவிப்பதற்கு ஆயத்தம் இன்றி இன்னும் மேற்குலகையும் அதன் ஆதரவையும் நம்புகின்ற போக்கில் இருந்து தமிழ் தரப்புகளும் தலைமைகளும் ஊடகங்களும் விடுபடுமா என்பது பற்றி சிந்திப்பது பயன் தருவதாகும்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்றும் மறுக்கப்பட்டு வருகின்ற மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என்பன சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களுக்கும் மறுக்கப்படுவதை பரந்த நோக்கில் காணுதல் வேண்டும். இத்தகைய சூழலில் அனைத்து மக்களையும் அணிதிரட்டி போராடுவதற்கான அரசியல் கொள்கையும் வேலைத்திட்டமும் உடைய, இன்றைய தேர்தல் அரசியலுக்குப் பதிலான மாற்று அரசியலில் மக்கள் அணிதிரட்டப்பட வேண்டும். அதுவே சகலவிதமான ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான சரியான போராட்டமாக இருக்கும்; அதுவே வெகுஜன போரா

## பொலிஸ் தொடர்ந்தும் இராணுவ மயத்தில்

சட்ட ஆட்சியின் கீழ் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப் பாதுகாத்து மக்களின் அன்றாட அலுவல்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் தருவதே பொலிஸ் துறையின் கடமையும் பொறுப்பும் என்றே கூறப்படுகிறது. இலங்கையில் இத்தகைய பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 147 வருடங்களாகின்றன. ஆனால் இன்று அதனது நிலை என்ன என்ற கேள்வி பல மட்டங்களிலும் எழுப்பப்பட்டு வருகின்றது. பொலிஸ் துறையினரின் எண்ணிக்கை 88423 பேர் எனவும் நாட்டில் 430 வரையான பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன எனவும் கூறப்படுகிறது. பல்வேறு பிரிவுகளுடனும் ஆயுதபாணிகளையும் விசேட பயிற்சிப் பெற்றவர்களையும் உள்ளடக்கியதாக அது இருந்து வருகிறது. இது பொலிஸ் பற்றிய மேலே கூறப்பட்ட வியாக்கியானத்துக்கு அப்பால் இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இதில் இரண்டு விடயங்கள் கவனத்திற்குரியவை. பொலிஸ் துறை இன்று ஆயதப் படைகளின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. அதனுள் விசேட அதிரடிப்படை பிரிவும் உள்ளடங்குகிறது. இரண்டாவது இன்றைய பொலிஸ் துறை ஆட்சியினரின் நேரடி கட்டுப்பாட்டிலும் ஆணையிலும் இயங்கி வருகிறது. யுத்த காலத்தில் இத்துறை முப்படைகளுடன் இணைக்கப்பட்டு நேரடியாகவே பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இன்றும் அதே நிலை தொடர்கின்றது.

வழமையாக பொலிஸ் துறை உள்நாட்டு அமைச்சின் கீழ் அல்லது நீதி அமைச்சின் கீழ் இருந்து வந்தது. ஆனால் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் அது பாதுகாப்பு அமைசசின் கீழ் கொண்டுவரப்பட்டது. இன்று ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சர். அவரது சகோதரர் கோதாபய ராஜபக்சவே அதன் செயலாளர். எனவே அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் உள்ளவர்களும் அவர்களின் கையாட் களும் பொலிஸ் துறையில் தாம் விரும்பியதை செய்து கொள்ள முடிகின்றது. இதன் மூலம் பொலிஸ் துறையில் அதிகார துஸ்பிரயோகமும் ஊழலும் இலஞ்சமும் முன்னைய ஆட்சிகளையும் விட உச்சத்தில் உள்ளது. மேலும் பொலிஸாரும் அதிரடிப்படையும் மனித உரிமை மீறல்களிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவதும் அம்பலமாகி வருகின்றது.

இவற்றினால் எழுந்த கடும் குற்றச்சாட்டுகளுக்கு கண் கண்துடைப்பு நடவடிக்கையாகவே சட்டம் ஒழுங்கு என்ற புதிய அமைச்சை உருவாக்கி அதன்கீழ் பொலிஸ் துறையை கொண்டுவரும் முடிவை ஜனாதிபதி அறிவித்துள்ளார். அதேவேளை அந்த அமைச்சின் செயலாளராக முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். இது பொலிஸ் துறையை தொடர்ந்தும் இராணுவப் மயத்தில் வைத்திருப்பதையே வெளிப்படுத்துகிறது. எனவே பொலிஸ் துறையை தனி அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இதுவொரு கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

வெளியிடுபவர்-வெ. மகேந்திரன். இல.15/4, மகிந்தாராம வீதி, கல்கிஸ்சை. அச்சிடுபவர்-கொம் பிரின்ட் சிஸ்ரம். HL1/2. டயஸ் பிளேஸ் கொழும்பு-12